# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு.குலாம் முஹம்மது

Volume-15
Issue-11

நவம்பர்-2022 (ரபியுஸானி-1444)

விலை ரூ. 40 /-





தொடர்கள்

- மருத்துவம்
- மகளிர் மன்றம்
- குழந்தை வளர்ப்பு


## ஊபா (UAPA) சட்டம்

## தவறாகப் பயன்படுத்தப்படுகிறது

PUCL ஆய்வு அறிக்கை

இந்தியாவில் முஸ்லிம்களாக வாழ்வது தண்டனைக்குரிய

## குற்றமா?

- பிருந்தா கரத்







துருக்கி - ஈரான்

## ஆயுதங்களின் வெற்றி

ரஷ்யா - உக்ரைன் போர்



விடைதேடும் வினாக்கள்

## கோவை கார் சிலிண்டர் வெடிப்பு

கள ஆய்வு

**முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.**

(5:08)


ஊபா (UAPA) சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது - 4
ஒடிந்து வீழ்ந்த இன்னொரு NIA வழக்கு - 18

விடைதேடும் வினாக்கள்
கோவை கார் சிலிண்டர் வெடிப்பு - 20

உளவுத்துறையின் கோட்டைக்குள்
வெடி பொருட்கள் வந்தது எப்படி? - 24

கோவையில் கலவரத்தில் எனது சாட்சியம் - 26

அன்று : 2006- கோவையில்
போலீஸ் நடத்திய வெடிகுண்டு நாடகம்! - 27

அன்று : 2006 கோவை ஐக்கிய ஜமாஅத்தின்
அழகிய முன்மாதிரி - 33

அதிகாரத்தை கைப்பற்றவே ஆர்.எஸ்.எஸ் பயங்கரவாதம்! - 35

இந்தியாவில் முஸ்லிம்களாக வாழ்வது
தண்டனைக்குரிய குற்றமா? - 38

முன் வேதங்களில் முஹம்மது (ஸல்) பற்றிய
முன்னறிவிப்புகள் - 39

இந்தியாவில் முஸ்லிம்கள் தொடர் - 41
துருக்கி - ஈரான் : ஆயுதங்களின் வெற்றி - 44

பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள்
முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - தொடர் - 46

புராணங்களை வரலாறாக திணிக்கக் கூடாது - 51
மகளிர் மன்றம் - 53
குழந்தை வளர்ப்பு - 54
மருத்துவம் - 55
சிலுவைப் போர் 2.0 - 58
நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் - 61
தலையங்கம் - 64
வட இந்தியாவில் தொடரும் ஜாதிய வன்கொடுமைகள் - 66



# வைகறை வெளிச்சம்

நவம்பர்-2022 ரபியுஸானி-1444

ஆசிரியர்

**மு.குலாம் முஹம்மது,M.A., Journalism & Communication**

துணை ஆசிரியர்

**கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,**

All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only

http:/www.facebook.com/vaigaraivelicham

**தனி இதழ்: ரூ.40/-**
**ஆண்டுச் சந்தா**
**உள் நாடு: ரூ.480/-**
**வெளி நாடு: ரூ.5000/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் **DARUL ISLAM FOUNDATION TRUST** என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room# 07, Mannady,
Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com |
Web: www.darultrust.in




# ஊபா (UAPA) சட்டம்

## தவறாகப் பயன்படுத்தப்படுகிறது

## PUCL ஆய்வு-அறிக்கை

**UAPA வின் கீழ் கைது செய்யப்பட்ட ஆயிரக்கணக்கானோர், ஜாமீனில் வெளிவராமல் சிறையில் வாடுகிறார்கள் என்பதுதான் இன்றும் மறுக்க முடியாத உண்மை. UAPA போன்ற சட்டம் நமது சட்டப் புத்தகங்களில் இருக்க அனுமதிக் கப்படுமா என்பதுதான் நம் முன் உள்ள சட்ட ரீதியான, தார்மீக ரீதியான மற்றும் ஜனநாயக ரீதியான கேள்வி. வேண்டுமென்றே சட்டத்தை வளைத்து மீறும் காவல்துறை அதிகாரிகளின் பொறுப்பு மீறல் மற்றும் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்ததற்காக அவர்கள் மீது வழக்குத் தொடர வேண்டியதன் அவசியம் ஆகியவை கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான கேள்வியாகும். ●**

இந்தியா தன்னுடைய ஒற்றுமை, ஒருமைப் பாடு, பாதுகாப்பு (பொருளாதார பாது காப்பு உட்பட) இறையாண்மை ஆகியவற்றை அச்சுறுத்தும் பயங்கரவாத செயல்கள் என்று கருதும் எந்தவொரு செயலையும் அடக்கவும், கட்டுப்படுத்தவும் மற்றும் எதிர்கொள்ளவும் இந்திய அரசு அதன் பரந்த இராணுவ பலம், ஆயுத பலம் மற்றும் குற்றவியல் சட்டங்களையும் கொண்டுள்ளது.

இந்திய தண்டனைச் சட்டம் (IPC) பிரிவு 121A (இந்தியாவுக்கு எதிராக போர் தொடுத்தல்) மற்றும் பிரிவு 124A (தேச துரோகம்) போன்ற காலனித்துவ கால விதிகளிலிருந்து ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம், 1958 (AFSPA) சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டம் (UAPA), 1967 மற்றும் தேசிய பாதுகாப்பு சட்டம் (NSA) 1980 போன்ற சட்டங்கள் நாடு முழுவதும், தடையற்ற மற்றும் கட்டுப்பாடற்ற, குற்றப்பதிவு செய்யாமல் நீண்ட காலத்திற்கு கைது செய்து சிறையில் அடைப்பது மற்றும் ஜாமீன் போன்ற நடைமுறை உரிமைகளை மறுப்பது போன்ற அதிகாரங்களை அளித்தன.

இதன்மூலம் சாதாரண குற்றவியல் சட்டங் களிலிருந்து வெளியேறுவதை கூட இவர்கள் மேற்கண்ட சட்டங்கள் மூலம் கடுமையாக்கி விட்டனர்.

மத்திய சட்டங்களைத் தவிர, பல தனிப்பட்ட மாநிலங்கள் தங்கள் சொந்த பாதுகாப்புச் சட்டங் களை இயற்றியுள்ளன. அவை ஜம்மு - காஷ்மீர் பொது பாதுகாப்பு சட்டம், 1978 மற்றும் சத்தீஸ்கர் சிறப்பு பொது பாதுகாப்புச் சட்டம், 2005 போன்றவை இன்னும் கடுமையான அதிகாரங் களை வழங்குகின்றன.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைக் கட்டுப் படுத்த மேம்போக்காக மேலும் சில சட்டங்கள் இயற்றப்பட்டன. அது, மகாராஷ்டிரா ஒழுங்க மைக்கப்பட்ட குற்றங்களின் கட்டுப்பாடு சட்டம், 1999 (MCOCA) இது விரைவில் பல்வேறு மாநிலங் களில் பல்வேறு குளோன்களை (நகலிகளை) கண்டது, அவையாவன,

கர்நாடக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களின் கட்டுப்பாடு சட்டம் மற்றும் குஜராத் ஒழுங்க மைக்கப்பட்ட குற்றங்களின் கட்டுப்பாடு சட்டம், 2003 (GUJCOCA)

இந்த சட்டங்கள் அனைத்திலும் உள்ள பொதுவான பரிமாணம் குற்றங்கள் மற்றும் கடுமையான நடைமுறை விதிகளின் தளர்வான வரையறைகளுடன் மாநில காவல் துறைக்கு வழங்கிய பரந்தபட்ட அதிகாரங்களே ஆகும்.

**பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களின் சுருக்கமான வரலாறு**

இன்று இந்தியாவில் உள்ள முதன்மையான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் "சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (UAPA) ஆகும். இருப்பினும் இது 1967-ல் நிறைவேற்றப்பட்ட போது அது முதலில் "சட்டவிரோதமான நடவடிக் கைகளை" அடக்குவதற்கான சட்டமாகவே கருதப்பட்டது. (உதாரணத்திற்கு) தமிழ்நாட்டில் நடந்த இந்தி எதிர்ப்பு போராட்டங்கள் மற்றும் 1960களில் உச்சத்தில் இருந்த தமிழ்நாடு என்ற தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவான போராட்டம் போன்றவைகளில் இந்த சட்டம் அரிதாகவே பயன்படுத்தப்பட்டது.

பஞ்சாபில் காலிஸ்தானி இயக்கத்தின் எழுச்சி மற்றும் நெரிசலான பொது இடங்களில் வெடிகுண்டுகள் வெடிக்கும் பயங்கர சம்பவங்கள் அதிகரித்து வந்ததால், மத்திய அரசு முதலில் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் சட்டத்தை (TAAA) இயற்றியது. இந்த சட்டமானது பயங்கரவாத மற்றும் சீர்குலைக்கும் நடவடிக் கைகள் (தடுப்பு) சட்டம் (TADA) 1987 க்கு வழி வகுத்தது. பரவலான விமர்சனங்கள் மற்றும் ரத்து செய்யக் கோரும் பிரச்சாரங்கள் காரணமாக, 1997ல் தடா சட்டம் அதன் காலாவதிக்குப் பிறகு புதுப்பிக்கப்படவில்லை. அதன் பிறகு மத்திய அரசு பயங்கரவாத தடுப்பு சட்டம் (POTA), 2002-ஐ நிறைவேற்றியது. இது 2004ல் ரத்து செய்யப்பட்டது.

இருப்பினும் பொடாவை ரத்து செய்யும் வாக்குறுதியுடன் 2004ல் பதவிக்கு வந்த காங்கிரஸ் தலைமையிலான ஐ.மு. (UPA) கூட்டணி அரசாங்கம், பயங்கரவாத நடவடிக்கைகளை (மறைக்க) ஏற்கனவே இருக்கும் UAPAவை திருத் தியது. பொடா மற்றும் தடா-வின் மிகக் கடுமை யான விதிகள் சிலவற்றை UAPAவிற்குள் கொண்டு வந்தது. எனவே UAPA முதலில் சட்டவிரோத நடவடிக்கைகளைச் சமாளிப்பதற்கான ஒரு சட்டம் என்று கருதப்பட்டது. பின்னர் பயங்கர வாத எதிர்ப்புச் சட்டமாக ஆது தன் கோர முகத்திற்கு மாறியது..

நவம்பர் 2008ல் மும்பையில் நடந்த பயங் கரவாத தாக்குதலை அடுத்து, 2008ல் UAPAவில் பெரிய அளவில் மாற்றம் கொண்டு வரப்பட்டது. UAPAவில் மாற்றங்கள் மட்டுமல்லாது அதனை மிகவும் கடுமையாக்கியது. மேலும் ஒரு புதிய சட்டம், தேசிய புலனாய்வு முகமை (NIA) சட்டம், 2008 நிறைவேற்றப்பட்டது. இதன்மூலம் பயங்கர வாத குற்றங்களைச் சமாளிக்க ஒரு தனி முழுநேர போலீஸ் படை அமைக்கப்பட்டது. இந்திய அரசாங்கத்தில் உள்துறை அமைச்சகத்தின் (MHA) நேரடி கட்டுப்பாட்டின் கீழ் பரந்துபட்ட அதிகா ரங்களை தேசிய புலனாய்வு முகமை கொண்டி ருந்தது.

**இந்த சட்டங்களை கொடூரமானதாகவும் ஜனநாயகமற்றதாகவும் ஆக்குவது எது?**

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் பற்றிய சிக்கலான பிரச்சனை, "பயங்கரவாத செயல்" என்பதன் மிகவும் தளர்வான வரையறையாகும்.

சட்டம் மற்றும் ஒழுங்கு, பொது ஒழுங்கை சீர்குலைக்கும் அல்லது நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கும் அல்லது ஒரு பிரிவினரின் மனதில் பயங்கரவாதத்தை பரப்பும் நோக்கத்தோடு செயல்படுவது என வரையறுக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டங்கள் பயங்கரவாதம் மற்றும் ஒப்பந்தக் கொலைகள், போன்சி திட்டங்கள் (முதலீட்டு மோசடி திட்டங்கள்), போதைப் பொருள் வர்த்தகம், மிரட்டி பணம் பறித்தல், சைபர் கிரைம், நில அபகரிப்பு மற்றும் மனித கடத்தல் போன்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங் களை கையாள்வதாகக் கூறப்படுகிறது.

எவ்வாராயினும் உண்மையில் போலீசாருக்கு அதீத அதிகாரங்களை வழங்குவதன் மூலம், அரசியல் எதிர்ப்பாளர்களையும், அரசின் கொள்கைகளை கேள்விக் குள்ளாக்குபவர்களை யும், குற்றவாளிகள் ஆக்குவதற்கு அவை பயன் படுத்தப்பட்டன.

மத்திய மற்றும் மாநில சட்டங்கள் ஆகிய இரண்டிலும் உள்ள பொதுவான ஒற்றுமை என்ன வெனில், "காவல்துறை அதிகாரிகளை பொறுப் பேற்கச் செய்யக்கூடிய, அதாவது சட்டத்தைத்



கைது செய்யப்பட்ட மற்றும் தண்டிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கிடப்படும்போது, UAPA வழக்குகளின் தண்டனை விகிதம் பரிதாபமாக 2.8% உள்ளது. இதன் பொருள் என்னவென்றால், 2015 முதல் 2020 வரை கைது செய்யப்பட்ட 8,371 பேரில் 97.2% பேர், (அதாவது 8,136 பேர்) உண்மையில் UAPA நீதிமன்றங்களில் விசாரணைகளின் முடிவில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். இத்தகைய உயர் நிரபராதி விகிதங்கள், பெரும்பாலான வழக்குகள் UAPA இன் கீழ் எந்த வழக்கையும் முதலில் தொடங்குவதற்கு தகுதியற்றவை என்ற உண்மையை மட்டுமே எடுத்துக்காட்டுகிறது.●

தவறாகப் பயன்படுத்தியதற்காக சட்டபூர்வமாக பதிலளிப்பது, கைது செய்யப்பட்டவர்களின் மதிப்புமிக்க அரசியலமைப்பு உரிமைகளை மீறுவது போன்றவற்றிற்கான எந்த ஒரு சட்ட விதியும் இல்லாதது ஆகும்."

"ஆணை பொறுப்பு" (Command Responsibility) என்ற கொள்கையை இந்திய சட்டத்தில் அங்கீகரிக்கத் தவறியதால், நாடு முழுவதும் உள்ள காவல்துறையினர் வேண்டுமென்றே தங்களது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவதற்கும், மக்களை சிறையில் அடைப்பதற்கும் தைரியம் பெற்றுள்ளனர். காவல்துறை மற்றும் அரச அதிகாரத்தின் பலத்தை பயன்படுத்தி, அரசியலமைப்பு ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட கருத்து வேறுபாடுகள் மற்றும் ஜனநாயக ரீதியான அமைதியான போராட்டங்களும் குற்றமாக்கப்பட்டு நசுக்கப்பட்டன.

இந்த துஷ்பிரயோகத்தின் மையத்தில், குற்றவியல் நீதி முறையில் ஒரு அடிப்படை குறைபாடு இருக்கிறது. இது குறித்து மனித உரிமைகள் வழக்கறிஞர், கே.ஜி.கன்னபிரான் கூறுகையில்,

"சட்டம் குற்றத்தை வரையறுக்கும் அதே வேளையில், குற்றவாளிகளை அரசு வரையறுக்கும் என்றார்."

அரசியல் சாசன சட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு (அரசியல் நிர்வாகியாக இருக்கும் அரசு) காவல்துறை மூலம் பாதுகாப்பு அதிகாரத்தைப் பெறுகிறது. காவல்துறையானது, நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், அரசியலமைப்பின்படி அது சுதந்திரமான தொழில் முறை சக்தியாக செயல்படுவதாக கருதப்படுகிறது. அது இந்திய அரசியலமைப்பை செயல்படுத்துவதாகவும், மதிக்கும் விதமாகவும், ஆளும் கட்சியின் விசுவாசிகளாக இருக்கக் கூடாது என்பதாகவும் அரசியலமைப்பு சொல்கிறது.

எவ்வாறாயினும் பொதுவான அனுபவமானது ஆளும் ஸ்தாபனத்தின் எதிர்பாளர்களையும், விமர்சகர்களையும் மௌனமாக்குவதற்கு "அரசு" சட்டத்தை பயன்படுத்துகிறது என்பதும், காவல்துறை பெரும்பாலும் ஆட்சியில் உள்ள ஆளும் கட்சியின் ஒத்துழைப்பாளர்களின் பாத்திரத்தை வகிக்கிறது.

இந்தியாவில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்கள் என்று அழைக்கப்படுபவற்றின் வரலாறு, மன்னிக்கப்படாத ஒரு சோகத்தின் கதை ஆகும். ஆயிரக்கணக்கான சாதாரண மக்கள் எதேச்சதிகாரமான முறையில் கைது செய்யப்பட்டு நீண்ட ஆண்டுகள் சிறையில் உள்ளனர், அவர்கள் முன்ஜாமீனின்றி நீண்ட சோதனைகளை எதிர்கொள்கின்றனர். சாதாரண குற்றவியல் சட்டங்களின் கீழ் கிடைக்கக்கூடிய பல சலுகைகளும் மறுக்கப்படுகின்றன.

குறிப்பாக தற்போதைய தேசிய ஜனநாயக கூட்டணி அரசு 2014 மே மாதம் ஆட்சிக்கு வந்த பிறகு, UAPAவின் துஷ்பிரயோகம் பற்றிய இந்த ஆய்வை நாங்கள் மேற்கொண்டோம். மேலும் இந்த UAPA சட்டம் "வழக்குகள் மூலம் துன்புறுத்தும் ஒரு ஆயுதமாக" மாறிப்போயிருப்பதை அவதானித்தோம்.

இந்த ஆய்வின் நோக்கத்தை புரிந்துகொள்ள

UAPA விதிகளின் பின்வரும் வேறுபாடுகளை கவனித்தாலே போதுமானது :

1) சட்டவிரோத நடவடிக்கை (பிரிவு 2. (o) UAPA) மற்றும் பயங்கரவாதச் சட்டம் (பிரிவு 2(k)) உடன் பிரிவு 15 UAPA படிக்கப்படும்போது, சட்ட விதிகளுக்கு இடையே பெரும் வேறுபாடு உள்ளது. "சட்டவிரோத செயல்பாடு" என்பது, பிரிவினைக்கான கோரிக்கையை நோக்கமாகக் கொண்ட அல்லது ஆதரிக்கும் அல்லது இந்தியா வுக்கு எதிரான அதிருப்தியை ஏற்படுத்தும் எந்த வொரு செயலாகவும் பரவலாக வரையறுக்கப் படுகிறது. இதற்கு நேர் மாறாக, இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, பாதுகாப்பு (பொரு ளாதார பாதுகாப்பு உட்பட) அல்லது இறையாண் மையை அச்சுறுத்தும் நோக்கத்துடன் வெடி பொருட்கள், ஆயுதங்கள் மற்றும் பிற பொருட் களைப் பயன்படுத்தி மக்களை அச்சுறுத்தும் நோக்கத்துடன் செயல்படுவது எந்த ஒரு செயலாகும்.

2) UAPAவின் பிரிவு 43D(5) இல் வழங்கப் பட்டுள்ள மிகவும் கடுமையான மற்றும் கொடூர மான விதிகளில் ஒன்று ஜாமீன் பெறுவது. டிசம்பர் 2008இல் பெரிய அளவில் பிரிவு 43D(5)இல் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டது. அதில் பிணை, பயங்கரவாத குற்றங்களுக்காகப் பெற முடியாது. குற்றம் சாட்டப்பட்டவர் மீதான வெறும் குற்றச்சாட்டை மட்டுமே முதன்மையான உண்மை என்று நம்புவதற்கு நீதிமன்றத்திற்கு நியாயமான காரணம் இருக்குமானால், இந்த சட்டத்திருத்தத்தின் மூலம் ஜாமீன் மறுக்கப்படு கிறது. இந்த விதி (UAPA சட்டத்தின் 4-6 அத்தியா யங்களில்) பயங்கரவாத குற்றங்கள் என வரையறுக் கப்பட்ட குற்றங்களுக்கு மட்டுமே பொருந்தும். சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு பொருந்தாது.

3) UAPAவின் பிரிவு 18 சதி திட்டத்திற்கான தண்டனையை வழங்குகிறது. பயங்கரவாத செயலுக்கு சதி செய்தல் அல்லது செய்ய முயற்சி செய்பவர் அல்லது வக்காலத்து வாங்குபவர், தூண்டுதல், ஆலோசனை வழங்குதல் அல்லது வழி நடத்துதல் அல்லது தெரிந்தே உதவுதல் என்று வரையறுக்கிறது. சதி என்ற சொல் UAPAவில் வரையறுக்கப்படவில்லை.

மேலும் IPC பிரிவு 120A,120B இல் வழங்கப் பட்டுள்ள சதியின் வரையறை UAPA இன் ஒரு பகுதியாக எடுத்துக் கொள்ள வேண்டும். எளிமை யாகச் சொல்வதென்றால், வெடிபொருட்கள், துப்பாக்கிச் சூடு, மரணம், காயங்கள் அல்லது மக்கள் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் அதுமட்டுமில்லாது பயங்கரவாத செயலுக்கான சதியில் ஈடுபடுவது போன்றவைகளுக்கு மேற் குறிப்பிட்ட எந்த விதமான அசம்பாவிதங்களும் நிகழாமலே தண்டனை வழங்கப்படுகிறது.

இது ஒரு முக்கியமான வேறுபாடு, பெரும் பாலும் தடா மற்றும் பொடாவின் வழக்குகளை உற்று நோக்கும்போது, ஆயிரக்கணக்கான மக்கள், காயத்தையோ அல்லது மரணத்தையோ ஏற்படுத் தக்கூடிய பயங்கரவாத செயல்களிலோ அல்லது அவற்றை ஏற்படுத்துவதற்கான சதித்திட்டங் களிலோ ஈடுபடாமலேயே விசாரிக்கப்பட்டுள்ள னர். இவை ஏன் நிகழ்கின்றன என்றால், இந்த சட்டங்களில் "குற்றம்" பற்றி வரையறுக்கப் பட்டுள்ள வரையறைகள் தெளிவற்றதாகவும், தளர்வானதாகவும் இருக்கின்றன.

எனவே பயங்கரவாத செயல்களை செய்வதற்கான சதி திட்டங்களை தீட்டியதாக கூறி எவரொருவரையும் தடா மற்றும் பொடா இப்போது UAPA வில் இணைக்கலாம்.

### இந்த ஆய்வு எதைப் பற்றியது?

UAPA தவறாக பயன்படுத்தப்படுவது குறித்து, பரவலான புகார்கள் வந்த போதிலும், வழக்குகள் பற்றின முழுமையான தரவு, ஆண்டுவாரியாக முழுமையாகப் கிடைக்கப்படுவதில்லை. தடா, பொடா இப்போது UAPA போன்ற பயங்கரவாத தடுப்பு சட்டங்களின் கொடூரமான பிரிவுகளைக் கருத்தில் கொண்டு, UAPA வழக்குகள் பற்றிய ஆண்டுவாரியான மற்றும் மாநில வாரியான தகவல்களை அரசாங்கமே வழங்கவேண்டும்.

பதிவு செய்யப்பட்ட வழக்குகள், நிலுவையில் உள்ள விசாரணைகள், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள், நிலுவையில் உள்ள வழக்குகள், முடிவுற்ற வழக்குகள் அத்துடன் கைது செய்யப்பட்டவர்களின் தகவல்கள், அவர்களின் ஜாமீன் விவரங்கள், வழக்குகளின் கால அளவு, குற்றம் நிரூபிக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்டவர்களின் விகிதாச்சாரம் போன்றவைகள் பொதுமக்களின் பார்வைக்கு பெரும்பாலும் கிடைப்பதில்லை.

ஆண்டுதோறும் வரக்கூடிய NCRB அறிக்கைகளிலும் இந்த வழக்குகள் பற்றின நிலைகள் எதை பற்றியும் தெரிவிக்காமல் வெற்றுத் தரவுகளாக உள்ளன. இந்த முக்கியமான இடைவெளியை சரிசெய்வதற்காகத்தான் இந்தியாவிலுள்ள அனைத்து UAPA வழக்குகளின், விரிவான தரவுகளை கொடுக்கும் ஒரு பொது தளத்தை உருவாக்கும் நோக்கத்துடன் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும் வழக்குகளின் FIR முதல் வழக்கு முடியும் கடைசி காலம் வரை அனைத்து ஆவணங்களையும் வழங்கும் ஓர் தளத்தை உருவாக்குவதும் இதன் முக்கிய நோக்கமாகும். இன்று அத்தகைய தரவுத்தளம் இல்லாத நிலையில், இந்த முயற்சியானது விசாரணை நீதிமன்ற வழக்கறிஞர்களிடமிருந்து தரவுகளை சேகரிக்க முயல்கிறது. மேலும் மாவட்ட நீதிமன்றங்களின் போர்டல், மாநில காவல் துறையின் இணையதளங்கள், தேசிய புலனாய்வு முகமையின் இணையதளம், உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்றத்தின் இணையதளங்கள் மற்றும் சட்ட இணையதளங்கள் ஆகியவற்றில் உள்ள தகவல்களையும் சேகரிக்கும்.

இவற்றை தேசிய புலனாய்வு முகமையின் இணையதளத்திலிருக்கும் அறிக்கைகளில் இருந்தும், NCRB யின் "இந்தியாவில் குற்றங்கள்" என்கிற ஆண்டு அறிக்கைகளிலிருந்தும், நாடாளுமன்றத்தின் லோக் சபை மற்றும் ராஜ்ய சபையில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கான பதில்களில் இருந்தும் தொடங்க வேண்டும்.

**ஒரு எச்சரிக்கை**

**1. தேசிய புலனாய்வு முகமையின் வலைதளத்தில்**

இந்த அறிக்கை ஆகஸ்ட் 12 2021ன் தேசிய புலனாய்வு முகமை இணையதளத்தில் உள்ள தகவல்களின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதை சுட்டிக்காட்ட வேண்டியது அவசியம்.

தேசிய புலனாய்வு முகமை இணையதளத்தில் முதல் தகவல் அறிக்கைகள், காவல்துறையின் இறுதி அறிக்கைகள், விசாரணை நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் பிற வழக்கு தொடர்பான ஆவணங்கள் பற்றிய தகவல்களுடன் தேசிய புலனாய்வு முகமை அதன் 12 பிராந்திய அலுவலகங்களில் கையாளப்பட்ட அனைத்து வழக்குகளின் பட்டியலையும் கொண்டுள்ளது.

தகவல் சீரானதாகவோ அல்லது விரிவானதாகவோ இல்லை. எடுத்துக்காட்டாக, காவல் துறையின் இறுதி அறிக்கைகள் (குற்றப் பத்திரிகைகள்) ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டதாக ஒரு குறிப்பிட்ட வழக்கு பதிவு செய்யப்பட்டாலும், உண்மையான காவல்துறையின் இறுதி அறிக்கைகள் எப்போதும் வழங்கப்படுவதில்லை. இதே போல், விசாரணைகள் முடிந்ததாகக் காட்டப்படும் அனைத்து வழக்குகளிலும், விசாரணை நீதிமன்றத் தீர்ப்புகள் எப்போதும் இல்லை. எனவே இந்த ஆய்வின் நோக்கங்களுக்காக, தேசிய புலனாய்வு முகமை இணைய தளத்தில் கிடைக்கும் தகவல்களை மட்டுமே நம்பியிருக்க வேண்டியதாயிருக்கிறது.

**2. NCRB அறிக்கையில்**

இதேபோன்ற முறையில், UAPA மீதான NCRB தரவைக் கணக்கிடுவதில் ஒரு முறையான குறைபாட்டைச் சுட்டிக்காட்டுவது முக்கியம். பல்வேறு வகையான குற்றங்களின் நிகழ்வுகளைக் கணக்கிடுவதற்கு NCRB பின்பற்றும் "முதன்மைக் குற்ற விதி"யை இது குறிக்கிறது. இந்த முறையின் கீழ், ஒவ்வொரு முதல் தகவல் அறிக்கையும், அதில் விதிக்கப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கையை பொருட்படுத்தாமல் ஒரு குற்றத்தின் கீழ் மட்டுமே வகைப்படுத்தப்படும். இது முதன்மைக் குற்றம் என்று அழைக்கப்படுகிறது. இது முதல் தகவல் அறிக்கையில் விதிக்கப்படும் குற்றங்களின் கீழ் விதிக்கப்படும் அதிகபட்ச தண்டனையால் தீர்மானிக்கப்படுகிறது. எனவே ஒரு வழக்கில் கற்பழிப்பு மற்றும் கொலைக் குற்றமாக இருந்தால் அந்த வழக்கு கொலைக் குற்றத் தலைப்பின் கீழ் மட்டுமே வகைப்படுத்தப்படும். ஏனென்றால் கற்பழிப்பை விட கொலைக்கு தண்டனை அதிகம்.

UAPA போன்ற சிறப்பு சட்டங்களைப் பொருத்தவரை இது எண்ணிக்கை குறைப்புக்கு வழி வகுக்கிறது.

பெரும்பாலான குற்றச்சாட்டுகளில் அரசுக்கு எதிராக அதிக தண்டனையுடன் கூடிய பிற குற்றங்களும் முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப் பட்டுள்ளன. எனவே இந்த குற்றங்கள் UAPA வில் முதன்மைப்படுத்தப்படுகிறது.

எனவே, இந்த நிகழ்வுகள் அரிதாகவே வகைப் படுத்தப்படுகின்றன. இந்த ஆய்வு மூலம் விளக்

கப்பட்டுள்ள பகுப்பாய்வை விட உண்மையான சூழ்நிலை ஒருவேளை கடுமையானதாக இருக்கலாம் என்று வாசகர்களுக்கு எச்சரிக்கை செய்வதற்கு இந்த முறை சார்ந்த வரம்புகளை நாம் சுட்டிக் காட்டுகிறோம்.

### தேசிய புலனாய்வு முகமை – பகுப்பாய்வு

தேசத்தின் பாதுகாப்பு, இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதிக்கும் குற்றங்களை விசாரித்து வழக்கு தொடர தேசிய புலனாய்வு முகமை சட்டம் 2008 மூலம் தேசிய புலனாய்வு முகமை உருவாக்கப்பட்டது. தேசிய புலனாய்வு முகமை சட்டம் "திட்டமிடப்பட்ட குற்றங்களின்" பட்டியலை அறிமுகப்படுத்தியது. அந்த குற்றங்களை விசாரிக்க தேசிய புலனாய்வு முகமைக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது என்ற நிபந்தனையும் விதித்தது.

UAPA குற்றங்கள், தேச விரோத / தேச துரோக குற்றங்கள் ஆயுத சட்டத்தின் கீழ் குற்றங்கள் போன்றவை அட்டவணையில் சேர்க்கப் பட்டுள்ளன.

12 ஆகஸ்ட் 2022ன் படி தேசிய புலனாய்வு முகமை இணையதளத்தில் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் பின்வரும் பகுபாய்வு செய்யப்படுகிறது. https://www.nia.gov.in/nia-cases.htm) தளம் பின்வரும் நான்கு வகையான தகவல்களை வழங்குகிறது.

1) வழக்குகளின் சுருக்க விவரங்கள் மற்றும் பத்திரிக்கை அறிக்கைகள்.

2) தேசிய புலனாய்வு முகமையால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட முதல் தகவல் அறிக்கைகள். தானாக முன்வந்து (suo motu) அல்லது உள்துறை அமைச்சகத்தால் பரிந்துரைக்கப்பட்டிருந்தால் தேசிய புலனாய்வு முகமை சட்டம்,2008ன் பிரிவு 4 மற்றும் 6ல் குறிப்பிட்டுள்ளபடி இதுகுறித்து விசாரிக்கலாம்.

3) காவல் துறையின் இறுதி அறிக்கைகள் u/s 173(8) குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி பிரபலமாக "குற்றப் பத்திரிகைகள்" என்று அழைக்கப்படுகிறது. விசாரணை முடிந்தவுடன், பிறகு UAPA / NIA நீதிமன்றத்தில் வழக்கின் அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது.


4) பல வழக்குகளின் விசாரணையின் முடிவில் தீர்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

### NCRB குற்றச்சாட்டுகள் சம்பந்தப்பட்ட தேசிய புலனாய்வு முகமையின் வழக்குகள்

ஆகஸ்ட் 12 2022 நிலவரப்படி, தேசிய புலனாய்வு முகமை இணையதளம், தேசிய புலனாய்வு முகமையால் கையாளப்பட்ட மொத்தம் 456 வழக்குகளையும் பட்டியலிட்டுள்ளது.

இந்த 456 வழக்குகளில், சுமார் 78% அதாவது 357 வழக்குகள் மற்ற குற்றங்களுக்கு இடையில் UAPA குற்றச்சாட்டுகளை உள்ளடக்கியது. மீதமுள்ள 22% தேசிய புலனாய்வு முகமை வழக்குகளில் UAPA குற்றச்சாட்டுகள் இல்லை.

357 UAPA வழக்குகளின் விநியோகம் பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




தேசிய புலனாய்வு முகமையால் பதிவு செய்யப்பட்ட UAPA வழக்குகள் அதிக எண்ணிக் கையில் உள்ள உயர்மட்ட மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களை எடுத்துக்காட்டுகிறது. தில்லி அலுவலகத்தின் அதிகார வரம்பு இந்தியாவில் உள்ள பல மாநிலங்களில் பயங்கரவாதச் செயல்கள் என்று கூறப்படும் வழக்குகளை உள்ளடக்கியதால், டெல்லியில் உள்ள தேசிய புலனாய்வு முகமையின் தலைமை அலுவலகம் அதிகபட்ச வழக்குகளை கொண்டுள்ளது என்பதை சுட்டிக்காட்ட வேண்டும்.


### UPA / NDA காலத்தில் பதியப்பட்ட UAPA/NIA வழக்குகள்

மன்மோகன் சிங் தலைமையிலான UPA ஆட்சியில் இருந்த காலகட்டம் (2009 மே – 2014) மற்றும் நரேந்திர மோடி தலைமையிலான சகாப்தம் (மே 2014- தொடர்கிறது) ஆகியவற்றின்

காலகட்டங்களில் தேசிய புலனாய்வு முகமை யால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

UPA ஆட்சியில் (2009 மே-2014) தேசிய புலனாய்வு முகமையால் ஆண்டுக்கு பதிவு செய்யப்பட்ட UAPA வழக்குகளின் சராசரி எண்ணிக்கை 13. இதற்கு மாறாக, மோடி தலை மையிலான NDA ஆட்சியின்போது (மே 2014 - தொடர்கிறது) ஆண்டுக்கு பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் சராசரி எண்ணிக்கை 34 ஆகும்.

மோடி ஆட்சி காலத்தில், தேர்ந்தெடுக்கப் பட்ட சட்ட ஆயுதமாக UAPA வை பயன்படுத் தும் போக்கு அதிகரித்து வருகிறது என்பதை புள்ளி விவரங்களில் உள்ள வேறுபாடு தெளிவாகக் காட்டுகிறது. இது கீழே உள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




**தேசிய புலனாய்வு முகமை சுவோ மோட்டோ Vs மாநிலத்திற்கு மாற்றப்பட்ட வழக்குகள்**

எந்த ஒரு திட்டமிடப்பட்ட குற்றத்தையும் அல்லது எந்த ஒரு கிரிமினல் வழக்கையும் தேசிய புலனாய்வு முகமை விசாரிப்பதற்கு இரண்டு வழிகள் உள்ளன.

அவையாவன,

1) தேசிய புலனாய்வு முகமை சட்டம்,2008ன் பிரிவு 6(5)இன் கீழ் மத்திய அரசு, பல மாநில தொடர்புகளை உள்ளடக்கிய குற்றச் சம்பவங்கள் தேசிய புலனாய்வு முகமையால் கையாளப்பட வேண்டும் என மத்திய அரசு கருதினால், தாமாக முன்வந்து வழக்கு பதிவு செய்து விசாரிக்குமாறு தேசிய புலனாய்வு முகமைக்கு அறிவுறுத்துகிறது.

2) மத்திய அரசு (உள்துறை அமைச்சகம்) மாநில காவல் துறை/ ஏஜென்சிகளால் கையாளப் பட்ட குற்ற வழக்குகளை தேசிய புலனாய்வு முகமை பொறுப்பேற்க்குமாறு உத்தரவிடலாம்.

கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் மாநில அரசு ஒப்புக்கொள்கிறதா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல் எந்தவொரு விசாரணையையும் தேசிய புலனாய்வு முகமை (NIA) எடுத்துக் கொள்ள வேண்டுமா என்பதை தீர்மானிப்பதில் மத்திய அரசின் முழு அதிகாரம் தான் முழுமையானது. தேசிய புலனாய்வு முகமை (NIA) சட்டத்தில் மாநில அரசுடன் கலந்தாலோசித்து இடமாற்றத்தை அங்கீகரிக் கவோ அல்லது மறுக்கவோ எந்த விதியும் இல்லை. தேசிய புலனாய்வு முகமை (NIA) சட்டம் நிறை வேற்றப்பட, நடந்த நாடாளுமன்ற விவாதங்கள், எந்த ஒரு குற்றவியல் விசாரணையையும் "கையிலெடுக்க" மத்திய அரசுNIA வுக்கு வரம்பற்ற அதிகாரம் வழங்கும் இந்த விதி மீது பரவலான விமர்சனங்கள் இருந்ததை காட்டுக்கின்றன.

இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தித்தான் 2020ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே மத்திய அரசு திடீரென பீமா கோரகான் வழக்கை மகாராஷ்டிரா காவல் துறையிடமிருந்து NIAவுக்கு மாற்றியது. மகாராஷ்டிராவில் பா.ஜ.க தலைமை யிலான ஆட்சியிலிருந்து தேவேந்திர பாட்னாவிஸ் முதல்வராக இருந்து, மகாராஷ்டிராவின் சிவசேனாவின் உத்தவ் தாக்கரே தலைமையிலான மகாராஷ்டிரா விகாஸ் அகாடி (MVA) தலைமையிலான அரசாங்கத்திற்கு மிக விரைவில் ஆட்சி மாறியது. மேலும் ஆந்திர பிரதேசத்தில் மன்சிங்புட் போன்ற விமர்சனங்களை பெற்ற பல வழக்குகள் மாநில காவல் துறையிலிருந்து தேசிய புலனாய்வு முகமைக்கு மாற்றப்பட்டுள்ளன.

தேசிய புலனாய்வு முகமையின் இணையதள தரவு தளத்தினை மேலும் பகுப்பாய்வு செய்யும் பொழுது, தேசிய புலனாய்வு முகமையால் கையாளப்பட்ட அனைத்து UAPA வழக்குகளில், 41 வழக்குகள் அல்லது 12% வழக்குகள் தேசிய புலனாய்வு முகமையால் சுயமாக பதிவு செய்யப் பட்டுள்ளன. அதே சமயம் 88 சதவீதம் வழக்கு களை பிரதிநிதித்துவப்படுத்தும் 316 வழக்குகள் மாநில புலனாய்வு நிறுவனங்களில் இருந்து தேசிய புலனாய்வு முகமைக்கு மாற்றப்பட்டுள்ளன. இவ்வகையான வழக்கு மாற்றங்கள், மாநில அரசுகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டதா அல்லது இந்த மாற்றங்களுக்கு ஒப்புக்

கொண்டதா என்பது ஒரு முக்கியக் கேள்வி. இவ்வாறாக, மாற்றப்பட்ட வழக்குகளில் பெரும் பாலானவை, தேசிய பாதுகாப்பு அல்லது இறை யாண்மையை அச்சுறுத்துவதாகவோ அல்லது வன்முறையில் ஈடுபடுவதாகவோ இல்லை என்பதால் மாநில காவல் துறையில் இருந்து தேசிய புலனாய்வு முகமைக்கு இந்த இடமாற்றங் களின் செல்லுபடியாகும் தன்மையும் சந்தேகத் திற்குரியது.

தமிழ்நாட்டின் 2021 தேசிய புலனாய்வு முகமை வழக்கு இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. இந்த வழக்கில் ஆகஸ்ட் 15, 2019 அன்று- ஆகஸ்ட் 15ஆம் தேதியை சுதந்திர தினமாகக் கொண்டாட இந்தியா சுதந்திரம் பெற்றதா என்று முகநூலில் பதிவு செய்ததற்காக, UAPA வின் 13வது பிரிவின் கீழ், தமிழ்நாட்டின் மதுரையில் ஒருவர் கைது செய்யப்பட்டார். முதலில் மதுரை- தல்லாக்குளம் போலீசார் பதிவு செய்த வழக்கை மத்திய அரசு 2021ல் திடீரென தேசிய புலனாய்வு முகமைக்கு மாற்றியது.

### மிகவும் பொதுவாக விதிக்கப்படும் குற்றங்கள்

முன்னர் விவாதிக்கப்பட்டபடி UAPA சட்டத்தில் இரண்டு தனித்துவமான கூறுகள் உள்ளன, ஒவ்வொன்றும் கைதிகளின் உரிமைகள், ஜாமீன் விகிதம் மற்றும் மனித உரிமைகளின் தாக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மிகவும் வேறுபட்ட தாக்கங்களைக் கொண்டுள்ளன.

### 1) சட்டவிரோத நடவடிக்கை


சட்டவிரோதமானது என்ற வகைபாட்டின் கீழ் வகுக்கப்படும் குற்றங்கள், பிரிவு 10 (சட்ட விரோதமான சங்கத்தில் உறுப்பினராக இருப்பதற் கான அபராதம்) பிரிவு 11 (சட்டவிரோதமான சங்கத்தின் நிதியை கையாள்வதற்கான அபராதம்) பிரிவு 13 (சட்டவிரோத நடவடிக்கைகளுக்கான தண்டனை) ஆகியவற்றை உள்ளடக்கியது. ஜாமின் வழங்குவதற்கான கடுமையான விதிகள் 43D(5) இந்த குற்றங்களுக்குப் பொருந்தாது. அதாவது பயங்கரவாத நடவடிக்கைகளுடன் அதாவது பயங்கரவாத எதிர்ப்பு குற்றங்கள் உடன் ஒப்பிடும்போது ஜாமீன் பெறுவது அவ்வளவு கடினம் அல்ல.

### 2) பயங்கரவாத நடவடிக்கைகள்

பயங்கரவாத எதிர்ப்பு விதிகள் என வகைப்படுத்தப்படும் குற்றங்களாவன;

பிரிவு 15 மற்றும் 16 (பயங்கரவாத செயலுக் கான தண்டனை), பிரிவு 17(பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதி திரட்டியதற்கான தண்டனை), பிரிவு 18(சதி செய்ததற்காக தண்டனை), பிரிவு 18A (பயங்கரவாத முகாம் களை அமைப்பதற்கான தண்டனை), பிரிவு 18B (பயங்கரவாத செயலுக்கு யாரையும் ஆட்சேர்ப்பு செய்ததற்கான தண்டனை), பிரிவு 19(புகலிடம் அளித்தல்), பிரிவு 20(பயங்கரவாத கும்பல் அல்லது அமைப்பின் உறுப்பினராக இருப்பது மற்றும் வேறு சில குற்றங்களையும் உள்ளடக் கியது).

தேசிய புலனாய்வு முகமையால் கையாளப் பட்ட 357 UAPA வழக்குகளிலும் மிகவும் பொதுவாக பயன்படுத்தப்படும் UAPA குற்றங்கள் மற்றும் அவை எத்தனை முறை செயல்படுத்தப் பட்டுள்ளன என்பதை பின்வரும் விளக்கப்படம் காட்டுகிறது.




### UAPA வின் பிரிவு 18- ஓர் பகுப்பாய்வு

UAPAவின் அனைத்து பிரிவுகளையும் விட, அதிகமாகப் பயன்படுத்தப்படும் பிரிவு 18 (சதிக் கான தண்டனை) குற்றம் என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த ஆய்வின் ஒரு பகுதியாக, அதன் பயன்பாட்டில் ஏதேனும் அடிப்படை முறை உள்ளதா என்பதை புரிந்து கொள்வதற்கும், பிரிவு 18ன் குற்றச்சாட்டுகள் பற்றிய தனி பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### UAPA வின் பிரிவு 18 கூறுவது

பயங்கரவாதச் செயல் அல்லது செயலுக்கு ஆயத்தம் செய்யும் எந்த சதி செய்தாலும், வக்காலத்து வாங்கினாலும், ஆலோசனை வழங்

கினாலும், தூண்டினாலும், வழிநடத்தினாலும் அல்லது தெரிந்தே அதை செய்ய முயற்சித் தாலும், ஐந்து ஆண்டுக்கு குறையாத சிறை தண்டனை விதிக்கப்படும். ஆயுள் தண்டனை வரை நீட்டிக்கப்படலாம் மேலும் அபராதம் விதிக்கப்படலாம்.

பயங்கரவாத செயல்களின் குறிப்பிட்ட ஆணையம் பிரிவு *15* மற்றும் *16* இல் உள்ளடக் கப்பட்டிருப்பதால், பிரிவு *18*ன் நோக்கம் ஒரு பயங்கரவாத செயலைச் செய்யத் தூண்டுதல், தூண்டிவிடுதல் மற்றும் சதி செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது என்பது தெளிவாகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒரு பயங்கரவாத செயலை செய்வதற்கான சதியில் ஈடுபட்டதாக கூறப்படுவது, உண்மையில் அதைச் செய்வதி லிருந்து வேறுபட்டது.

இந்திய தண்டனைச் சட்டம் (IPC) பிரிவு. 120A மற்றும் 120Bஇல் வரையறுக்கப்பட்டுள்ள சதி - குற்றம் மிகவும் பரந்ததாகவும், மீள் தன்மை உடையதாகவும், அதன் பரந்த எல்லைக்குள் எந்த ஒரு செயலையும் உள்ளடக்கும் வகையில் கட்டமைக்கப்பட்டதாகவும் உள்ளது என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். சதிச் செயலை செய்வ தற்கான "ஒப்பந்தம்" உடன் மட்டுமே சதி குற்றம் முழுமையடைகிறது. ஒப்பந்தத்தின் பொருள் நிகழ்ந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

இதுபோன்ற பரந்தபட்ட, தளர்வான வார்த் தைகள் கொண்ட விதிகள், எந்த ஒரு வழக்கிலும் காவல்துறை சிக்க வைக்க விரும்பும் எவரையும், கயிறு போட்டு பிடிப்பதற்கு அதன் விதியை தாராளமாக பயன்படுத்த அனுமதிக்கிறது. உண்மையில் இது தடா மற்றும் பொடாவில் உள்ள சதி தொடர்பான விதிகள் ஆகும். அவை பல ஆண்டுகளாக சிறையில் இருந்த ஆயிரக் கணக்கானவர்களை கைது செய்து சிக்க வைக்க பரவலாக தவறாகப் பயன்படுத்தப்பட்டன.

இக்கட்டான சூழ்நிலையின் இறுதியில், ஷாஹீன் வெல்ஃபேர் அசோசியேஷன் (Shaheen Welfare Association Case) வழக்கில் *(1996)* தடா - விசாரணை கைதிகளின் நான்கு மடங்கு வகைப் பாட்டை உச்சநீதிமன்றம் உருவாக்கியது. இது ஒவ்வொரு நபரும் தங்களுக்கு எதிராக கூறப்படும் குற்றத்தில் குறிப்பிட்ட பங்கை அடிப்படையாகக் கொண்டது. இதனால் "வன்மையாக" வகைப் படுத்தப்பட்டவர்கள் மட்டுமே விசாரணைக் கைதிகளாக சிறையில் வைக்கப்படுகிறார்கள். மற்றவர்கள் ஜாமீனில் விடுவிக்கப்படுவார்கள்.

விசாரணைக் கைதிகளை வகைப்படுத்து வதற்கான தரப்பட்ட அளவுகோல் ஷாஹீன் வெல்ஃபேர் அசோசியேஷன் வழக்கில் உருவானது போலவே, தற்போதுள்ள UAPA வழக்குகளில் உள்ள விசாரணைக் கைதிகளை வகைப்படுத் தவும், அவர்களின் வழக்குகளை ஜாமீன் வழங்கு வதற்கும், பரிந்துரைக்கவும் பொருத்தமான அளவுகோல் உருவாக்கப்பட வேண்டும். இது சிறைவாசத்தின் தீவிரத்தை குறைக்கவும், UAPA குற்றச்சாட்டுகளின் கீழ் தேவையில்லாமல் உட்படுத்தப்பட்ட நபர்கள் மீது சுமத்தப்படும் கடுமையான சுமையை குறைக்கவும் உதவும்.

### பிரிவு 18 வழக்குகளின் பகுப்பாய்வு முறைக்கு ஒரு விளக்கக் குறிப்பு : சம்பவம் Vs சம்பவம் இல்லை என வழக்குகளைப் பிரித்தல்

பிரிவு *18* செயல்படுத்தப்பட்ட அல்லது குற்றம் சாட்டப்பட்ட UAPAவழக்குகளில் பகுப்பாய்வின் அடிப்படையிலான யோசனை, பயங்கரவாதச் செயல்களின் உண்மையான சம்பவங்கள் நிகழ்த் தப்பட்ட வழக்குகளிலிருந்து அத்தகைய பயங்கர வாத செயல்கள் செய்யப்படாத ஆனால் பயங்கர வாத குற்றத்தை செய்ய சதி செய்ததற்காக மக்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு பிடிக்கப்பட்ட வழக்கு களிலிருந்து பிரிப்பதாகும். அவ்வாறு சேகரிக்கப் பட்ட மற்றும் பிரிக்கப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு, UAPAன் கீழ் நபர்களை சிக்க வைக்கும் நோக்கத்திற்காக மட்டுமே பிரிவு *18* வேண்டுமென்றே பயன்படுத்தப்பட்டிருப்பதால் அவர்கள் எளிதில் ஜாமீன் பெறவில்லை என்பதை உறுதிப்படுத்த உதவும்.

இந்த ஆய்வின் நோக்கங்களுக்காக பின்வரும் வரையறையானது "சம்பவம்" என்பதன் கீழ் ஒரு வழக்கை வகைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப் பட்டது. இது "சம்பவம்" எதுவும் நிகழாத நிகழ்வு களுக்கு மாறாக நடந்தது.

#### நடந்த சம்பவம்

"ஆயுதங்கள், வெடிபொருட்கள் அல்லது பிற ஆயுதங்களை பயன்படுத்தி உடல் காயம் அல்லது சொத்து சேதம் (தனியார் மற்றும் பொது சொத்துக்கள் ஆகிய இரண்டும்) ஏற்படுத்தும்

உண்மையான வன்முறைச் சம்பவம்.

### சம்பவம் இல்லை

இதற்கு நேர்மாறாக,"சம்பவம் இல்லை" என்ற பிரிவில் பயங்கரவாத செயல்கள் தொடர்பான குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லாத வழக்குகள் அடங்கும். ஆனால் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல், தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பின் உறுப்பினர், வெடி பொருட்கள், ஆயுதங்கள், பணம், போதைப் பொருள் மற்றும் வெளிநாட்டு நாணயங்களை மீட்டெடுத்தல் உள்ளிட்ட பிற குற்றச்சாட்டுகள் இருந்தன.

மேலே குறிப்பிட்டுள்ள முறையை பயன்படுத்தி NIA ஆல் தொடரப்பட்ட 357 UAPA வழக்குகளில், பிரிவு 18 செயல்படுத்தப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 238. இந்த 238 வழக்குகள் சில குறிப்பிட்ட பயங்கரவாத சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் வழக்குகளாகவும், முதல் தகவல் அறிக்கை / குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட பயங்கரவாத நடவடிக்கை அல்லது சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்படாத வழக்குகளாகவும் பிரிக்கப் பட்டுள்ளன.

### இந்த 238 வழக்குகளையும் இரண்டு குழுக்களாக பிரிக்கலாம் :

### குழு - அ

வெடிகுண்டுகள், கொலைகள், தாக்குதல்கள் போன்ற சில பயங்கரவாத சம்பவங்கள் நடைபெற்றதில் பிரிவு 18 குற்றச்சாட்டுகள் செயல் படுத்தப்பட்ட வழக்குகள்.

### குழு - ஆ

பிரிவு 18 குற்றச்சாட்டுகள் செயல்படுத்தப் பட்ட வழக்குகள் ஆனால் இதில் ஆயுதங்கள் சம்பந்தப்பட்ட அல்லது உடல் சம்பந்தப்பட்ட அல்லது உடல் காயம் அல்லது தீங்கு விளைவிப்பதாக எந்த குறிப்பிட்ட சம்பவமும் தெரிவிக் கப்படவில்லை.

பிரிவு 18 குற்றச்சாட்டை உள்ளடக்கிய இந்த இரண்டு குழுக்களின் கீழுள்ள வழக்குகளின் குற்றச்சாட்டின் தன்மையை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

*Table 1: Nature of Allegations in Sec. 18 UAPA cases*

| GROUP A: Incident Occurred | GROUP B: No Actual Incident Reported |
|---|---|
| Bomb blast, IED Explosions | Member of proscribed terrorist organisation |
| Killings, Murder | Fake Indian Currency Note (FICN) |
| Attack, Ambush, Shooting | Recovery of explosives, arms, money, drugs |
| Destroying public property | Conspiracy charges simpliciter |
| - | Terror Funding |
| - | Illegal border crossing, Espionage |
| **TOTAL** - 86 cases out of 238 (36%) | **TOTAL** - 152 cases out of 238 (64%) |

குறிப்பிடத்தக்கது என்னவென்றால், பிரிவு 18 குற்றச்சாட்டை உள்ளடக்கிய 152/238 வழக்குகள் (அல்லது 64%) ஒரு பயங்கரவாதச் செயல் அல்லது உண்மையான பயங்கரவாதச் சம்பவம் நடந்ததாக எந்தக் குற்றச்சாட்டும் இல்லாத வழக்குகள் தொடர்பானவை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒருவர் தடை செய்யப் பட்ட பயங்கரவாத அமைப்பில் உறுப்பினராக உள்ளார் அல்லது வெடி மருந்துகள் அல்லது போதைப் பொருள் அல்லது பணம் மீட்கப்பட்டதாக, காவல்துறையின் குற்றச்சாட்டு மட்டுமே அந்த நபரை கைது செய்து பல ஆண்டுகளாக சிறையில் அடைக்க போதுமானது.

பிரிவு 18ன் தெளிவின்மை காரணமான ஆபத்து, காவல்துறையின் துஷ்பிரயோகம் பரவல் இதன் மையக்கருத்து, தேசிய பாதுகாப்பு, பொருளாதார அல்லது மற்றவற்றிற்கு ஆபத்தை ஏற்படுத்துவதாக அரசு கருதுபவர்களுக்கு எதிராக, அரசு பயன்படுத்தும் ஓர் சட்ட ஆயுதம் UAPA ஆகும். மேலும் UAPA பரவலாகப் பயன் படுத்தப்படுபவர்கள் முஸ்லிம் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள், அரசியல் எதிர்ப் பாளர்கள் மற்றும் ஆர்வலர்கள், தீவிரவாதக் குழுக்களின் உறுப்பினர்கள் என்று அழைக்கப் படுபவர்கள் மற்றும் பலர்.

எந்தவித ஆதாரமும் இல்லாமல் ஒரு நபர் "தடை செய்யப்பட்ட அமைப்பைச் சேர்ந்தவர்" என்ற வெறும் குற்றச்சாட்டே அந்த நபரை சிக்க வைத்து கைது செய்ய போதுமானது என்பதில் தான் சிக்கல் உள்ளது. இறுதியில் அத்தகைய நபர்கள் ஆதாரம் இல்லாததால் விடுவிக்கப்பட் டாலும், அவர்கள் பல ஆண்டுகள் சிறையில் அடைக்கப்படுவார்கள்.

பிரிவு 18ல் காணப்படும் "பயங்கரவாத செயல்களைச்செய்வதற்கானசதி" என்பதன் தெளி வற்ற வார்த்தைகள், மிகையான வரையறையில் உள்ள ஆபத்துகள் பின்வரும் இரண்டு வழக்கு ஆய்வுகளால் மேற்கோள் காட்டப்படுகின்றன.

### 1) தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினர் - அசாம் வழக்கு 2010(RC -10-2010-DLI)

தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப் பான ஐக்கிய தேசிய விடுதலை முன்னணியில் (UNLF) உறுப்பினர்களாக இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு, IPC பிரிவு 120B,121,121A மற்றும் UAPAன் பிரிவு 16,17,18,18A,18B மற்றும் 20 ஆகியவற்றின் கீழ் அசாமில் இருந்து 19 பேர் கைது செய்யப்பட்டனர். UNLFன் நடவடிக்கைகளுக்கு நிதி திரட்டி பரிமாற்றம் செய்வதன் மூலம் இந்தியாவிற்கு எதிராக போர் தொடுக்கும் சதி என்ற அடிப்படையில் கைது நடந்துள்ளது. இதற்காக மணிப்பூரில் மிரட்டி பணம் வசூலித்து குவாஹாத்திக்கு கொண்டு வந்து ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் சேகரித்து வந்ததாக கூறப்படுகிறது. இந்த வழக்கில் 18 குற்றம் சாட்டப்பட்டவர்கள் மேற்கண்ட UAPA குற்றச் சாட்டின் கீழ் குவாஹாத்தி சிறப்பு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டனர்.

இங்கு சுட்டிக்காட்ட வேண்டியது என்ன வென்றால், சதி என்று கூறப்பட்டதைத் தொடர்ந்து உண்மையான பயங்கரவாதச் சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், சதி செய்ததாகக் கூறப்படும், சதியால் ஏற்படும் உடல் காயம் / வன்முறை எதுவும் இல்லாவிட்டாலும், குற்றம் சாட்டப் பட்டவர்கள் மேற்கண்ட குற்றச்சாட்டுகளுக்கு தண்டனை பெற்றுள்ளனர். மேலும் பிரிவு 18, சதி செய்ததற்கான தண்டனை, பிரிவு 20 பயங்கரவாத அமைப்பில் உறுப்பினராக இருப்பதற்கான தண்டனை மற்றும் 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை (RI) பெற்றுள்ளனர்.

இங்கு முக்கியமாக பார்க்கப்பட வேண்டியது என்னவெனில், குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் "பயங்கரவாத செயல்" (பிரிவு 16) மற்றும் சதி (பிரிவு 18) என்று கூறப்பட்ட குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டனர். பல ஆண்டுகளுக்குப் பிறகு UAPA குற்றச்சாட்டுகளில் இருந்து, "பயங்கரவாத சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்பதாலும், ஆதாரமின்மையாலுமே விடுவிக்கப்படுகின்றனர்.

### பிரிவு 18இன்பகுப்பாய்வு முடிவுரை

பிரிவு 18- சதிக்கான தண்டனை முதலியவை கொண்ட வழக்குகளின் விரிவான பகுப்பாய்வின் பின்னணியில் உள்ள யோசனை, சதி போன்ற குற்றச்சாட்டுகள், சதி குற்றச்சாட்டுகளின் கீழ் வரும் வழக்குகளின் தன்மையை புரிந்து கொண்டு, சதி குற்றச்சாட்டுடன் தொடர்புடைய உண்மையான பயங்கரவாதம் அல்லது வன்முறை சம்பவங்கள் ஏதேனும் உள்ளதா என்ற கேள்வியுடன் அதை இணைக்க வேண்டும்.

இந்த துணை வகைப்பாடானது பிரிவு 18, குற்றச்சாட்டுகளைக் கொண்ட 238 வழக்குகளும் உண்மையான சம்பவங்களா? என்ற அடிப் படையில் வன்முறை அல்லது உடல் காயம் முதல் உடமைகளுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டதா என்பதை மேற்கொள் காட்டப்படவில்லை. நாடு முழுவதும் சிக்கலை ஏற்படுத்தியது "சதி" என்ற விதியை பயன்படுத்தப்பட்டதே.

பிரிவு 18 UAPA (பிரிவு 15 மற்றும் 16 உள்ளதைப் போன்றது) பயங்கரவாத குற்றத்தின் உள்ளார்ந்த தெளிவின்மை மற்றும் மிகையான வரையறையானது சதி வலையினை பயன்படுத்தி, எவர் ஒருவரையும் குற்றவாளியாக்கும் பரந்த அதிகாரத்தை காவல்துறைக்கு அனுமதிக்கிறது. எனவே எந்த உறுதியான நடவடிக்கையும் இல்லாமல், பயங்கரவாதச் செயலைச் செய்ய சதி செய்ததாக ஒரு குற்றச்சாட்டு மட்டுமே அவர்களுக்கு போதுமானதாக அமைகிறது.

இப்படி தீவிரமான பயங்கரவாத நடவடிக் கைகள் மற்றும் அது தொடர்பான குற்றவியல் சட்டங்கள் பற்றிய வரையறையானது தெளி வற்றதாகவும், நேர்மறையற்றதாகவும் இருப்பதால் இவை UAPA துஷ்பிரயோகத்தின் அறிகுறிகளா கவே காணப்படுகின்றன.

### NCRB யின் கதை

“இந்தியாவில் குற்றங்கள்” என்று அழைக்கப் படும் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) ஆண்டு அறிக்கைகளைப் படிக்கும்போது, இந்தியா முழுவதும் உள்ள UAPA வழக்குகளின் தன்மை மற்றும் அளவு பற்றிய விரிவான படம் வெளிப்படுகிறது. UAPA வழக்குகளுக்கான புள்ளி

விவரங்கள் 2015 முதல் 2020 வரை தனித்தனியாக வழங்கப்பட்டுள்ளன, இவை அனைத்தும் பொது களத்தில் கிடைக்கின்றன.

நாடாளுமன்றத்தில் லோக்சபை மற்றும் ராஜ்யசபை ஆகிய இரண்டு அவைகளிலும் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு, உள்துறை அமைச்சகம் வழங்கிய பதில்களுக்கும், NCRB புள்ளி விவரங்கள் அடிப்படையாக உள்ளன. இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்ட கேள்விகளுடன் கூடிய அதிகாரப்பூர்வ பதில்கள் இணைப்புகளின் ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டுள்ளன.

பகுப்பாய்விற்குச் செல்வதற்கு முன் NCRB தரவு பற்றிய இரண்டு அம்சங்களை மனதில் கொள்ள வேண்டும்:

1) தேசிய புலனாய்வு முகமையின் (NIA) இணையதள தரவுத்தளத்தை விட NCRBயின் புள்ளிவிவரங்கள் இந்தியா முழுவதும் உள்ள UAPA வழக்குகளின் தகவல்களை வழங்குகின்றன. தேசிய புலனாய்வு முகமை தளத்தில் அது (NIA) கையாளப்படும் வழக்குகளை மட்டுமே உள்ளடக்கியது. மாநில ஏஜென்சிகள் விசாரணை செய்வது அல்ல. அந்த தகவல்களும் NIA இணையதளத்தில் சீரற்றதாகவும், நிலையற்றதாகவும் உள்ளன..

2) முன்னரே எச்சரிக்கையாகக் குறிப்பிடப் பட்டபடி, NCRB தரவு, 'முதன்மைக் குற்ற விதி'யின் முறையான வரம்புக்கு உட்பட்டது. இதன் விளைவாக UAPA வழக்குகள் மொத்தமாக குறைவாகவே உள்ளன.

## UAPA வழக்குகளின் மாநில வாரியான பதிவு 2015 - 2020


இந்தியா முழுவதும் 2015 - 2020 க்கு இடையில் மொத்தம் 5924 UAPA வழக்குகள் பதிவு செய்யப் பட்டு 8371 பேர் UAPA குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். பின்வரும் அட்டவணை இதை எடுத்துக்காட்டுகிறது:

*Table 2: UAPA Cases (2015-2020)*

| Year | UAPA Cases Registered | Persons Arrested under UAPA |
|---|---|---|
| 2015 | 897 | 1128 |
| 2016 | 922 | 999 |
| 2017 | 901 | 1554 |
| 2018 | 1182 | 1421 |
| 2019 | 1226 | 1948 |
| 2020 | 796 | 1321 |
| **TOTAL (2015 – 2020)** | **5924** | **8371** |

Source: Reply to Lok Sabha Unstarred Question No. 2486 dated 09.03.2021 and NCRB CII Report 2020

2015 - 2020 க்கு இடையில் ஆண்டுதோறும் பதிவு செய்யப்பட்ட UAPA வழக்குகளின் மாநில வாரியான தரவுகளிலிருந்து, UAPA இன் கீழ் அதிக எண்ணிக்கையிலான வழக்குகளைப் பதிவு செய் வதில் நிலையான போக்கைக் காட்டிய மாநிலங் களை பின்வரும் வரைபடம் எடுத்துக்காட்டு கிறது:




மணிப்பூர், அஸ்ஸாம், ஜம்மு - காஷ்மீர் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் UAPA வழக்குகள் தொடர்ந்து அதிக அளவில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், உத்தரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகியவை குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் வழக்குகளை அவ்வப்போது பதிவு செய்கின்றன.

குறிப்பு: சத்தீஸ்கர் மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்களைச் சேர்ந்த பல விசாரணை நீதிமன்ற வழக்கறிஞர்கள் மற்றும் ஆர்வலர்கள் NCRB புள்ளிவிவரங்களின் துல்லியத்தை சந்தே கிக்கிறார்கள், அவர்கள் தங்கள் மாநிலங்களில் ஏராளமான உள்ளூர் நபர்கள் கைது செய்யப்பட்டு நீண்ட காலங்களாக சிறையில் அடைக்கப்பட் டுள்ளனர். ஆனால் NCRB புள்ளிவிவரங்களில் இதன் பிரதிபலிப்பைக் காணவில்லை. அந்தந்த சிறப்பு நீதிமன்றங்களில் UAPA வழக்குகள் நிலுவையில் இருப்பது குறித்து ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் தகவல் சேகரிக்கப்பட்ட வுடன் இந்தச் சிக்கல்கள் இன்னும் விரிவாக ஆராயப்படும்.

## UAPA துஷ்பிரயோகத்தின் மையம் : ஜாமீன் மற்றும் தண்டனை விகிதம்

நிரபராதிகள் அல்லது தண்டிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை பற்றிய என்.சி.ஆர்.பி புள்ளிவிவரங்களைக் கருத்தில் கொள்வதில் உள்ள சிக்கல் என்னவென்றால், அவர்கள் ஒருவேளை முந்தைய ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட UAPA வழக்குகளை மட்டுமே குறிப்பிடுகிறார்கள் மற்றும் அந்தந்த ஆண்டுகளில் மட்டும் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை அல்ல. ஏனென்றால், சிறப்பு நீதிமன்றத்தின் குற்றவியல் விசாரணையின் முடிவில்தான் விடுதலை மற்றும் தண்டனைகள் எழுகின்றன. ஒரு வழியாக UAPA சோதனைகள் முடிவடைய குறைந்தபட்சம் 3 முதல் 5 ஆண்டுகள் வரை ஆகும். எனவே, விடுவிக்கப்பட்ட அல்லது தண்டனை பெற்ற நபர்களின் புள்ளிவிவரங்கள் அவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளுடன் தொடர்புபடுத்தப்படாவிட்டால்,

*Table 3: Persons on Bail under UAPA*

| Year | Persons Arrested | Persons On Bail | % On Bail |
|---|---|---|---|
| 2018 | 1421 | 232 | 16.32 |
| 2019 | 1948 | 625 | 32.08 |
| 2020 | 1321 | 223 | 16.88 |
| Total | 4690 | 1080 | - |

Source: Reply to Lok Sabha Unstarred Question No. 2531, 14.12.2021

மக்களவைக்கு MHA வழங்கிய என்.சி.ஆர்.பி. தரவுகளுக்கு அதிக முக்கியத்துவம் இல்லை.

மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு, உள்துறை அமைச்சகம் 14.12.2021 தேதியிட்ட பதிலில் கீழ்க்கண்டவாறு தெரிவித்தது:

அட்டவணை 3ல், எந்தவொரு குறிப்பிட்ட வருடத்திலும் "ஜாமீனில்" இருப்பதாக அறிவிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை அந்த குறிப்பிட்ட ஆண்டில் கைது செய்யப்பட்ட நபர்களுடன் தொடர்புடையது. அவ்வாறு கணக்கிடப்பட்ட எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது மற்றும் UAPA வழக்கில் ஒருமுறை கைது செய்யப்பட்டால்,குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஜாமீன் பெற பல ஆண்டுகள் ஆகும். முதலில் அவர்கள் ஜாமீனில் இருந்தால் போதும்.

ஆண்டு வாரியாக மற்றும் மாநில வாரியாக பதிவு செய்யப்பட்ட UAPA வழக்குகளின் எண்ணிக்கை பற்றிய துல்லியமான மற்றும் பிரிக்கப்பட்ட தகவல்களை இந்திய அரசு வெளியிடுவது மிகவும் முக்கியமானது. UAPA வழக்குகளின் ஆண்டு வாரியான விதிமுறைகளுடன் தொடர்புடைய, பின்வரும் தகவல்களும் வழங்கப்பட வேண்டும்:

1) கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை (ஒவ்வொரு வருடமும்),

2) ஜாமீனில் விடுவிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் ஜாமீன் பெற எடுக்கப்பட்ட நேரம்.

3) இன்னும் ஜாமீன் பெறாத நபர்களின் எண்ணிக்கை

4) முடிக்கப்படும் விசாரணைகளின் சராசரி நீளம்.

## UAPA வழக்குகளில் தண்டனை விகிதங்களின் சோகம்

தண்டனை விகிதங்களைப் பற்றி விவாதிக்கும் போது, தண்டனை விகிதத்தைக் கணக்கிடுவதற்கான இரண்டு முறைகளைக் குறிப்பிடுவது முக்கியம்:

வழக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தண்டனை விகிதம் கணக்கிடப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தண்டனை விகிதம் கணக்கிடப்படுகிறது.

அட்டவணை 4 இல் என்.சி.ஆர்.பி பயன்படுத்திய நிலையான முன்மாதிரியைப் பின்பற்றி, விசாரணை முடிந்த வழக்குகளின் எண்ணிக்கையும், தண்டனை பெற்ற வழக்குகளின் எண்ணிக்கையும் அதே ஆண்டோடு தொடர்புடைய நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தண்டனை விகிதம் கணக்கிடப்படுவதும், அட்டவணை 5ல் தண்டனை பெற்றதாகக் காட்டப்படுவதும் ஒவ்வொரு ஆண்டும் தொடர்புடையது. என்.சி.ஆர்.பி அறிக்கைகள் ஆண்டு வாரியாக கைது செய்யப்பட்ட மற்றும் தண்டனை பெற்ற நபர்களின் எண்ணிக்கையை வழங்குவதால், தண்டனை விகிதங்கள் கீழே காட்டப்பட்டுள்ளபடி கணக்கிடப்படுகின்றன.

*Table 4: Conviction Rate (Calculated Based on the Number of Cases)*

| Year | UAPA | | | IPC (Cognizable Crimes) | | |
|---|---|---|---|---|---|---|
| | Cases convicted (A) | Cases where Trial is completed (B) | Conviction Rate [(A/B)*100] | Cases convicted (C) | Cases where Trial is completed (D) | Conviction Rate [(C/D)*100] |
| 2015 | 11 | 76 | 14.5 | 621320 | 1325989 | 46.9 |
| 2016 | 11 | 33 | 33.3 | 596078 | 1274348 | 46.8 |
| 2017 | 34 | 69 | 49.3 | 649852 | 1331222 | 48.8 |
| 2018 | 34 | 125 | 27.2 | 638955 | 1277011 | 50 |
| 2019 | 33 | 113 | 29.2 | 620809 | 1232507 | 50.4 |
| 2020 | 27 | 128 | 21.1 | 453890 | 766962 | 59.2 |
| **Total** | 112 | 340 | 32.9 | 3580904 | 7208039 | 48.9 |
| **Conviction Rate from 2015-2020** | **27.57** | | | **49.67** | | |

Source: NCRB - Crime in India: 2015 to 2020, Chapter 18A, Tables 18A.3, 18A.1

*Table 5: Conviction Rate (Calculated Based on the Persons Arrested)*

| Year | UAPA | | | IPC (Cognizable Crimes) | | |
|---|---|---|---|---|---|---|
| | Persons Convicted (A) | Persons Arrested (B) | Conviction Rate [(A/B)*100] | Persons Convicted (C) | Persons Arrested (D) | Conviction Rate [(C/D)*100] |
| 2015 | 23 | 1128 | 2.03 | 869013 | 3636596 | 23.89 |
| 2016 | 24 | 999 | 2.40 | 794616 | 3737870 | 21.25 |
| 2017 | 39 | 1554 | 2.50 | 873983 | 3727909 | 23.44 |
| 2018 | 35 | 1421 | 2.46 | 864686 | 3315033 | 26.08 |
| 2019 | 34 | 1948 | 1.74 | 837075 | 3112639 | 26.89 |
| 2020 | 80 | 1321 | 6.05 | 634229 | 4424852 | 14.33 |
| **Total** | 235 | 8371 | 2.80 | 4873602 | 21954899 | 22.19 |
| **Conviction Rate from 2015-2020** | **2.80** | | | **22.19** | | |

Source: NCRB - Crime in India: 2015 to 2020, Chapter 19A, Tables 19A.7, 19A.5

இந்திய அரசின் துஷ்பிரயோகத்தின் முக்கிய குறிகாட்டிகளில் ஒன்று UAPA வழக்குகளில் குறைந்த தண்டனை விகிதம் ஆகும். என்.சி.ஆர்.பி.யின் கணக்கீட்டு முறையின்படி, வழக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் UAPA வழக்குகளின் தண்டனை விகிதம் 27.5% ஆகும். முந்தைய எண்ணிக்கை கணிசமாகக் குறைவாக இருந்தாலும், கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தண்டனை விகிதம் கணக்கிடப்படும்போது, மோசமான தண்டனை விகிதத்தின் உண்மையான உட்பொருள் தெளிவாகிறது.

இவ்வாறு, கைது செய்யப்பட்ட மற்றும் தண்டிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கிடப்படும் போது, UAPA வழக்குகளின் தண்டனை விகிதம் பரிதாபமாக 2.8% உள்ளது. இதன் பொருள் என்னவென்றால், 2015 முதல் 2020 வரை கைது செய்யப்பட்ட 8,371 பேரில் 97.2% பேர், (அதாவது 8,136 பேர்) உண்மையில் UAPA நீதிமன்றங்களில் விசாரணைகளின் முடிவில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

இத்தகைய உயர் நிரபராதி விகிதங்கள், பெரும்பாலான வழக்குகள்UAPA இன் கீழ் எந்த வழக்கையும் முதலில் தொடங்குவதற்கு தகுதியற்றவை என்ற உண்மையை மட்டுமே எடுத்துக்காட்டுகிறது.

நாடு முழுவதும் உள்ள பல வழக்குரைஞர்களால் சுட்டிக்காட்டப்பட்ட மற்றொரு நடைமுறை, தண்டனை விகிதத்தை உயர்த்துகிறது. குறைந்த கடுமையான UAPA குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டால், குறைந்த கால சிறைத்தண்டனை விதிக்கப்படும் 'மனு பேரம்' நடைமுறையாகும். ஏற்கனவே நீண்ட ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்து, 'பயங்கரவாதி' என்று அழைக்கப்படும் பல கைதிகள் தனிப்பட்ட முறையில் மற்றும் நிதி ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதால், அவர்களை காவலில் இருந்து விடுவிப்பதாக உறுதியளித்து, அவர்களின் இழப்பைக் குறைப்பதற்கு மனு பேரம் ஏற்கத்தக்க வழியாகும். வழக்கு விசாரணைக்கு அது தண்டனை விகிதத்தை அதிகரிக்கிறது.

சட்டப்பூர்வமற்ற இந்த நடைமுறை, பயங்கரவாத எதிர்ப்பு வழக்குகளில் 'குற்றவியல் நீதி அமைப்பு' செயல்படும் உண்மையான விதம் குறித்து மிகவும் குழப்பமான கேள்விகளை எழுப்புகிறது. எவ்வாறாயினும், இந்த நடைமுறையை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்த எந்த ஆலோசனைகளையும் வழங்குவதற்கு முன், இந்த நடைமுறை எவ்வளவு பரவலாகவும் உள்ளது என்பதை நிறுவ இன்னும் நிறைய ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

UAPAவின் கீழ் கைது செய்யப்பட்ட ஆயிரக்கணக்கானோர், ஜாமீனில் வெளிவராமல் சிறையில் வாடுகிறார்கள் என்பதுதான் இன்றும் மறுக்க முடியாத உண்மை. UAPA போன்ற சட்டம் நமது சட்டப் புத்தகங்களில் இருக்க அனுமதிக்கப்படுமா என்பதுதான் நம் முன் உள்ள சட்ட ரீதியான, தார்மீக ரீதியான மற்றும் ஜனநாயக ரீதியான கேள்வி. வேண்டுமென்றே சட்டத்தை வளைத்து மீறும் காவல்துறை அதிகாரிகளின் பொறுப்பு மீறல் மற்றும் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்ததற்காக அவர்கள் மீது வழக்குத் தொடர வேண்டியதன் அவசியம் ஆகியவை கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான கேள்வியாகும்.

# ஒடிந்து வீழ்ந்த இன்னொரு NIA வழக்கு

## 12 ஆண்டு சிறை, சித்ரவதைகளுக்குப் பின் 5 அப்பாவி முஸ்லிம்கள் விடுதலை NIA நீதிமன்ற தீர்ப்பு

THE NEW INDIAN EXPRESS

SUBSCRIBE E-PAPER

Home › Cities › Bengaluru

**Nasir was member of banned Al Umma**

*Nasir is said to have told police that he is a member of the banned terror outfit Al Umma of Tamil Nadu.*

Follow us on Google News

Published: 11th December 2009 05:31 AM | Last Updated: 15th May 2012 09:52 PM

A+ A A-



2009இல் நசீர் கைது செய்யப்பட்டவுடன் இப்படித்தான் பத்திரிக்கைகளிலும் ஊடகங்களிலும் செய்திகள் வந்தன. 2008 இல் பெங்களூரில் தொடர்ச்சியாக குண்டுகள் வெடித்தன. இதில் நசீருக்கும் தொடர்பு உண்டு என்று காவல்துறை கூறியது. மேகாலயாவில் வைத்து நசீரையும், ஷாஃபாசையும் பங்களாதேஷ் எல்லை பாதுகாப்பு வீரர்கள் கைது செய்து இந்திய எல்லை பாதுகாப்பு வீரர்களிடம் ஒப்படைத்ததாக மத்திய உள்துறை அமைச்சகம் உறுதிபடுத்தியது.

POLITICS

**Nazir, Shafaz own up B'lore blasts**

ET

Synopsis

Key Lashker-e-Toiba operatives T Nazir and Shafaz have confirmed that the 2008 Bangalore blasts, which left one dead, were carried out with financial assistance and guidance of LeT.

ET Bureau

Dec 18, 2009, 04:15 AM IST

BANGALORE|NEW DELHI: Key Lashker-e-Toiba operatives T Nazir and Shafaz, arrested recently from the Indo-Bangladesh

அப்போதைய செய்திகளை படித்தால் தரமான மிஸ்ட்ரி திரில்லர் படங்களையும் வெப் சீரிஸ்களையும் மிஞ்சும் அளவுக்கு கதை கட்டிவிட்டுருப்பதை காண முடியும். லஸ்கரே தொய்பாவின் தென் இந்திய தளபதி நசீர். அவருக்கு 26/11 மும்பை தாஜ் ஹோட்டல் தாக்குதல் குற்றவாளிகள் டேவிட் ஹெட்லி, ராணா ஆகியோரை தெரியும் என்றனர். சில குண்டுவெடிப்பு வழக்குகளில் அவருடைய பெயர் இணைக்கப்பட்டு அதற்கு தகுந்தாற்போல் டிசைன் டிசைனாக கதையும் கூறப்பட்டது.

கைது செய்யப்பட்ட இருவரும் தாங்கள் தான் பெங்களூர் குண்டு வெடிப்புக்கு காரணம் என்று ஒப்புகொண்டதாக காவல்துறை கூறியது. அவர்கள் அளித்த தகவலின் பேரில் மேலும் மூன்று பேர் இவ்வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டனர்.

நசீர் வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப் படையில் பெங்களூர் குண்டு வெடிப்பு சம்பந்த மாக தயார் செய்யப்பட்ட கூடுதல் குற்றபத்திரி கையில் அப்துல் நாசர் மதானியின் பெயரும் குற்றவாளியாக சேர்க்கப்பட்டது. பாதுகாப்பு துறை நிறுவனங்கள் சதி செய்து தன்னை இந்த வழக்கில் சிக்க வைக்க பார்க்கின்றனர் என்றே நாசர் மதானி கூறிவந்தது உண்மை என்று இப்போது புரிந்திருக்கும்.

12 ஆண்டுகளுக்கு பின் போதுமான ஆதாரம் இல்லை என்று கொச்சி NIA சிறப்பு நீதிமன்றத்தால் இவ்வழக்கில் இருந்து நசீர் இப்பொழுது விடுவிக் கப்பட்டுள்ளார். அவரோடு சேர்த்து மொத்தம் ஐந்து பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் நாடு முழுவதும் குண்டு வெடிப்பை நடத்துவதற்காக, வெடி பொருட்களை சட்டத்திற்கு புறம்பாக (ஐந்தாவ தாக குற்றம் சாட்டப்பட்டவரான) ஃபைரோஸ் வீட்டின் அருகே மறைத்து வைத்திருந்தார்கள் என்பதே வழக்கின் வாதம். 2009 இல் காவல்துறை நடத்திய தேடுதல் வேட்டையில் அந்த வெடி பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டன என்றும் கூறப்பட்டது.

வெடிபொருட்களை குற்றம் சாட்டப்பட்ட வர்கள் வைத்திருந்தார்கள் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை, எனவே வழக்கில் இருந்து விடுவிக்க அவர்கள் தகுதி உடையவர்கள் என்று கூறி ஆணையை வழங்கினார் சிறப்பு நீதிபதி கமனீஸ்.

காவல்துறை கைப்பற்றியதாக கூறிய வெடி பொருட்களைகைது செய்யப்பட்ட ஒருவரேனும் வைத்திருந்தார்கள் என்பதை நிரூபிக்கும் நேரடி சாட்சியங்கள் எதுவும் இல்லை. எந்த சான்றும் இல்லை. குற்றம் சாட்டப்பட்டவர்களை எந்த விதத்திலும் தொடர்பு படுத்தகூடிய எந்த சான்றுகளும் முற்றிலுமாக இல்லாத வழக்கை நடத்துவது நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிப்ப தாகவே அமையும் என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

**தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் வழங்கும் ஆர்எஸ்எஸ் அமைப்பை சேர்ந்தவர்கள்**

1) ஆர்எஸ்எஸ் எப்படி வெறுப்பை விதைக் கின்றது என்றும் நன்கொடையாக பெறப்படும் பணத்தை வகுப்புவாத மோதல்களை உருவாக் கவும், தீவிரவாத செயல்களில் ஈடுபடவும், சமூக நல்லிணக்கத்தை குலைக்கவும் அந்த அமைப்பு பயன்படுத்துவதாகவும் கூறியுள்ளார் சுதீஷ் மின்னி. அவர் எழுதிய Cellars of the Inferno: Confession of an RSS Pracharak என்ற புத்தகத்தில் இத்தகவல்கள் உள்ளன.


2) சுவாமி அசிமானந்தா. அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலம் நாட்டில் தீவிரவாத செயல் களை செய்தது யார் என்பதை அம்பலப்படுத்தும். (இவர் இப்பொழுது பல்டி அடித்துள்ளார்)

3) யஸ்வந்த் சிண்டே குண்டு வெடிப்பு களை நடத்தியது நாங்கள் என்று ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இவர்கள் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப் படையில் நீதியான விசாரணை நடைபெற வேண்டும். ஆர் எஸ் எஸ் அமைப்பை சேர்ந்த வர்கள் விசாரிக்கப்பட வேண்டும்.

ஆதாரம்: The Hindu, NIA Court discharges five persons in explosives case, October 16, 2022.

**- அபூஹாசின்**





## விடைதேடும் வினாக்கள்

# கோவை கார் சிலிண்டர் வெடிப்பு

## வைகறையின் கள ஆய்வு

கடந்த 23ம் தேதி அதிகாலை 4.05 அல்லது 4.30 மணியளவில் கோயம்புத்தூர் கோட்டை மேடு ஈஸ்வரன் கோயில் அருகில் TN 01 F 8163 எண்ணுள்ள மாருதி 800 (பொள்ளாச்சியை சேர்ந்த பிரபாகரன் என்பவருக்கு சொந்தமான) காரில் இருந்த சிலிண்டர் வெடித்தது. காரை ஓட்டி வந்தவரின் உடல் கொஞ்சம் கருகிய நிலையில் காருக்கு வெளியில் கிடந்தது. உடனடியாக 6 தனிப்படைகள் அமைக்கப்பட்டன.

கார் வெடிப்பு 6 தனிப்படைகள் அமைப்பு என்ற செய்தி (போலீஸ் செய்தி) கேட்டவுடன் நாங்கள் (வைகறை நிருபர்கள்) ஒரு முடிவுக்கே வந்து விட்டோம். நிச்சயமாக இது ஒரு அரசியல் நகர்வு. 1998 போல மீண்டும் பிஜேபியை ஆட்சிக்கு கொண்டு வரவும், திமுக ஆட்சியை கலைக்கவும் திட்டமிட்டு செய்யப்பட்ட ஏற்பாடு. வழக்கம்போல பலியாடுகள் முஸ்லிம்கள் தான் என்று.

கார் வெடித்த நிமிடம் முதல் இந்த ஆய்வறிக்கை தயாரிக்கும் நொடி வரை செய்திகள் அனைத்தும் வழங்குவது போலீஸ்தான். ஏனெனில் அத்துனை ஆதாரங்களையும் போலீசார் மிக சாமர்த்தியமாக அவர்கள் கைகளில் கொண்டு சென்று விட்டனர். ஆம். அந்தப் பகுதியிலுள்ள 22 சிசிடிவி கேமராக்களின் பதிவுகளை அல்ல ஹார்ட் டிஸ்க்கையே கொண்டு சென்று விட்டனர். யார் கைகளிலும் கிடைத்துவிடக் கூடாதென்று!

**முதல் செய்தி :** ஈஸ்வரன் கோயில் அருகிலுள்ள (Speed Breaker) வேகத்தடையில் ஏறி இறங்கியதால் காரில் இருந்த சிலிண்டர் வெடித்து கார் சிதறியது. காரை ஓட்டி வந்தவர், காருக்கு வெளியே (தூக்கி வீசப்பட்டு) இலேசாக கருகிய நிலையில் பிணமாக கிடந்தார்.

நாங்கள் விபத்து நடந்த இடத்திற்கு சென்ற போது எந்த செய்தியாளரும் சம்பவ இடத்தை பார்வையிட அனுமதிக்கப்படவில்லை. காரையும், எரிந்த உடலையும் அப்புறப்படுத்திய பிறகே செய்தியாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். ஆக மொத்தத்தில் அங்கிருந்த ஆதாரங்கள் அனைத்தும் மிக கவனமாக அழித்துள்ளனர்.

அந்தக் காரிலிருந்து இலேசாக கருகிய நிலையில் இரண்டு வீட்டு உபயோக சிலிண்டர்கள் ஆணிகள், கோலி குண்டுகள் சிதறி கிடந்ததாகவும் இது திட்டமிடப்பட்ட சதிச்செயலாக இருக்கக்கூடும் என்றும் போலீசார் தெரிவித்தனர். வெடித்ததாக சொல்லப்பட்ட கார் உடனே அப்புறப்படுத்தப்பட்டது.

இரவு 8 மணிக்கு தான் இறந்தவர் யார் என போலீசார் அறிவித்தனர். அவர் பெயர் ஜமேஷா

முபீன். கோட்டைமேடு பகுதியை சேர்ந்தவர். இச்சம்பவம் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக காணாமல் போனவர்.

கோவை மாவட்ட காவல்துறை ஆணையர் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்தார்:

அந்தப் பேட்டியின் போது ஒரு நிருபர், "இறந்து போனவரின் உடலிலிருந்து கெரோசின் வாடை வந்ததாக சொல்லப்படுகிறதே? அவர் எரிக்கப்பட்டாரா" என்ற கேள்விக்கு, "உங்கள் கற்பனைக்கெல்லாம் பதில் சொல்ல முடியாது" என்று எழுந்து சென்று விட்டார். ஆனால் அந்த காருக்குள்ளே ஒரு கெரோசின் கேன் இருந்தது.

இவரின் வீடு சோதனைக்குள்ளாக்கப்பட்டது. 75 கிலோ எடையுள்ள மிகவும் சக்திவாய்ந்த வெடிபொருட்கள் (Pentaerythritol tetranitrate (PETN) and Nitroglycerin) கைப்பற்றப் பட்டதாகவும் போலீசார் மற்றும் என்.ஐ.ஏ அறிவித்தனர். இந்த வெடிபொருட்கள் Flipkart, Amazon போன்ற இணையதளங்கள் வாயிலாக வாங்கியதாகவும் போலீசார் தெரிவித்தனர். மேற்சொன்ன வெடிபொருட்களை பொதுமக்கள் யாரும் அவ்வளவு எளிதாக வாங்க இயலாது என்றும் சொல்லப்படுகிறது. (The Times of India Dt.31.10.22)

பிரேத பரிசோதனைக்குப் பிறகு ஜமேஷா முபீன் உடல் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப் பட்டது. உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இவனுடைய நண்பர்கள் என தல்ஹா, அசாருதீன், நியாஸ், ஃபெரோஸ், ரியாஸ் ஆகியோரை கைது செய்து UAPA சட்டத்தில் வழக்கு பதிவு செய்தனர் போலீசார். இது எல்லாமே அவசரகதியில் நிகழ்த்தப்பட்டது!!

**நாம் இவரது குடும்பத்தாரை பேட்டி கண்டதில் கிடைத்த தகவல்கள்**

ஜமேஷா முபீன் பி.இ. இன்ஜினியரிங் படித்த பட்டதாரி. புத்தக கடையில் வேலை பார்த்து வந்தவர். சொற்ப வருமானத்தை வைத்து குடும்பம் நடத்தி வந்தவர். வாய் பேசாத காது கேளாத மார்க்க கல்வி கற்ற ஒரு பெண்ணை தன்னுடைய வாழ்க்கைத் துணைவியாக தேர்ந்தெடுத்தார். ஒரு சைக்கிள் மட்டுமே இவருக்கு சொந்தமானது.

கார் பைக் என எதுவும் கிடையாது. கார் ஓட்டத் தெரியாது. எங்காவது மனைவி மற்றும் குழந்தைகளை வெளியில் அழைத்துச் செல்வதானால் தன்னுடைய மைத்துனரிடத்தில் பைக் இரவல் வாங்குவார். இவர் கார் ஓட்டியதை இதுவரை யாரும் பார்த்ததேயில்லை.

கண் பார்வை தெளிவாக தெரியாது. ஆறு மாதத்திற்கு முன்பு தான் கண் அறுவை சிகிச்சை நடைபெற்றது. இந்த அறுவை சிகிச்சைக்கு தேவையான பணம் நண்பர்கள் வசூல் செய்து தந்ததே! கண்ணை சுருக்கி தான் பார்ப்பார். ஐந்து வேளை தொழுவார். குர்ஆன் ஓதுவார். இதுதான் இவரிடத்தில் உள்ள சிறப்பம்சங்கள். கடந்த 2019ம் ஆண்டு என்.ஐ.ஏ இவரை விசாரணைக்கு அழைத்துச் சென்று இவர் மீது எந்த வழக்கும் பதியாமல் விட்டுவிட்டதற்கான காரணம் மடியில் கனம் இல்லை.

கடந்த ஓராண்டாகவே இவருக்கு சரியான வருமானமில்லை. பழைய இன்ஜினியரிங் புத்தகங்களை வாங்கி விற்பனை செய்திருக்கிறார். கடந்த ஒரு மாதமாக இவருடைய செல்போன் ஸ்டேடஸ்ஸில் இன்ஜினியரிங் புத்தகங்கள் தான் இருந்துள்ளன.

இரண்டு சிசிடிவி வீடியோக்களை போலீசார் வெளியிட்டனர். அதில் ஒரு வீடியோ:

ஒரு கார் பிகே செட்டி வீதியிலிருந்து வந்து வலப்புறமாக ஈஸ்வரன் கோயில் வீதியில் திரும்பி கொஞ்ச தூரம் சென்றவுடன் வீடியோ அதிர்கிறது.

இரண்டாவது வீடியோ: ஜமேஷா முபீன் வீட்டிலிருந்து நான்கு பேர் (ஜமேஷா முபீன் உட்பட) ஒரு பெரிய சாக்கு மூட்டையை எடுத்துச் செல்கின்றனர். இது குறித்து நாம் முபீன் மைத்துனரிடம் கேட்ட போது,

"இதுவரை இரண்டு வீடுகள் மாறிவிட்டார் என் மச்சான். அவ்வாறு வீடு மாறும்போது என்னையும் என் நண்பர்களையும் உதவிக்கு அழைப்பார். கடைசியாக இந்த வீடு மாறிய போதும் என்னை அழைத்தார். நானும் எல்லா பொருட்களையும் (அட்டை பெட்டி பெட்டியாக) எடுத்துச்சென்றபோது அந்த வீட்டு உரிமையாளர், "இந்த பெட்டியில் என்னதான் உள்ளது?" என கேட்டார். நான் என் மச்சானிடம் கூட கேட்காமல் அந்த அட்டை பெட்டியை திறந்து காட்டினேன். அதில் புத்தகங்கள் தான் இருந்தன என்றார்".

ஜமேஷா முபீனுடைய உடலுடைய(லேசாக கருப்படித்த ஆனால் எரியாத, வெந்து போகாத, வெடிக்காத) ஃபோட்டோ இவனுடைய மனைவியிடத்தில் காட்டி போலீசார் கேட்ட போது இது யார் என தெரியாது என இவர் மனைவி சைகை காட்டியுள்ளார். முபீனுடைய உடல் (ஜனாஸா) என போலீசாரால் கொடுக் கப்பட்ட உடலின் உயரம் 5.75.அடி. ஆனால் உண்மையில் முபீனுடைய உயரம் 5.25. அடி.என்றார் அவர் உறவினர்.

கிட்டத்தட்ட இச்சம்பவத்தின் பிண்ணணி யில் ஏகப்பட்ட அரசியல் உள்ளது.

இந்தக் கார் சம்பவத்தை 1998ம் ஆண்டு குண்டுவெடிப்புடன் ஒப்பிட்டு மிகப்பெரிய தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்தாகவும் தினத் தந்தி போன்ற சேனல்களில் டாக்குமெண்ட்டிரிகள் வெளிவந்தன. ஒருவிதத்தில் நாம் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். ஏன் தெரியுமா? 1998ம் ஆண்டு குண்டுவெடிப்பினால் பயனடைந் தவர்கள் பிஜேபியினர். ஆம். மத்தியில் ஆட்சியை கைப்பற்றினார்கள். ஆக ஒரு குண்டுவெடிப்போ அல்லது ஒரு கலவரமோ நடத்தினால் நிச்சயமாக ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளலாம் அல்லது ஆட்சியை கைப்பற்றலாம் என்பது தான் பிஜேபியின் அஜெண்டா. நிச்சயமாக அந்த நோக்கத்திற்காக நடத்தப்பட்டது தான் இந்த கார் வெடிப்பு சம்பவமாக இருக்கக்கூடும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

## விடை தேடும் வினாக்கள்..!

1. கஞ்சிக்கே வழியில்லாதவர் (ஜமேஷா முபீன்) கார் வாங்கினாரா?

2. கார் ஓட்டத் தெரியாதவரை இதுவரை அவர் (ஜமேஷா முபீன்) கார் ஓட்டி யாருமே பார்த்ததேயில்லையாமே அவர் மனைவி உட்பட! நிலைமை இப்படியிருக்க காரை உண்மை யிலேயே ஓட்டியது யார்?

3. உண்மையிலே முபீன் கார் ஓட்டி வரும் சிசிடிவி பதிவுகள் ஏதும் உண்டா?

4. இந்த சம்பவம் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தே ஜமேஷா முபீனை காணவில்லை! அவர் எங்கிருந்தார் அந்த இரண்டு நாட்களாக? கார் எங்கிருந்து புறப்பட்டது, கோவையில் எந்த வழியாக நுழைந்தது என்ற பதிவுகள் ஏதும் உண்டா?



5. உண்மையிலே கார் வெடித்ததா? ஒரே யொரு சிசிடிவி பதிவு தான் உள்ளது! அதுவும் கார் செல்வது போல்தானே உள்ளது? உண்மையிலே அது வெடித்திருந்தால் வெடித்த இடத்திற்கு அருகாமையில் உள்ள போத்தீஸ் குடோவுன் கேமரா பதிவு செய்திருக்கும், அந்த பதிவுகள் சொல்வது என்ன? அது 24 மணி நேரமும் தெள்ளத்தெளிவாக காட்டக் கூடிய கேமராவாச்சே?

6. காரின் பின்பக்க சிசிடிவி பதிவுகளை மட்டுமே வெளியிட்டுள்ளீர்கள். காரின் முன்புறம் (யார் காரை ஓட்டி வருகிறவர்) உள்ள சிசிடிவி பதிவுகளை ஏன் வெளியிடவில்லை? அதை வெளியிட்டால் உண்மையில் யார் காரை ஓட்டி வந்தார் என்பது தெரிந்துவிடும் அல்லவா?

7. ஈஸ்வரன் கோயில் வாயிலில் (இரவு காவலுக்காக) எப்போதுமே ஒரு போலீஸ் அமர்ந் திருப்பார். அன்று மட்டும் 3:30 மணிக்கு அவர் சென்றுவிட்டதாக கமிஷனர் தன்னுடைய பேட்டியில் கூறியுள்ளார்? அப்படியானால் அவருக்கு இது முன்கூட்டியே தெரியுமா?

8. சிலிண்டர் வெடித்துத்தான் கார் சிதறியது இல்லையா? வெடித்த சிலிண்டரின் ஒரு சின்ன பாகத்தை கூட காண முடியவில்லையே! ஏன்?

9. வெடித்ததில் கார் துண்டுதுண்டாக சிதறியது. ஆனால் ஜமேஷா முபீன் என்று கூறப்படும் நபர் மட்டும் (சுண்டு விரல் கூட உடையாமல்) காருக்கு வெளியில் லேசாக கருகிய நிலையில் கிடந்தார்.

இதென்ன மர்மம்? முடிச்சு அவிழுமா?

10. எல்லா சம்பவங்களிலும் சிசிடிவி பதிவுகளை மட்டும் தான் போலீஸ் கேட்டுப் பெறும். ஆனால் இந்த சம்பவத்தில் அந்த பகுதியில் உள்ள அத்துனை சிசிடிவியின் ஹார்டு டிஸ்க்கை எடுத்துச் சென்றுவிட்டது போலீஸ். ஆக யார் கையிலும் எதுவும் கிடைத்து, உண்மை வெளிவந்துவிடக் கூடாது என்பதனாலா என்று

மக்கள் கேட்கிறார்கள்?

*11.* தற்கொலைப்படை தாக்குதல் நடத்துபவர்கள் தங்கள் உடலில் உள்ள ரோமங்களை அகற்றி விடுவது வழக்கம் என்று புதிதாக ஒரு செய்தி வந்துள்ளது!! அப்படி எத்துணை தற்கொலைப்படை தாக்குதல்களை இந்த செய்தி நிறுவனம் கண்டுள்ளது என்ற செய்திகளை வெளியிட முடியுமா?

நாங்கள் சொல்கிறோம். இதற்கு முன் தற்கொலைப்படை தாக்குதல் என்று என்.ஐ.ஏ.வால் வர்ணிக்கப்பட்ட தாக்குதலின் விவரத்தை ஆதாரத்துடன் தருகிறோம்.

2017ம் ஆண்டு காஷ்மீரில் ஆதில் அகமது என்ற 19 வயது சிறுவன் காணாமல் போகிறான். 2019ம் ஆண்டு நடைபெறவிருக்கின்ற பாராளு மன்ற தேர்தலில் வெற்றி பெறுவதற்காக ஒரு மிகப்பெரிய அசம்பாவிதத்தை நடத்தி மக்களின் கவனத்தை திசைதிருப்புவார்கள் என தி ஹிந்து நாளிதழ் 2018ம் ஆண்டு எச்சரிக்கின்றது. அதற்கேற்றார்போல் ஐபியும் ஒரு மிகப்பெரிய தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளதாக ஆருடம் சொல்கிறது. 2019ம் ஆண்டு சொல்லி வைத்தாற்போல் புல்வாமா மாவட்டத்தில் சிஆர்பிஎஃப் செக்போஸ்ட் அருகே 350 கிலோ ஆர் டி எக்ஸ் வெடி பொருட்களுடன் ஒரு வேன் வெடித்தது. வேனை ஓட்டி வந்தவன் துண்டுதுண்டாக சிதறிப்போனான். அவன்தான் ஆதில் அகமது என பாதுகாப்புப்படையினர் அறிவித்தனர். இதனை தற்கொலைப்படை தாக்குதல் என அறிவித்தனர். தி ஹிந்து நாளிதழ் சொன்னது போலவே நடந்தது. 2019ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் பிஜேபியினர் வெற்றி பெற்றனர்.

கிட்டத்தட்ட தமிழகத்தில் ஆட்சியைக் கைப்பற்ற கோவையை நுழைவாயிலாக ஆக்கிக் கொள்ள பா.ஜ.க.வினர் முயற்சித்துள்ளனர். ஆனால் இங்குள்ள இந்து முஸ்லிம் உறவுகளுக்கு முன்னால் இவர்களின் எல்லாவகையான சதித் திட்டங்களும் தவிடுபொடியாகி விடுகின்றன.

நிச்சயமாக தமிழகத்தில் இவர்களின் அரசியல் சித்துவிளையாட்டுக்கள் எடுபடாது.

“நியாயமின்றி ஓர் ஆன்மாவை கொலை செய்தவன், ஒட்டுமொத்த சமுதாயத்தையே கொலை செய்தவனுக்கு ஒப்பாவான்” என்ற குர்ஆன் வசனத்தை படித்த முபீன் இந்த சதியை அரங்கேற்றியிருக்க மாட்டான் என்ற உண்மையை மக்கள் உணர்வார்கள்.

இந்த கார் எரிப்பை செய்தவர்கள் யார் என்ற உண்மையை இறைவன் நிச்சயம் வெளிக்கொண்டு வருவான். சதிகாரர்கள் தோற்றுப் போவர்.

(நபியே!) இன்னும், “சத்தியம் வந்தது; அசத்தியம் அழிந்தது. அசத்தியம் நிச்சயம் அழிந்தே தீரும்” என்று கூறுவீராக.

திருச்சியில் சதாம் ஹூசைன் வழக்கு NIA கீழ் தரப்பட்டபோது, அதை ஏற்க மறுத்துவிட்டது. அதனால் மாநில உளவுத்துறை அதிகாரி சுரேஷ்-இன் பெயர் நான்கு இடங்களில் இடம் பெற்றது.

இப்போது பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை யார், ஆளுநர் ஆகியோரின் அழுத்தங்களால் NIA-இடம் இந்த வழக்கு திணிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பா.ஜ.க.வினர் வென்றுவிட்டதாக நினைக்கின்றனர். இனி நமக்கு எல்லா அரசியல் லாபங்களும் கிடைத்துவிடும் எனக் கருதுகின்றார்கள்.

அதனால் NIA- என்ற தேசிய புலனாய்வு முகமை எல்லாக் கோணத்திலும் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். நீதியை நிலைநாட்டிட வேண்டும். செய்யுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

தொடக்க நாள்களில் NIA தொடங்கப்பட்டது, Saffron Terrorism என்ற காவித் தீவிரவாதத்தை தடுக்கத்தான் அல்லாமல் அதை பாதுகாப்பதற்கு அல்ல. இப்போது அப்படி ஒருநிலை நிலவுகின்றது.

NIA கோவை சிலிண்டர் வெடி விபத்து வழக்கை விசாரிப்பவர்கள் The Hindu ஆங்கில இதழில் வந்த மிகவும் ஆதாரப்பூர்வமான இந்தச் செய்தியைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

பெயர் சொல்லிட விரும்பாத, ஆனால் இந்த வழக்கோடு சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரி சொன்னார் :

இந்தக் கேஸ் சிலிண்டர் விவகாரத்தில் எந்த அமைப்பிற்கும் தொடர்பில்லை. The Hindu, Nov.2, 2022

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு தேசிய புலனாய்வு முகமை உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிந்திட வேண்டும்.

**- கோவையிலிருந்து ஆசிஃப்**



# உளவுத்துறையின் கோட்டைக்குள்

## வெடி பொருட்கள் வந்தது எப்படி?

கோவை ஒரு கலவர பூமி என்பதால், அங்கேதான் அத்தனை உளவுத் துறையும் மையம் கொண்டுள்ளது. அப்படி இருக்க வெடி பொருட்கள் எப்படி உள்ளே வந்தன. இதை The Hindu ஆங்கில நாளிதழ் எப்படி ஒரு கார் (காவல்துறையின் கூற்றுப்படி) உள்ளே வெடி பொருட்களுடன் வந்தது. குற்றம் சாட்டப்பட்டவரை அவருடைய குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் அடையாளம் காட்ட வில்லை, என்றாலும் அவர் அண்மையில் வீடு மாறிடும் போது, கனமாக ஒரு பெட்டிடைய எடுத்துச் சென்றுள்ளார். அதனை வீட்டு உரிமை யாளர் தட்டிக் கேட்டிருக்கின்றார்., பின்னர் அவரே அந்தப் பெட்டியை பண்டலை “கிழித்துப் பார்த்திருக்கின்றார், பெட்டியில் புத்தகங்கள் தாம் இருந்திருக்கின்றது. அவர் ஜெமிஷாமு பின் புத்தக வியாபாரம் தான் செய்கின்றார் என்பது இதனை மேலும் உறுதிப்படுத்துகின்றது. அப்படி யானால் அவை எப்படி வெடி பொருளானது. அன்றே கேள்வியாகக் கேட்டது.

The Hindu, 25-10-2022

எப்போது யார்? வெடி பொருளாக மாற்றினார் கள். Online-ல் வாங்கினார் என்பது உண்மையா?

Online என்ற இணையதளத்தில் பெட்டிப் பெட்டியாக வெடிபொருள் அனுப்பி வியாபாரம் செய்வது யார்?

வெடி பொருட்கள் அசைவில் எல்லா அசைவு களும் நாள் முழுவதும் கண்காணிக்கப்படுகின்றது.

எப்போதும் பார்சலில் என்னவிருக்கின்றது என்பதை அறிந்திடாமல் எந்த கூரியர் அவற்றைப் பெற்றுக் கொள்வதில்லை. டெலிவரியும் செய்வதில்லை.

அமேசான், பிலிப்கார்ட் போன்ற நிறுவனங்களில் இதுபோன்ற வியாபாரங்கள் செய்பவர் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். டெலிவரி செய்தவர் இதில் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர். அவர்கள் கைது செய்யப் படுவார்களா?... இது நடக்குமா?

**தீபாவளி குண்டுகள் : அன்று கோவா இன்று கோவை!**

மர்ம கோவாவில் நவம்பர் 2009 இல் தீபாவளி யின்போது குண்டு வைத்தார்கள். சங்கப்பரி வாரத்தின் அமைப்பான சனாதன் சாஸ்தாவைச் சார்ந்தவர்கள், மல்கொண்டா பட்டேல், லேகா நாயக் ஆகியோர் குண்டுகளை கொண்டு வரும் போது, வெடித்துவிட்டது. அதனால் அவர்கள் இறந்தார்கள்.

பின்னர் இதே அமைப்பைச் சார்ந்தவர்கள் தாம் டபோல்கர் போன்ற சிந்தனையாளர்களைக் கொலை செய்தார்கள் என்பதும் கண்டு பிடிக்கப் பட்டது. அப்போது அவர்களால் முஸ்லிம்கள் மீது பழி போட முடியவில்லை. காரணம் அது அவர்களின் கைகளில் இருக்கும்போதே வெடித்துவிட்டது.

அதேபோன்றதொரு ஒரு ஏற்பாடுதான் இந்த

தீபாவளியில் கோவையில் செய்யப்பட்டிருக்கின்றது. இதனால் தீபாவளியைக் கொண்டாடும், பெரும்பான்மை மக்கள், சிறுபான்மை முஸ்லிம்கள் மேல் வெறுப்படைவார்கள். இந்து முஸ்லிம் பிளவை அதிகப்படுத்திட உதவும்.

தமிழகத்தில் அநாதையாக இருக்கும், பாரதீய ஜனதா கட்சிக்கு ஏதாவது ஒரு சீட் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் கிடைக்காதா? என்ற ஏக்கம் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையின், கண்களில்தெரிகிறது. (வாசகர்கள், ஆட்சியைப் பிடிக்கவே குண்டுகள் வைத்தோம் என்ற கட்டுரையைப் படிக்க வேண்டும்)

பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையாருக்குப் பிரிதோர், ஆதங்கம். இவ்வளவுக்குப் பிறகும் - அதாவது இவ்வளவு பெரிய நிகழ்வுக்குப் பிறகும், போதிய அளவு முதலாகவில்லை என்பதே அந்த ஆதங்கம்.

இதனை முதலாக்க முடிந்தவரை முயற்சி செய்கின்றார். தமிழகத்தில் பாரதீய ஜனதா கட்சிக்கு, அறிவிக்கப்படாத வழக்கறிராக ஆளுநர் ரவி அவர்கள் செயல்படுகின்றார். அவரும் முடிந்த வரை எகிறி குதிக்கன்றார். ஏதாவது இலாபம் வேண்டுமே வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலில் என்பது குறி.

பா.ஜ.க.வின் இந்த ஏக்கமெல்லாம் என் அப்பன் குதிரைக்குள் இல்லை என்பதை எடுத்துக் காட்டிடவில்லையா?

அண்ணாமலையை என்.ஐ.ஏ. விசாரிக்கவில்லை. இந்த சிலிண்டர் சலனத்தைப் பற்றி அண்ணாமலை சொல்லும் தகவல்கள் அலாதியானவை. அந்த அடிப்படையில் அவர், விசாரிக்கப்பட வேண்டும். இதை வி.அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களே - மாவட்ட ஆட்சித் தலைவர் அவலகத்திலேயே வைத்து அறிவித்தார். அப்படி இருந்தும் அவரை ஏன் விசாரணை வளையத்திற்குள் கொண்டுவந்திடவில்லை.

The Hindu, 28-10-2022

நாட்டில் எத்தனையோ குண்டு வெடிப்புகளை சங்கப்பரிவாரத்தினர்தான் நடத்தி இருக்கின்றார்கள் என்பது இப்போது தெளிவாகி இருக்கின்றது. பல வழக்குகளில் அப்படி இருந்தும் விசாரணை அந்தப் பக்கம் செல்லவில்லை. (விரிவான தகவல்களுக்கு படியுங்கள் "இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு" - ஆசிரியர் எஸ்.எம்.முஷ்ரிப், ஐ.ஜி. முன்னாள் மராட்டிய மாநில காவல்துறை அதிகாரி)

முஸ்லிம் இளைஞர்கள்தாம் செய்தார்கள் என்பதை மனதில் இருத்தி அதை நிலைநாட்டவே விசாரணையை மேற்கொள்வோம் என ஒற்றைக்காலில் நிற்பது என்ன நியாயம்?

**இனிவரும் நாட்களில்**

இனி நாங்கள் சிலிண்டரை கொண்டு அனைத்தையும் செய்தோம் என அண்ணாமலை வகையறாக்கள், சுவாமி அசிமானந்தா, ஷிண்டே பாணியில் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கும் வரை அனைவரும் காத்திருக்க வேண்டுமா? அதன் பின்னரும் அவர்களை எந்த சட்டமும் சீண்டவில்லை ஏன்?

நாங்கள்தாம் குண்டு வைத்தோம் எனக் கூறுபவர்கள். வெளியே உல்லாசமாகப் பவனி வருகின்றார்கள். நாங்கள் இல்லை, எனச் சொன்னவர்களெல்லாம் சிறையில்.

இதே கோயம்புத்தூரில் 2006ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் காவல்துறையே குண்டு வைத்துவிட்டு MNP-இன் மீது பழிபோட முயன்று தோற்றது. அப்போதைய முதல்வர் கலைஞர் அவர்களிடம் உண்மையை எடுத்துச் சொன்ன போது, காவல்துறை அதிகாரி நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டார் அன்று. நக்கீரன் போலீசே வைத்த குண்டு, போலீஸ் விட்ட புருடா என்றெல்லாம், தலைப்பில் பிட்டுச் செய்திகளைப் போட்டது. மக்கள் மறந்துவிடவில்லை. MNPஇன் தலைவர் இதை பாங்காகச் செய்தார். ஆக கோயம்புத்தூர் ஒரு முற்றுகையின் கீழிருந்திட வேண்டும் என்பதுதான் நீதியா?

**குற்றம் சாட்டப்பட்டவர்களின் குடும்பங்கள்?**

இந்த நிகழ்வில், குற்றம் சாட்டப்பட்டவர்களின் குடும்பத்தினர், பீதிவயப்பட்டு நிற்கின்றார்கள். அவர்களால் தங்களை தற்காத்துக் கொள்ள இயலாது என்பதே களத்திலிருந்து கிடைக்கும் செய்தி!

அப்படியானால் பொய்யர்கள் செய்வதெல்லாம் வேதம் என்றாகிவிடும். அதனால் நீங்கள் உங்கள் கதைகளை கட்டவிழ்த்துவிடவும், அவற்றையே வழக்காக மாற்றிடவும், எந்தத் தடையுமிருக்காது. ஏன் இந்த அப்பாவிகள்

தண்டிக்கவும் படலாம். அல்லது அண்மையில் கொச்சியிலுள்ள (கேரளாவில்) என்.ஐ.ஏ. நீதி மன்றம் ஐந்துபேரை விடுதலை செய்ததைப் போல் விடுதலையும் செய்யலாம். அதனை விரிவாக, இதே வைகறையில் கட்டுரையாகத் தந்துள்ளோம். வாசகர்கள் அதனைப் படிக்கவும்.

**கோவை குண்டு வெடிப்புகளின் கதை**

கோவையில் 1998இல் நடந்த குண்டு வெடிப்புகளின் உண்மை நிலவரத்தை நாம் தெரிந்திட சுமார், 19 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதாயிற்று. அதற்கு முன் தெஹல்கா போன்ற பத்திரிகைகள் நிறையவே சொன்னா லும், முழு உண்மையும் வெளியே வந்தது, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜனாப் நாசர் அவர்களின் கோவை கலவரத்தில் எனது சாட்சியம் என்ற நூல் வெளியே வந்தபிறகுதான்.

இந்தக் கதையை அடிக்கடி சொல்லி விட்டோம். இந்தக் கட்டுரையிலும் ஒரு பகுதியில் குறிப்பிட்டுள்ளோம்.

இதில் அன்றைக்கிருந்த கோவை ஜமாஅத் தலைவர்கள் அனைவரும் காவல்துறை ஆணை யரை சந்தித்தார்கள். அப்போது அவர்கள் ஒரு மனவலியை கமிஷனரிடம் சொன்னார்கள். அதன் சுருக்கம் :

“நாங்கள் மெத்த சிரமபப்பட்டு, இந்து முஸ்லிம் ஒற்றுமையை வளர்த்து வைத்திருக்கின் றோம். அதனை நீங்கள் அழிக்கப் பார்க்கின் றீர்களா?” அந்த முழுக் கடிதத்தையும் இங்கே இடம் பெறச் செய்துள்ளோம்.

இப்போதும் நமது இந்தக் கேள்வியை நாம் கேட்க வேண்டும். அது, ஒவ்வொருமுறை நாங்கள் சகோதரச் சமுதாயத்தவர்களிடம் ஏற்படுத்தும் நல்லிணக்கங்களை நீங்கள் ஏற்பாடு செய்யும் நடவடிக்கைகளால் கெடுத்துக் கொண்டே இருப்பீர்களா?

# கோவையில் கலவரத்தில் எனது சாட்சியம்

## - எ.வி.அப்துல் நாசர், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்



சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் வணிகவியல் இளங்கலை படிப்பையும், அப்துல் லத்திப் தலைமையிலான தேசிய லீக் கட்சியில் புவனகிரி சட்டமன்ற உறுப்பினராகவும் (1996-2001) பதவி வகித்துள்ளார். பதவிக்காலத்தில் இவர் மேற்கொண்ட மிக முக்கியமான பணியை மையப்படுத்தும் இந்நூல் இவருடைய முதல் நூலாகும்.

காவலர் செல்வராஜ் முஸ்லிம்களால் கொல்லப்பட்டதை ஒட்டி முஸ்லிம்களின் மீது மேற்கொள்ளப்பட்ட நவம்பர் 97 தாக்குதல் காவல் துறையும், இந்து முன்னணி முதலான மதவெறி அமைப்புகளும் சேர்ந்து திட்டமிட்டு நடத்தப்பட்டது. கொல்லப்பட்ட செல்வராஜ் ஒரு கிறிஸ்தவர். பெயர் அந்தோணி செல்வராஜ். இந்த உண்மை மறைக்கப்பட்டு, முஸ்லிம்கள் ஒரு இந்துவைக் கொன்றதாகவே பிரச்சினையை முன்வைத்துக் கலவரத்தைத் தூண்டியதில் காவல்துறையின் பங்கு முக்கியமானது. அதன் தொடர்ச்சியாக முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட 97 நவம்பர் படுகொலைகள் குண்டு வெடிப்புகள், சிறைக் கொடுமைகள், வழக்கு முடிவுகள் வரை கோவைக் கலவரங்கள் குறித்த ஒரு முழுமையான கையேடாக இதை நாசர் தயாரித்துள்ளார். **- அ. மார்க்ஸ்**

உண்மையை அறியவும், உணரவும் விரும்புகிறவர்கள் மட்டும் இப்புத்தகத்தை வாசிக்கக் கடவது. மற்றவர்களை விலகி நிற்குமாறு ஆணையிடுகிறேன். எப்போதும் என்றைக்கும் நீதி மறுக்கப்பட்டவர்களின், வஞ்சிக்கப்பட்டவர்களின், நிராகரிக்கப்பட்டவர்களின் பக்கத்தில் போய் நின்று கொள்ளுங்கள். அது அவர்களோடு போய் நிற்பது மட்டும் அன்று: நீதியின் பக்கம் நிற்பது; நீதியாகவே நிலை பெறுவது. **- பாரதி கிருஷ்ணகுமார்**

**நூல் கிடைக்குமிடம் - பாரதி புத்தக நிலையம், சென்னை.**



## அன்று : 2006 கோவையில்

# போலீஸ் நடத்திய வெடிகுண்டு நாடகம்!

**இந்தக் கட்டுரையானது 2006 ஆகஸ்ட் மாதம் "விடியல் வெள்ளி" மாதஇதழில் வெளிவந்தது. வாசகர்கள் அன்றுள்ள கோவை நிலவரத்தையும், இன்றுள்ள நிலவரத்தையும் ஒப்பிட்டு புரிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

உளவுத்துறையினர் மிக நீண்ட காலங்களாகவே மனித நீதிப் பாசறையை தீவிரவாதச் செயல்களோடு இணைத்திட வேண்டும் என்று சதித்திட்டங்கள் பலவற்றைத் தீட்டி வருகின்றனர்.

மனித நீதிப் பாசறையினை தீவிரவாதச் செயல்களோடு இணைத்து விட்டால், அத்தோடு அதனை செய்திடலாம் என்பது இறுதி இலக்கு!

இதனை மையமாகக் கொண்டே, எந்தக் காரணமும் சொல்லாமல் மனித நீதிப் பாசறையின் மாநில தலைவர் அவர்களின் பதவியைப் பறித்தார்கள். அத்தோடு அவரும், அவர் செய்து வரும் இஸ்லாமிய பணிகளும் மண்மூடிப் போகும் என எதிர்பார்த்தனர்.

இன்றளவும் நீதிமன்றங்களில் 2000 முதல் 2006 வரை என்னை ஏன் பணி நீக்கம் செய்தீர்கள்? காரணம் சொல்லுங்கள்' என்றே கேட்டு வருகின்றார் மனித நீதிப் பாசறையின் மாநிலத் தலைவர் மு. குலாம் முஹம்மத் அவர்கள்,

அண்மையில் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் கூட காரணம் சொல்லிட மாட்டோம் என்றே நீதிபதிகள் கூறிவிட்டார்கள்.

இந்தத் தீர்ப்புப் பற்றி தலைப்பிட்ட "தி ஹிந்து நாளிதழ்" எந்தக் காரணமுமின்றி, விசாரணையுமின்றி அலுவலர் பணிநீக்கம் நீதிமன்றங்களும் தலையிட மறுக்கின்றன என்றே தலைப்பிட்டது.

தகவல்களை அறிந்திடும் உரிமை (Right to Information) எல்லோருக்கும் உண்டு என்ற காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் 25 ஆண்டு காலம் எந்தப் பங்கமுமின்றி பணி செய்த ஒருவரைப் பணி நீக்கம் செய்தார்கள். காரணம் சொல்லமாட்டார்களாம். உலகின் மிகப்பெரிய ஜனநாயகம் இது.

பணி நீக்கம் செய்ததோடு நிற்கவில்லை உளவுத்துறை, பிரபல்யமான வாரமிருமுறை ஒன்றில் ஒரு கட்டுரையையும் எழுதி வெளியிட இருந்தார்கள். அந்தக் கட்டுரையில் நான் ஆப்கானிஸ்தான் சென்று அதிசயப் பயிற்சிகளைப் பெற்று வந்து பெங்களூரில் தங்கியிருப்பதாகவும், தமிழகத்தில் ஊடுருவக் காத்திருப்பதா கவும் சித்தரித்திருந்தார்கள். ஆனால் கட்டுரை வெளியாவதற்கு முன்னரே செய்தி என் காதுகளை எட்டிற்று. (எல்லாப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே)

உடனேயே அந்தப் பத்திரிகையின் அலுவலகத்திற்கு விடியல் அலுவலகத்திலிருந்து தொடர்பு கொண்டேன். என்னைப் பற்றி இப்படி ஒரு கட்டுரை தயாராக இருப்பதாக அறிந்தேன். நான் எங்கேயும் சென்றிட வில்லை. இங்கேதான் இருக்கின்றேன். நான் உங்களோடு பேசிட விரும்புகின்றேன் என்றேன். அந்தப் பத்திரிகையிலிருந்து முக்கிய பொறுப்புதாரியை அனுப்பினார்கள். பேசினேன். அவரும் ஆச்சர்யத்தோடு கேட்டார்.

'பத்திரிகையின் முதலாளிக்கும், ஆசிரியருக்

கும், உளவுத்துறைக்கும் மட்டுமே தெரிந்திருந்த தகவல்கள் உங்களுக்கு எப்படித் தெரிந்திட வந்தது?!' எனக் கேட்டார். வியந்தார்.

இப்படி உளவுத்துறையிலுள்ள சில கறுப் பாடுகள் அன்று என்னையும், விடியலையும், இயக்கத்தையும் ஒன்றாகக் குழிதோண்டிப் புதைத்திட முயற்சிகளை மேற்கொண்டனர். அல்லாஹ் காப்பாற்றினான். அல்லாஹ் மிகப் பெரியவன்.

அதன்பின்னர், பல்வேறு கட்டுரைகளைப் பல்வேறு இதழ்களிலும் இடம்பெறச் செய்தார்கள். அத்தனை கட்டுரைகளிலும் உளவுத் துறையையே மேற்கோள் காட்டி இருந்தார்கள். அனைத்துமே பாரதூரமான கட்டுரைகள். அத்தனையுமே பொதுமக்களை அழிக்கும் நாச வேலைகளோடு சம்மந்தப்பட்டவை.

படிப்பவர்கள் பதறுவார்கள். இதையெல்லாம் செய்யும் பாவிகளை விட்டுவிடக் கூடாது. அந்த இயக்கத்தை இயங்கிட விடக்கூடாது என்றே முடிவு கட்டுவார்கள்.

அத்தனைக்கும் பொறுமையாகப் பதிலைத் தந்தோம். வழக்குத் தொடர்ந்திட வேண்டிய வற்றில் வழக்குத் தொடர்ந்தோம். இதுவரை நாம் 20 பத்திரிகைகள் மீது வழக்குத் தொடர்ந்துள்ளோம்.

நாம் வழக்கை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றிடுவதற்கு முன் சம்மந்தப்பட்ட பத்திரி கைக்கு வழக்கறிஞர் அறிக்கை (Legal Notice) ஒன்றை அனுப்புவோம்.

இந்த நோட்டீஸ் கிடைத்தவுடன் பத்திரிகை யிலிருந்து ஒருவர் நம்மை வந்து சந்திப்பார். சமாதானம் பேசுவார். அவ்வாறு சமாதானம் பேசிடும் போதெல்லாம் உளவுத்துறைதான் இந்தத் தகவல்களைத் தந்தது. இப்படித்தானே உங்களை அரசாங்கத்திடமும் சித்தரித்துக் கொண்டிருப்பார்கள். ஆகவே நீங்கள் அரசாங் கத்தைச் சந்தித்து விளக்கங்களைச் சொல்லுங்கள்; தெளிவுபடுத்துங்கள் என்று கூறிச் செல்வார்கள். இந்தப் பின்னணியில் நாம் பலமுறை முந்தைய அரசை நடத்திக் கொண்டிருந்த முதல்வர் ஜெய லலிதாவைச் சந்திக்க முயற்சிகளை மேற்கொண் டோம். ஆனால் கடைசிவரை சந்திக்க வாய்ப் பளிக்கவில்லை.

உளவுத்துறை "சிறைக்கு வெளியே மற்றொரு பாஷா. அலறும் பெற்றோர்கள்" என்றெல்லாம் கட்டுரைகளை எழுதிப் பார்த்துத் தளர்ந்தது. பின்னர் இப்படியொரு கட்டுரையை எழுதிட முன்வந்தது. அதற்கு இப்படித் தலைப்பிட்டி ருந்தது. 'முதல்வரின் திக் திக், நாகை விசிட்.'

கட்டுரையில் முதல்வர் ஜெயலலிதாவின் புகைப்படம் பெரிய அளவில் பதிவாகி இருந்தது. முதல்வர் ஜெயலலிதா நாகப்பட்டிணம் வரும் போது அவரைக் கொலை செய்ய 'உள்ளிருப்புக் கூட்டங்களை' நடத்தி முடித்துவிட்டதாகவும் செய்தி.

தினமலர்தான் இப்படியொரு செய்தியை வெளியிட்டிருந்தது.

பாரதீய ஜனதா கட்சி மத்தியில் ஆட்சியி லிருந்த போதும், இங்கே இருந்த அண்ணா திமுக ஆட்சியின் போதும் தினமலர்தான் உளவுத் துறையின் அதிகாரப்பூர்வமான நாளேடாக செயல்பட்டது.

'சலாம் குலாம்' பணக்காரர்களிடம் மிரட்டிப் பணம் கேட்பதாக அதில் ஒரு செய்தியை இடம் பெறச் செய்துவிட்டு, பின்னால் அந்த அப்பாவி வியா பாரியிடம், "நீங்கள் ஆம் என்று சொல்லி விடுங்கள் ஆகவேண்டியதை பார்த்துக் கொள்கின்றோம்" என உத்திரவாதம் தந்த உளவுத்துறை அதிகாரிகளும் உண்டு.

விடியலுக்கு விளம்பரம் தந்த வியாபாரி யிடமும் இப்படியே பேசி, ஆம் எனச் சொல் லுங்கள் நாங்கள் வேண்டியதைச் செய்வோம் எனச் சொல்லி, தங்களுக்கு வேண்டியதை வாங்கிக் கொண்டு வந்துவிட்டார்கள்.

இப்படி தினம், தினம் மனித நீதிப் பாசறைக் கும் அதன் உறுப்பினர்களுக்கும் தொடர்ந்து தொல்லைகளைத் தந்து கொண்டிருக்கின்றார்கள். - இதேபோல்தான், நாம் தேனி முத்து தேவன் பட்டியில் நடத்திவரும் அறிவகம் குறித்தும் தொடர்ந்து அவதூறுகளைப் பரப்பி வந்தார்கள். அறிவகம் பற்றி வந்த அத்தனை கட்டுரைகளும் உளவுத்துறையையே மேற்கோள்காட்டின. இதிலும் மனித நீதிப்பாசறையின் உறுப்பினர்கள், உடன்பிறப்புகள் தொய்வின்றி எதிர்ப் பிரச் சாரங்களைமேற்கொண்டார்கள். - அறிவகம் பற்றி வந்த அவதூறுகளுக்கு எதிராக நாம் குறையாமல் எட்டு வழக்குகளை நீதிமன்றங்களில் கொடுத் திருக்கின்றோம். தினமலரின் உரிமையாளர் தள்ளாத வயதில் பெரிய குளம் நீதிமன்றம் - வந்து எறியபோது மனித நீதிப்பாசறையினரே சற்று அனுதாபப்பட்டார்கள்.

அறிவகம் பற்றி அண்மையில் வந்த ஒரே ஒரு கட்டுரையில்தான் உளவுத்துறையின் மேற்கோள் இல்லை. அதற்கு மறுப்பும் வந்தது.

செய்திகளை உளவுத்துறை கொடுக்கும் போது, பத்திரிகைகள் மறுப்புகளைப் போட மறுத்து விடுகின்றன. காரணம் கேட்டால் உளவுத்

# விடியல் வெள்ளி ஆசிரியரின் பத்திரிகையாளர்கள் சந்திப்பு!

22.07.2006 அன்று கோவையில் சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். இவர்களிடமிருந்து சில வெடிபொருள்கள் பிடிபட்டதாகவும் கூறப்படுகின்றது. இவர்கள் அனைவரும் மனித நீதிப் பாசறையைச் சார்ந்தவர்கள் என்று சில செய்திகளும், அவர்களில் மூவர் மனித நீதிப் பாசறையைச் சார்ந்தவர்கள் என்று சில செய்திகளும் பரவிவருகின்றன. கைது செய்யப்பட்டவர்களுக்கும் மனித நீதிப்பாசறைக்கும் எந்தச் சம்மந்தமுமில்லை.



சென்னையில் 24.07.2006 அன்று சென்னை பிரஸ் கிளப்பில் மனித நீதிப்பாசறையின் பத்திகையாளர்கள் சந்திப்பு நடைபெற்றது. பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு மனித நீதிப்பாசறையின் மாநிலத் தலைவர் மு. குலாம் முஹம்மது அவர்கள் பதிலளிக்கிறார். உடன் (வலது) சென்னை மாநகர அமைப்பாளர் செய்யது இப்ராஹீம் மற்றும் (இடது) சென்னை மாநகரப் பொதுச்செயலாளர் மொய்தீன்

கோவை காவல்துறை ஆணையர் திரு கரன் சின்கா அவர்கள் எந்த அமைப்பின் பெயரையும் குறிப்பிடவில்லை என்றாலும் உளவுத்துறை அதிகாரி இரத்தின சபாபதி கூறியதாக சில மேற்கோள்கள் காட்டப்படுகின்றன.

இவர்தான் முந்தைய ஆட்சியின்போது கோவை சிறைவாசிகளைக் காணச் சென்ற முஸ்லிம் பெண்களைக் கண்ணியக் குறைவாக நடத்தி பொய் வழக்கும் போட்டார். இதற்காக இவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி MNP நடவடிக்கைகள் மேற்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. எங்களது பத்திரிகையிலும் இது குறித்து விரிவாக எழுதி இருந்தோம்.

மனித நீதிப் பாசறை நீதிக்காகப் போராடும் இயக்கம். மனித நீதிப்பாசறைக்கும் கோவையில் காவல்துறையினர் கூறுவது போன்ற ஈனச் செயல்களுக்கும் எந்தச் சம்மந்தமுமில்லை. மனித நீதிப்பாசறை இது போன்ற செயல்களில் இதுவரை ஈடுபட்டதில்லை . எப்போதும் ஈடுபடவும் செய்யாது. We Demand

1) நடுநிலையான அதிகாரிகளைக் கொண்ட விசாரணை ஒன்றுக்கு ஏற்பாடு செய்யும்படி முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் நேரில் கேட்போம்.

2) நியாயம் கிடைக்கும் வரை சட்டப்படியான நடவடிக்கைகளையும் போராட்டங்களையும் மேற்கொள்வோம்.

3) மக்கள் மன்றத்தில் முறையான பிரச்சாரங்களைச் செய்து எங்களுடைய இயக்கத்தின் நற்பெயரை நிலைநாட்டிட உழைப்போம்.

4) நல்லெண்ணம் கொண்டவர்களைக் கொண்டு மக்களிடம் இதில் நியாயம் கிடைக்க எங்களோடு ஒத்துழைக்கச் செய்வோம்.

துறையின் செய்திக்கு நாங்கள் மறுப்புப் போட்டிட இயலாது என்று சொல்லி விடுகின்றன. வழக்குத் தொடருவதுதான் ஒரே வழி. அதனால் அந்தப் பத்திரிகைகளின் மீது பல வழக்குகள் தமிழகத்தின் பல்வேறு நீதிமன்றங்களிலும் நிலுவையில் இருக்கின்றன.

அதேபோல்தான் 'லண்டன் குண்டு வெடிப்பு மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குக் குறி. என்பதை மையப்படுத்தி 'நேற்று லண்டன் நாளை மதுரை வெறிபிடித்து அலையும் தீவிரவாதிகள் என்ற தலைப்பிலும் தமிழன் எக்ஸ்பிரசில் கட்டுரை ஒன்று வந்தது.

இதில் மொத்த முஸ்லிம்களையும் வம்பிற்கிழுத்திருந்தார்கள். அதனால் மதுரையைச் சுற்றியுள்ள முஸ்லிம் ஜமாஅத்துக்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து பத்திரிகைகள் குழுமத்தில் (Press Council of India) வழக்கொன்றைத் தொடுத்தோம். '

இத்தனையும் போதாதென்று நெல்லிக்குப்

பத்தில் நாடகமொன்றை அரங்கேற்றினார்கள். 2004 அக்டோபர் 26ம் நாள் நெல்லிக்குப்பத்தில் ஒரு சிறு சலசலப்பு தலித் சகோதரர்களுக்கும் முஸ்லிம் சகோதரர்களுக்கும்.

காலை ஏழு மணிக்கு நடந்த இச்சலசலப்பில் காலை ஒன்பது மணிக்கெல்லாம் தலித் சகோதரர் களும் முஸ்லிம்களும் சமாதானம் செய்து கொண்டார்.

நெல்லிக்குப்பத்தை மையமாகக் கொண்டு செயல்படும் இந்துத்துவ அமைப்புகள் தலித் சகோதரர்களை அணுகி இந்த விவகாரத்தை எங்களிடம் கொடுங்கள். நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம் என்றார்கள். ஆனால் தலித் சகோதரர்கள் உறுதியாக மறுத்துவிட்டார்கள்.

சங்கப்பரிவாரங்கள் பரம்பரை முஸ்லிம் எதிரிகள். இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் எதிர்ப்பதிலும், அழிப்பதிலும் ஒரு பாரம்பரி யத்தை வளர்த்துக் கொண்டவர்கள் செய்யாததை உளவுத்துறை செய்தது.

சென்னையிலிருந்து நெல்லிக்குப்பம் பறந்த தாகக் கூறப்பட்ட படைதான் அதைச் செய்தது. நமது விடியலின் விற்பனையாளர் ஒருவரை வழக்கில் இணைத்தது. அவர் மூலம் மனித நீதிப் பாசறையையும் இணைத்தது.

முதல் மூன்று நாள்கள் பத்திரிகைகள் தொலைக் காட்சிகள் அனைத்தும் விடியல் வெள்ளி. 'விடியல் வெள்ளி' என்றே அலறின. நமது சென்னைப் பாயும் படை சென்றவுடன், மனித நீதிப் பாசறையை இணைத்தார்கள். அதுமுதல் அடுத்த மூன்று நாள்களுக்கு மனித நீதிப் பாசறை தீவிரவாத அமைப்பாகக் காட்டப்பட்டது.

நாற்பது பயங்கர தீவிரவாதிகள் நாடெங்கும் விரிந்து வியாபித்துச் சென்று இந்துத் தீவிரவாதி களைத் தேடுவதாகவும் செய்திகளைப் பரப்பி னார்கள். இவை எல்லாமே பொய்,

பெப்சி டப்பா, வெங்காயம் வெட்டும் கத்திகள், செல்போன்கள் இவையெல்லாம் தொலைக்காட்சியில் பயங்கர ஆயுதங்களாகவும், வெடிகுண்டுகளாகவும் காட்டப்பட்டன.

நெல்லிக்குப்பத்தையே அதம் பண்ணினார்கள். பிலால் என்பவரின் வீட்டைக் காக்கிகளே சூறையாடினார்கள். அந்த அப்பாவிப் பெண் மணியை வீட்டில்கூடத் தூங்கிட விடவில்லை. இரயில் நிலையத்தில் தூங்கிட வேண்டிய நிலையை ஏற்படுத்தினார்கள். அந்த அளவுக்கு தீவிரவாதிகள், தீவிரவாதிகள் எனத் தமிழகத்தை அலறவிட்டார்கள்.

இன்று இரண்டாண்டுகள் கடந்துவிட்டன. ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப் பட்ட வீடுகளை வித்தே விட்டார்கள்.

இரண்டு ஆண்டுகளாகியும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை.

இதில் மூன்று பெண்களின் குடும்ப வாழ்க் கையே பழாய்ப் போனது. இரண்டு இளைஞர்கள் எந்தக் காரணமுமின்றி சிறையில் அடைக்கப் பட்டார்கள். தேசியப் பாதுகாப்புச் சட்டம் அவர்கள் மீது பாய்ந்தது. ஆமாம் முந்தைய அதிமுக ஆட்சியில் முஸ்லிம்கள் எந்த வழக்கில் சிக்கினாலும் உடனே தேசியப் பாதுகாப்புச் சட்டம் பாய்ந்தது.

அதேபோல் சமுதாய ஆர்வமுள்ள இளைஞர் களும் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் அடைக்கப்பட்டார்கள். இப்படி ஒரு நாடகத்தை அன்று நெல்லிக்குப்பத்தில் அரங்கேற்றினார்கள்,

ஒரு சமுதாயத்தை அல்லோல கல்லோலப் படுத்தினார்கள். சில குடும்பங்களைச் சின்னா பின்னப்படுத்தினார்கள். மக்கள் எப்போதும் மனித நீதிப் பாசறை, அறிவகம் அதனை நடத்தும் - தமிழ்நாடு டெவலப்மெண்ட் பவுண்டேஷன், டிரஸ்ட் ஆகியவற்றின் பக்கம் அரசாங்கத்தின் பார்வையைத் திருப்பினார்கள்.

அறிகத்தின் தொண்டும் மனிதநீதிப் பாசறை யின் சமுதாயப் பணிகளும் தொடர்ந்து கொண்டே இருந்தன. அல்லாஹ் போதுமானவன். எல்லா சூழ்ச்சிகளையும் வீழ்த்தினான்.

2004இல் இப்படி கபளீகரங்களைச் செய்த வர்களுக்கு இன்னொரு நேரம் வந்தது. அது 2004ஆம் ஆண்டு ரமலான் மாதம். இந்த மாதத்தில் MNP பணிகளுக்காக மக்களிடம் நிதியைப் பெற்றோம். அந்த மாதத்தில் MNP-ல் உள்ளவர்களெல்லாம் தீவிரவாதிகள் என தொலைக்காட்சிகளில் காட்டி பரபரப்பை ஏற்படுத்தி கிளப்பிவிட்டார்கள். MNP நிதி ஏதும் கிடைக்காவிட்டால் இவர்களுடைய இஸ்லா மியப் பணிகள், சமுதாயப் பணிகள், இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணிகள் எல்லாம் அடியோடு நின்றுவிடும் என எதிர்பார்த்தார்கள். ஆனால் அல்லாஹ்வின் கருணையும் மக்களின் ஆதரவும் மனித நீதிப் பாசறையின் பணிகள் தொடர வகை செய்தன. நிதிகள் வந்தன.

2005ல் இதே உளவுத்துறை, சில ஒழுக்கங் கெட்ட நயவஞ்சகர்களையும் இணைத்துக் கொண்டு சில சில்லறை வேலைகளைச் செய்தது. மக்கள் அதனைப் புறந்தள்ளினார்கள். அல்லாஹ் வின் உதவி தொடர்ந்தது.

# "பழிவாங்குவது போலீஸ்!"

இச்சம்பவத்தில் முதலில் பிடிபட்டவர் ஆரூன் பாஷா, இவரின் வக்கீல் ஜின்னா என்பவரிடம் பேசினோம். ஆரூன் பாஷாவைப் பொறுத்தவரை வருடா வருடம் ரம்ஜான் நோன்பின்போது. அனைத்து சமயப் பெரியவர்களை அழைத்து மதநல்லிணக்கக் கூட்டம் நடத்துவார்.

சமீபத்தில் நடந்த சட்டமன்றத் தேர்தலில், பா.ஜ.க.வுக்கு ஓட்டுப் போடாதீர்கள்?" என்று நோட்டீஸ் பிரச்சாரம் நடத்தியிருக்கிறார். அப்போது இவரைப் பிடித்துக் கொண்டுபோன உள்ளூர் போலீஸ், இதற்காக ஒரு 'செவன்ட்டி ஃபைவ் கேசும் போட்டுவிட்டது. நான் ஜனநாயக முறைப்படி தேர்தல் பிரச்சாரம் செய்ததை எப்படி இவர்கள் குற்றப்படுத்தலாம்?' என்று பொங்கிய ஆரூன், போலீஸுக்கு எதிராக உயர் நீதிமன்றத்துக்கும் சென்றுவிட்டார். இதன் பின்னணியில் 'வழக்கை வாபஸ் வாங்கு' என்று போலீஸார் மிரட்டி வந்துள்ளனர். அதற்கு அவர் மசியவில்லை . அதன் பிறகுதான், கடந்த 21ம் தேதி இரவு பதினொன்றரை மணிக்கு ஆரூன் வீட்டுக்குள் புகுந்த ஏழு போலீஸார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக அவர் குடும்பத்தையே செம டார்ச்சர் செய்துள்ளனர். பள்ளிக்குச் செல்லும் தன் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வைத்திருந்த இந்திய வரைபடம் முதற்கொண்டு பல மத நல்லிணக்க நோட்டீஸ்களையும் அள்ளிக் கொண்டு ஆருனையும் அழைத்துச் சென்றிருக்கிறார்கள். பின் அவர் எங்கே வைக்கப்பட்டிருந்தார் என்பது கூட ஆரூன் குடும்பத்துக்குத் தெரியவில்லை. அடுத்தநாள் மதியம்தான் அவர் வெடிகுண்டுகளுடன் கைதானதாக' பத்திரிகைச் செய்தி பார்த்துப் பதறிப் போயிருக்கிறார்கள்" என்றார்.

- குமுதம் ரிப்போர்ட்டர் 30.07.2006

# "போலீஸ் கிளப்பிய குண்டு"

திப்பு சுல்தான் மற்றும் அத்திக்குர் ரஹ்மான் இருவரும் தங்கி இருந்த வீட்டுக்கு சென்றோம். வீட்டின் உரிமையாளர் ராம சாமி நம்மிடம், பக்கத்தில் இருக்கும் கல்லூரி மாணவர் பிரபு என்பவர் தான் ரஹ்மானை அழைத்து வந்து வீட்டை வாடகைக்குப் பிடித்துத் தந்தான். இன்னொரு நபர் திப்புசுல்தான், பின்னர் இவனோடு வந்து தங்கிக் கொண்டான் என்றார். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் பேசிய போது. 'ரஹ்மானுக்காக வீடு கேட்டு அழைத்து வந்த மாணவர் பிரபுவை நாங்கள் விசாரித்தபோது, அவர் என்னிடம் போலீஸ் சி.ஐ.டி. யான நான் தீவிரவாதிகளைப் பிடிப்பதற்காக வந்திருக்கிறேன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். ஒருநாள் வ.உசி, பூங்கா அருகே போலீஸ் ஜீப்பில் இருந்தவரிடம் என்னை அறிமுகப்படுத்தினார். அவர் இன்ஸ்பெக்டர் பெயர் இளங்கோவன் என்று சொன்னார். இன்னொரு நாள் போலீஸ் என்று ஒரு ஜீப்பில் இருந்தவரிடம் என்னை அழைத்துச் சென்று பேசினார். கேட்டதற்கு இவர் ஏ.சி. என்று சொன்னார். இதையெல்லாம் பார்த்த நான், 'இவர் சொல்வது உண்மையாக இருக்கும் என்று நம்பினேன் என்று பிரபு சொன்னான். இதையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது, அவன் போலீசோடு தொடர்புடையவனாகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. எனவே எல்லாமே முழுக்க முழுக்க போலீசின் செட்-அப் வேலை என்றே தோன்றுகிறது' என்றார்கள்.

- ஜூனியர் விகடன் 30.07.2006

# நக்கீரன்-ராங்கால்!

"கவர்ச்சிகரமான செய்தியாக சொல்லி யிருக்கே... நாட்டுல பரபரப்பான தகவல்கள் நிறைய இருக்கு... கோவை, மதுரைன்னு தீவிரவாதிகள் பிடிபட்டதா போலீஸ் தரப்பி லிருந்து செய்திகள் வந்துக்கிட்டே இருக்கே... தமிழகத்தில் பாதுகாப்பு நிலவரம் எப்படி இருக்கு?"
"போஸ்டர் ஒட்டுனாங்கன்னு சொல்லி, கோவை யில் மனித நீதிப் பாசறை ஆட்களை கைது செய்து அப்புறமா விட்டிருக்காங்க. போலீஸ் அலர்ட்டா இருக்குங்கிறது உண்மைதான்.

ஆனா அங்கே பாம் பிடிச்சோம். இங்கே தீவிர வாதியை பிடிச்சோம்னு கடந்த சில வருடங்களா செயல்படாமலேயே இருக்கும் பழைய ஆட்களை பிடிச்சு போட்டோவுக்கு போஸ் கொடுக்க வச்சிக் கிட்டிருக்காங்க. போலீஸ் தரப்பிலேயே இது சம்பந்தமாக மாற்றுக்கருத்து இருக்கு, மக்களோட பாதுகாப்பை மனதிலே வச்சு, அலர்ட்டா செயல்ப டுவது நல்லதுதான். ஆனா, மீடியா பப்ளிசிட் டிக்காக இப்படி அனாவசியமா பெருசாக்குவது தேவையாங்கிற கருத்து காக்கிகளிடமிருந்தே வெளிப்படுது."

– நக்கீரன் 02.08.06

# தீவிரவாதிகள் குறி! போலீஸ்விட்ட புருடா..?

'நம்மிடம் மனம் திறந்து பேசிய முஸ்லிம் பிரமுகர்கள் சிலர் "கோவை சிறையில் உள்ள முஸ்லிம் கைதிகளைச் சந்திக்க வருபவர்களிடம் மோசமாக நடந்து கொண்டிருக்கிறார் ஏ.சி. இந்த விவகாரத்தில் ஏ.சி.க்கும் மனித நீதிப்பாச றைக்கும் ரொம்ப நாளாகவே மோதல் நடந்து வருகிறது. புரமோஷனுக்கு காத்திருக்கும் ஏ.சி. மும்பை ரயில் வெடிகுண்டு நடந்திருக்கும் இந்த நேரத்தில்... மனித நீதிப்பாசறையை இங்கே சிக்க வைத்துவிடலாம் என முடிவு பண்ணி... கோவைக்கு ஆபத்து என கதைவசனம் எழுதிவிட்டார்..."


நக்கீரன் 29.07.2006



கோவை கார் சிலிண்டர் வெடிப்பில் சிக்கிய நபருக்கு பாஜக பயிற்சி ? சபாநாயகர் பரபரப்பு பேட்டி

ETV Bharat தமிழ் · 1:43 pm · 29 Oct 2022

கோவை கார் சிலிண்டர் வெடிப்பில் பலியான முபினுக்கு பாரதிய ஜனதா கட்சியும் தேசிய புலனாய்வு முகமையும் இணைந்து பயிற்சி கொடுத்ததாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகி வருவதாக சபாநாயகர் அப்பாவு தெரிவித்துள்ளார்.



# அன்று : 2006 கோவை ஐக்கிய ஜமாஅத்தின்

# அழகிய முன்மாதிரி

கோவை ஐக்கிய ஜமாஅத்தின் ஆரவார மில்லாமல் அனைத்து நிகழ்வுகளை யும் கவனித்துக் கொண்டிருத்திருக்கின்றது. முஸ்லிம்களுக்கு அநீதி நடந்திருக்கின்றது என்பதை தெரிந்தவுடன் அவர்கள் அமைதியாக, ஆனால் அழுத்தமாகக் களமிறங்கினார்கள்.

அவர்கள் கோவை கமிஷனர் கரண்சின் ஹாவை 31.07.06 அன்று சந்தித்துப் பின்வரும் மனுவைக் கொடுத்தார்கள் என்பதைவிட தங்கள் எதிர்ப்புகளை - வினாக்களாகவும், கண்டனங் களாகவும் பதிவு செய்தார்கள்.

ஐக்கிய ஜமாஅத்தின் சார்பில் கமிஷனரிடம் தரப்பட்ட மனுவின் சுருக்கம்: (அழகிய ஆங்கில நடை நெஞ்சைத் தொடும் சொற்பிரயோகம். அதனால் அந்தக் கடிதத்தை அப்படியே தருவதும் இயலாது.)

அனுப்புநகர்,

**கோவை ஐக்கிய ஜமாஅத்**
205, பெருமாள் கோவில் தெரு,
கோவை - 641 001.

பெறுநர்

**காவல்துறை ஆணையர்,**
கோவை மாநகர்.
மதிப்பிற்குற்குரிய ஜயா,

கோவையில் நடந்த சமீபத்திய நிகழ்வுகளால் கோவை வாழ் முஸ்லிம்களும், சுற்றுப்புறத்தில் வசிக்கும் முஸ்லிம்களும் பெரும் மனக் கலக்கத் திற்கும் குழப்பத்திற்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர்.

காவல்துறையின் கூற்றும், பத்திரிகைச் செய்தி களும் ஒன்றுக்கொன்று முரணாகவே உள்ளன. இவ்வாறு கிளப்பிவிடப்பட்ட பீதி. 14.2.1968 அன்று நிகழ்ந்த அல்லோலகல்லோலங்களையும் மிஞ்சிவிட்டது பின்னும் ஐயங்களுக்கு நீங்கள் விளக்கம் தந்தால் எங்கள் சமுதாயம் உங்களைப் பாராட்டும், ஏற்றுக் கொள்ளும்,

1) போலோ சங்கர் என்ற அத்திக்குர் ரஹ்மான் ஒரு உளவாளி. ஆகையால், ஒட்டு மொத்த நிகழ்வுமே ஜோடிக்கப்பட்ட ஒன்றாகும்.

2) குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஹாருன் பாஷாவின் மீது ஏற்கெனவே காவல்துறைக்குத் தனிப்பட்ட வன்மம் இருந்ததால், அதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே இந்நிகழ்வு நடந்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுகின்றது.

3) காவல்துறை நடத்திய பரபரப்பான பத்திரிகையாளர் சந்திப்பில் கோவை அரசு மருத்துவமனை, எல்.ஐ.சி பில்டிங், போலீஸ் கமிஷனர் அலுவலகம் மற்றும் கோவையின் முக்கிய இடங்களைத் தகர்ப்பதற்குப் பயன்படும் வெடிபொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கூறினார்கள். ஆனால், மெத்தத் தயக்கத்தோடு பத்திரிகையாளர்களுக்குக் காட்டப்பெற்ற அந்த வெடி பொருள்கள் பற்றி பின்னர் ஒருபடி இறங்கி இப்படிக் குறைத்துக் கொண்டார்கள். அந்தப் பொருள்களை ஒன்றிணைத்து வெடித்தாலும் அவை பெரிய பாதிப்புகள் எதையும் ஏற்படுத்தி விடாது இந்த மொத்த ஏற்பாடும் ஒரு சோதனை தான். அந்த வெடிபொருள்கள் பத்திரிகையில் கலவரப்படுத்துவதுபோல் உண்மையிலேயே அனைத்தையும் தகர்க்கும் ஆற்றல் வாய்ந்தவை தானா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

4) பிற மதத்திலிருந்து இஸ்லாத்திற்கு வருபவர்கள் மூளைச்சலவை செய்யப்பட்டு, மதம் மாற்றப்படுகின்றார்கள் என்ற காவல்துறையின ரின் சொற்பிரயோகங்கள் எங்களுடைய மனதைப் பண்படுத்துகின்றன. கட்டாய மதமாற்றத்தை இஸ்லாம் தடை செய்கின்றது. இவ்வாறு முஸ்லிம்கள் மீது பழியைச் சுமத்துவது, ஒருங்கி

ணைந்து வாழும் அனைத்து மத மக்களிடையே நிலவும் மத நல்லிணக்கத்திற்கு அடக்கைவிளை விக்கும் செயல். இஸ்லாத்தைத் தழுவியவர் களைக் காவல் துறையினர் கண்காணித்து வருவதும், கூர்ந்து ஆராய்ந்து கொண்டே இருப்பதும் நமது அரசியலமைப்புச் சட்டம் உத்திரவாதமளித்துள்ள அடிப்படை உரிமைகளை மறுப்பதாகும்.

5) 1996 கோவை தொடர் குண்டு வெடிப் பிற்குப் பின், காவல்துறையினர் சந்தேகப்படும் நபர்களிடம் விசாரணை செய்வதற்கும் வீடு வீடாக சோதனை நடத்துவதற்கும் காவல்துறைக் குப் பெருமளவில் உதவியையம். ஒத்துழைப்பை யும் கோவையில் உள்ள அனைத்து முஸ்லிம் ஜமாஅத்துகளும் நல்கின, இத்துணை ஒத்துழைப் புக்குப் பிறகும் இவ்வழக்கில் காவல்துறையினர் ஜமாஅத்துகளைப் புறக்கணித்தே அத்தனை யையும் அரங்கேற்றியுள்ளனர்.

மேலும், இவ்வழக்கில் சம்பவ இடத்திற்கு அருகில் ஏராளமான கடைகள், நபர்களும் இருந்தும் சாட்சிகளின் முன்னிலையில் சோதனை நடத்தப்படவில்லை. சந்தேகத்திற்குரிய பொருட்கள் கைப்பற்றப்படவுமில்லை. எனவே, முன் விரோதத்தின் பின்னணியிலேயே இச்சம்பவம் நடத்தப்பட்டதற்கான சந்தேகம் இங்கே வலுக்கின்றது.

6) பொதுவான கண்காணிப்பு என்பது எந்த ஒரு சமுதாயத்திற்கும் உடனடியாக நிகழவுள்ள ஆபத்தைத் தடுத்து நிறுத்த மிகவும் அவசிய மானது. ஆனால், இங்கே மீண்டும் முஸ்லிம் களைக் குறிவைத்தே விடுக்கப்படுகின்ற எச்சரிக் கைகள், மிகச் சரியாக முஸ்லிம் சமுதாயத்தை மட்டும் தனிமைப்படுத்தும் செயலாகவே உள்ளது.

ஏற்கெனவே இதன் விளைவாக கணபதி, ராமநாதபுரம் (கோவையில் ராமநாதபுரம் மற்றொரு பகுதி உள்ளது) மற்றுமுள்ள பகுதிகளில் இப்பொழுது முஸ்லிம்கள் பீதிவயப்பட்ட மன நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின் றார்கள். மக்கள் தொடர்ந்து எங்களை சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதால் அவர்களோடு உள்ள உறவுகள் பாழ்ப்பட்ட விதத்திலேயே நாங்கள்



**கோவை கமினரைச் சந்திக்க சென்ற கோவை ஐக்கிய ஜமாஅத்தினர்**

வாழ வேண்டியது எங்களுக்கு நிரந்தர அனுபவ மாகிவிட்டது.

1998க்குப் பிறகு அனைத்துமத சகோதரர் களுக்குமிடையேயான கலந்துரையாடல்கள், சந்திப்பு நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் மூலம் கடந்த ஒரு வருடமாக மத நல்லிணக்கத்தை நிலைநிறுத்தும் முயற்சியில் நாங்கள் முன்னணி யில் நிற்கின்றோம். நாடு முழுவதும் அமைதி நிலைநாட்டப்பட வேண்டும். அமைதியை நிலைநாட்டும் முயற்சியில் நாங்கள் அனைவரும் எங்கள் உயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கின்றோம்.

தீவிரவாதத்திற்கு மதம் கிடையாது. அது எவ்வகையாக இருந்தாலும் அதனை எதிர்த்து அனைத்து சூழலிலும் போராடுவோம். ஒட்டு மொத்த பீதி, தேவையற்ற நெருக்கடிகள் ஆகியன பாதுகாப்பற்ற தன்மையையும் ஒட்டுமொத்த சீர்குலைவையும் ஏற்படுத்திவிடும்., இதனைச் சீர்செய்ய நாங்கள் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கின்றோம்.

ஐயா,

(உங்களது பதில்களையும், ஆலோசனைகளை யும் பெறுவதற்காக மிகுந்த நம்பிக்கையுடனும் ஆம், எதிர்பார்ப்புடனும் இங்கே வந்துள்ளோம். எங்களை திருப்திப்படுத்த வேண்டுமென்று நாங்கள் கேட்கவில்லை. மாறாக அமைதி நிலை நாட்டப்பட வேண்டும். அது அனைத்து மட்டங் களிலும் செய்யப்பட வேண்டும்.)

நன்றி!

- தங்கள் உண்மையுள்ள,
**கோவை ஐக்கிய ஜமாஅத்**

அடேங்கப்பா..! எத்தனையெத்தனைகுண்டு வைப்பு சம்பவங்கள்! இவை யாவும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பால் திட்டமிட்டு நடத்தப் பட்டு உள்ளன! இவற்றை இஸ்லாமியர்கள் செய்தனர் என நம்ப வைத்ததன் மூலம் தான் தற்போது பாஜக ஆட்சிக்கு வந்துள்ளது என்பதெல்லாம் பகீர் உண்மைகளாக அம்பலப்பட்டு உள்ளன!

இந்து மதத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகக் கூறி இளைஞர்களை ஈர்த்து அவர்களை இஸ்லாமியர்களுக்கு எதிரான பயங்கரவாத செயல்களில் ஈடுபட பயிற்சி அளித்து, அதன் மூலம் நாடெங்கும் பல குண்டு வெடிப்பு சம்பவங்களை இந்துத்துவ அமைப்புகள் நடத்தி உள்ளன! இதன் விளைவாகத் தான் 2014ல் பாஜக ஆட்சிக்கு வந்தது என்பது தற்போது நிருபணமாகியுள்ளது

யஷ்வந்த் ஷிண்டே என்ற ஆர்.எஸ்.எஸ்சின் 25 ஆண்டு கால நிர்வாகி நீதிமன்றத்தில் தற்போது தந்துள்ள பிரமாண வாக்குமூலம் இந்தியா மட்டுமல்ல, உலக அளவில் பெரும் அதிர்வை உருவாக்கி உள்ளது!

2006 ஆம் ஆண்டில், மகாராஷ்டிராவின் நான்டெட் மாவட்டத்தில், விஸ்வ ஹிந்து பரிசத்தின் இளைஞர் பிரிவான பஜ்ரங் தளத்தின் தொண்டர் ஹிமான்ஷு பான்சே உட்பட இருவர் வெடிகுண்டு வெடித்ததில் இறந்து போயினர். இந்த வழக்கு தொடர்பான விசாரணையிலேயே யஷ் வந்த் ஷிண்டே பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துள்ளார்.

அதில் அவுரங்காபாத் மாவட்டத்தில் உள்ள ஒரு மசூதியைத் தகர்க்க வெடி குண்டு தயார் செய்யும்போது, தவறுதலாக குண்டு வெடித்து, ஹிமான்ஷூ பான்சே இறந்ததாக ஷிண்டே தெரிவித்துள்ளார்.

ஷிண்டே ஆர்எஸ்எஸ்ஸில் முதன்மை மற்றும் இரண்டாம் நிலைப் பயிற்சி பெற்று ஜம்மு காஷ்மீரின் உதம்பூர் மாவட்டத்தில் பிரச்சாரக் ஆகவும், 1999ஆம் ஆண்டில் இருந்து மும்பை பஜ்ரங் தளத்தின் தலைவராக இருந்தவர் என்பது கவனத்திற்கு உரியது. மாணவர் பிரிவான ஏபிவிபியின் கர்ஜனாவுக்காகவும் இவர் பணியாற்றி இருக்கிறார்.

யஷ்வந்த் ஷிண்டே கூறிவற்றில் இருந்து நமக்கு தெரிய வருபவை என்னவென்றால்.

2007 ல் நடந்த ஹைதராபாத் மெக்கா மசூதி குண்டு வெடிப்பு

2007 ல் நடந்த சம்ஜவுதா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பு

2008 மாலேகான் குண்டுவெடிப்பு ஆகியவற்றில் ஆர்.எஸ்.எஸ்சுக்கு இருந்த தொடர்பை மேலும் உறுதிபடுத்தி உள்ளார் யஷ்வந்த் ஷிண்டே!

மேலும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பு பல இளைஞர்களை பயற்சி கொடுத்து ஜம்மு காஷ்மீரில் குண்டுவெடிப்பு சம்பவங்களில் ஈடுபடுத்தியது என்றும் அவர் கூறியுள்ளார்.

# அதிகாரத்தை கைப்பற்றவே ஆர்.எஸ்.எஸ் பயங்கரவாதம்!




இதன் மூலம் காஷ்மீரில் எத்தனையெத்தனை அப்பாவி இஸ்லாமிய இளைஞர்கள் அநியாய மாக கைதாகி தண்டிக்கப்பட்டு இருப்பர் என எண்ணும் போதே நெஞ்சு பதைபதைக்கிறது.

ஷிண்டேவின் இந்த வாக்குமூலத்தில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான தகவல்கள் மகாராஷ்டிர பயங்கரவாத எதிர்ப்புப் படையின் முதல் குற்றப்பத்திரிகையில் இடம்பெற்றுள்ளவை என்பது கவனத்திற்கு உரியது.

மகாராஷ்டிராவின் முன்னாள் ஐ.ஜி யான எஸ்.எம்.முஷ்ரிப் முன்பு சொன்ன வாசகம் தான் தற்போது நினைவுக்கு வருகிறது. "இந்தியாவில் நம்பர் ஒன் பயங்கரவாத இயக்கம் ஆர்.எஸ்.எஸ் தான்! 2015 ஆம் ஆண்டு வரை ஆர்.எஸ்.எஸ் அமைப்பு மீது 13 பயங்கரவாத சம்பவங்களில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு உள்ளன என்பதும், மற்ற இந்து இயக்கங்கள் மீது 17 வழக்குகள் பதிவாகி உள்ளன என்பதும் கவனத்திற்கு உரியதாகும்!"

ஆர்.எஸ்.எஸ் தந்த பயிற்சிக்குப் பிறகு, ஹிமான்ஷு மகாராஷ்டிராவின் மராத்வாடா பகுதியில் மூன்று குண்டு வெடிப்புகளை நிகழ்த்தினார். அடுத்ததாக அவுரங்காபாத்தில் உள்ள முக்கிய மசூதியில் ஒரு பெரிய குண்டு வெடிப்பை நடத்தத் திட்டமிட்டிருந்தார், அந்த குண்டுவெடிப்புக்காக வெடிகுண்டு தயாரிக்கும் போதுதான் அவர் 2006 இல் நான்டெட்டில் உயிர் இழந்தார்" என்று யஷ்வந்த் ஷிண்டே விரிவாக கூறியுள்ளார்.

"நாடு முழுவதும் குண்டுவெடிப்புகளை ஏற்படுத்தும் ஆர்.எஸ்.எஸ் மற்றும் வி.எச்.பியின் திட்டம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி







பெறாததால், பாஜகவுக்கு அரசியல் பலன் கிடைக்க வில்லை. அதன் விளைவாக, 2004 தேர்தலில், பாஜக வெற்றி பெறவில்லை. எனினும், மிலிந்த் பராண்டே போன்ற முக்கிய சதிகாரர்கள் தலைமறைவாக இருந்து கொண்டு ரகசியமாக சதித் திட்டங்களைத் தொடர்ந்தனர், நாடு முழுவதும் பல குண்டுவெடிப்புகளை நடத்தினர்.


மேலும் காவல்துறை மற்றும் ஒரு தலைப் பட்சமான ஊடகங்களின் உதவியுடன் அவர்கள் இஸ்லாமியர்கள் மீது குற்றம் சாட்டினர். அது பாஜகவிற்கு 2014 மக்களவைத் தேர்தலில் உதவியது" என்று பிரமாணப் பத்திரத்தில் விவரிக்கும் யஷ்வந்த் ஷிண்டே, "2014-ல் பாஜக மத்தியில் ஆட்சியைக் கைப்பற்றி நரேந்திர மோடி பிரதமரானார். இதன் விளைவாக பாஜக வின் பின்புலத்தில் செயல்பட்டு வந்த விஸ்வ ஹிந்து பரிஷத் மற்றும் ஆர்எஸ்எஸ் ஆகிய அனைத்து அமைப்புகளும் திடீரென முக்கியத்துவம் பெற்றன'' என்று குறிப்பிடுகிறார்.

இந்து மதம் மிகவும் உன்னதமான மதம் என்று உறுதியாக நம்புவதாக தெரிவித்துள்ள யஷ்வந்த் ஷிண்டே, இந்து மதம் சாத்வீகமானது. பயங்கரவாதத்திற்கு எதிரானது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், கொடூரமான குற்றங்களில் ஈடுபட தான் விரும்பவில்லை என தெரிவித்துள்ள யஷ்வந்த் ஷிண்டே, ஆர்எஸ்எஸ், வி.எச்.பி, பஜ்ரங்தள் போன்ற சில இந்து அமைப்புகள் பாஜகவின் அரசியல் ஆதாயத்திற்காக பயங்கர வாதச் செயல்களில் ஈடுபடுகின்றன என அம்பலப் படுத்தி உள்ளார்!

வெடிகுண்டுகள் வைக்கும் நாசகார செயல்கள் குறித்து, ஆர்எஸ்எஸ் மூத்த நிர்வாகிகள், தற்போதைய தலைவர் மோகன் பகவத் உட்பட பலரிடம் மிலிந்த் பராண்டேவின் சூழ்ச்சிகளைப் பற்றி எச்சரிக்குமாறு பேசி இருக்கிறார் யஷ்வந்த் ஷிண்டே!

ஆனால், அவர்கள் இவர் பேசுவதை கண்டுகொள்ள வில்லை எனவும் பிரமாணப் பத்திரத்தில் யஷ்வந்த் ஷிண்டே குறிப்பிட்டுள்ளார். உண்மையில், இந்தத் தலைவர்களின் அலட்சி யத்தைக் கண்ட பிறகு, ஆர்எஸ்எஸ் மற்றும் வி.எச்.பியின் மூத்த தலைவர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளை மறைமுக மாக ஆதரிக்கின்றார்கள் என்ற உண்மையை உணர்ந்ததாகக் கூறுகிறார் யஷ்வந்த் ஷிண்டே! இதனால் கடந்த *13-14* ஆண்டு களாகநான் செயல்பாடுகளற்ற ஒரு உறுப்பினராக ஆர்.எஸ்.எஸ் சில் தொடர்ந்ததாக தெரிவித் துள்ளார்.

கர்நாடகத்தில் பிஜப்பூர் மாவட்டத்தில் தாசில்தார் அலுவலகத்தில் இரவோடு இரவாக பாகிஸ்தான் கொடியை ஏற்றி, இஸ்லாமியர்கள் மீது பழி போட முயன்ற இந்த காவித்தீவிரவாத கும்பல் மறுநாள் கையும் களவுமாக பிடிபட்டது ஞாபகம் வருகிறது.


**In the Court of :**

**Extra Jt. District and Sessions Judge, Nanded**

**Case No.: Sessions case / 0100014/2007**

**State of Mah v/s Rahul Manohar Pande and others,**

May it please Your Honour,

The applicant, Yashwant Sahdev Shinde, age 49 years, occupation business, residing at 279/C15, Sambhajinagar Society, N.M. Joshi Marg, Mumbai-400013, states on solemn affirmation as follows.

The applicant has been associated with Vishwa Hindu Parishad (VHP), Rashtriya Swayansevak Sangh (RSS) and Bajrang Dal since 1990 i.e. since the time he was 18 years of age. He worked in these organisations in various capacities at the state and national levels.

In early 1990s when he got to know through T.V. and newspapers that Hindus in Jammu and Kashmir were being brutally killed and driven out by terrorists, he went to Jammu in 1994 and met the Himgiri Prant Pracharak of RSS Indresh Kumar. Indreshji appointed him as the 'Vistarak' of Rajauri and Jawaharnagar which were on Pakistan border.

In December 1995 the Ex. C.M. of Jammu and Kashmir Dr. Farooq Abdullah visited Rajouri. The applicant attended the meeting of the local people called by Dr. Abdullah. The applicant was annoyed by one of the statements of Dr. Abdullah which he thought was anti-national and he hit Dr. Abdullah on his face. He was immediately arrested and was taken to Rajouri police station. An offence was registered against him and he was handed over to Terrorism Interrogation Branch of Jammu for further investigation. He was released on bail after 12 days; but was again arrested under the Public Safety Act. He was released from jail after four months. A trial was conducted against him and he was aquitted by the court in 1998.

The applicant had done the preliminary training class of RSS (Prathmik Sangh Shiksha Varg) in 1994. He completed the second level of RSS training class in 1996/97 at Chandigarh. Then he was appointed as the "Pracharak" of Riyasi Tahsil in Udhampur district of Jammu.

1

ஹைதராபாத்திலுள்ள பகதூர்புரா மாவட்டத் திலுள்ள ஹனுமான் கோவிலுக்குள் பஜ்ரங் கதளத்தைச் சேர்ந்த இந்து தீவிரவாதி இளைஞர் மாட்டுக்கறியை வீசிவிட்டு தப்பியோடும் போது போலீசார் பிடித்தது நினைவுக்கு வருகிறது!


அரசியலில் பிரபலம் ஆவதற்காக

# தனது வீட்டிலேயே பெட்ரோல் குண்டு வீசி நாடகமாடிய பா.ஜனதா நிர்வாகி கைது

திண்டுக்கல், ஆக.31– அரசியலில் பிரபலமா வதற்காக தனது வீட்டிலேயே பெட்ரோல் குண்டு வீசிய பாரதீய ஜனதா நிர்வாகி நண்பருடன் கைது செய்யப்பட்டார்.

**பெட்ரோல் குண்டு வீச்சு**

திண்டுக்கல் நகர் செல்லாண்டியம்மன் கோவில் 3–வது தெருவை சேர்ந்தவர் பிரவீண்குமார் (வயது 29). இவர் பாரதிய ஜனதா கட்சியின் 10–வது வார்டு கிளை தலைவராகஇருக்கிறார். கடந்த 28–ந்தேதி வேலை விஷயமாக நண்பருடன் பிரவீண்குமார் வெளியே சென்றுவிட்டார்.

இவர் வாடகை வீட்டில் மேல்மாடியில் வசித்து வருகிறார். நள்ளிரவு சுமார் 12 மணி அளவில் பிரவீண்குமாரின் வீட்டின் மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டது. இதில் அதிர்ஷ்டவசமாக அவருடைய மனைவி சத்யமீனாட்சி காயமின்றி தப்பினார்.

இந்த சம்பவம் தொடர்பாக பிரவீண்குமாரின் செல்போன் செயல்பாடு குறித்து ஆய்வு செய்தனர். அப்போது பிரவீண்குமார் அன்று இரவு வெளியூர்களுக்கு செல்லாமல் திண்டுக்கல்–பழனி பைபாஸ் சாலையில் இருந்தது தெரிந்தது.

**அரசியலில் பிரபலமாக**

இதைத்தொடர்ந்து பிரவீண்குமார், அவரது நண்பர் கமலக்கண்ணன் ஆகியோரிடம் போலீசார் கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தினர். அப்போது 2 பேரும் பெட்ரோல் குண்டை வீசிவிட்டு நாடகமாடியது தெரியவந்தது.

பா.ஜ.க.வில் சாதாரண நிர்வாகியாக இருப்பதால் பிரபலமாவதற்கு விரும்பி தனது வீட்டில் பெட்ரோல் குண்டு வீசியதாக பிரவீண்குமார் கூறினார். இதையடுத்து பிரவீண்குமார், அவருக்கு உதவி செய்த கமலக்கண்ணன் ஆகியோரை மேற்கு போலீசார் கைது செய்தனர்.

நெல்லையில் கோயில் தேருக்கு இந்து அமைப்பு ஒன்று தீவைத்து முஸ்லிம்கள் மீது பழிபோட்டது,

திண்டுக்கல்லில் தன்னுடைய வீட்டின் மீது தானே நள்ளிரவில் பெட்ரோல் குண்டு வீசி, இஸ்லாமிய தீவிரவாதிகளால் தனக்கு ஆபத்து எனக் கூறி கைதான பாஜக நிர்வாகி பிரவீன் குமார் உள்ளிட்ட பல சம்பவங்கள் நினைவுக்கு வருகிறது!

ஆக்கபூர்வமான அரசியலை முற்றிலும் தவிர்த்து, அழிவு அரசியலையே தந்திரோபாய மாகக் கொண்டு, அதிகாரத்தை அடைவது ஒன்றே நோக்கமாகக் கொண்டவை தான் பாஜக மற்றும் அதன் தோழமை இயக்கங்கள்!

**இப்படியான ஒரு தற்கொலை பாதை கொண்ட அரசியல் தான் பாஜக அரசியல் என்ற புரிதல் அனைத்து மக்களுக்கும் ஏற்பட்டால் ஒழிய இதற்கு விமோசனமே இல்லை!**

– சாவித்திரி கண்ணன்

– நன்றி : அறம் இணைய இதழ்



# இந்தியாவில் முஸ்லிம்களாக வாழ்வது தண்டனைக்குரிய குற்றமா?

இப்படி ஒரு கேள்வி எழுப்பினார் கம்யூனிச இயக்கத்தைச் சார்ந்த பிருந்தா கரத் என்ற சகோதரி வினா உரக்க எழுப்பப் பட்ட இடம் நாடாளு மன்றம்..

ஆமாம். நாட்டில் முஸ்லிம்கள் என்றால் கிள்ளுக்கீரைகள். எப்போதும் வேண்டுமானாலும் அவர்களைத் தீவிரவாதிகளாக அறிவித்திடலாம். கண்ட இடங்களில் சுடலாம். யாரும் கேள்வி கேட்க மாட்டார்கள். மட்டுமல்ல முஸ்லிம்களைச் சுட்டுக் கொலை செய்பவர்களுக்கப் பட்டமும் பதவியும் கிடைக்கும் என்றாகிவிட்டது.

பிருந்தா கரத் எழுப்பிய வினாவுக்கு உள் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்க வேண்டும். ஆனால் அதற்கு நாடாளு மன்றத்தில் அவகாசமிருக்கவில்லை. காரணம் எதிர்கட்சியினர் போட்டக் கூச்சலில் குழப்பத்தில் அவை ஒத்தி வைக்கப் பட்டுவிட்டது.

பிருந்தா கரத் அவர்கள் விடவில்லை. அவர்கள் ஓர் கடிதம் மூலம் இந்த வினாவுக் குப் பதில் கேட்டு அனுப்பினார்கள் உள்துறை அமைச்சர் அவர்களிடம்.

உள்துறை அமைச்சர் நீங்கள் கோபப்படும் அளவுக்கு முஸ்லிம்கள் தொல்லைகளுக்கு உள்ளாக்கப்படவில்லை என்கின்றனர் மும்பை காவல்துறையினர் என தொலைபேசியில் பதில் சொன்னார்.

இல்லை. மும்பை அரசு அப்படியொரு ஆணையைப் பிறப்பித்திருக்கின்றது என்று தி ஏசியன் ஏஜ் (The Asian Age) என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது.

ஆணையைப் பிறப்பித்தது யார்? எனக் கேட்டார்.

அதற்கும் சிவராஜ் பாட்டில் அவர்களிடம் பதிலில்லை. ஆனால் மராட்டிய உள்துறை அமைச்சர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணண் அவர்கள் சுதந்திர தினத்தை ஒட்டி இன்னும் பாதுகாப்பைப் பலப்படுத்திடப் பணித்துள்ளார்கள் என்றும் பதில் சொன்னார். ஆனால் எல்லா முஸ்லிம் களையும் சோதனைக்குள்ளாக்கிட சொல்லி ஆணை பிறப்பித்தது யார் என்பதை மட்டும் சொல்லிடவில்லை.

அத்தோடு எல்லா மதத்தைச் சார்ந்த வர்களும் சோதனைக்குள்ளாக்கப்படு கின்றார்கள் என்று கூறி சமாளித்தார்.

பிருந்தா கரத் அவர்கள் 30 பேர் கொண்ட சினிமா குழுவிலிருந்த முஸ்லிமை மட்டுந்தான் சோதனைக்குள்ளாக்கி இருக்கின்றீர்கள்? எனக் கேட்டபோது யாரிடமிருந்தும் எந்தப் பதிலுமில்லை.

People's Democracy,
August 20, 2006, Page 4.

# முன் வேதங்களில் முஹம்மது (ஸல்) பற்றிய முன்னறிவிப்புகள்



ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்
களச்சல்

நபி பெருமானார் பிறப்பு பற்றிய முன்னறி விப்பு படி எமன் நாட்டு துப்பவு அரசரும் நாநூறுயூ தரப்பிகளும் இறுதி நபி தங்கப்போகும் நகர அமைப்பை வைத்து யத்ரிபில் தங்கினார்கள். அரசர் தங்கியவர்கட்கு வீடுகள் கட்டி கொடுத் தார். மேலும் இறுதி நபிக்கு வந்தால் தங்க ஓர் மாடி வீடு கட்டி கடிதம் கொடுத்து அவ்வீட்டை ஓர் யூத ஆலிமிடம் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பு ஒப்படைத்தார்.

யூத ஆலிமை தொடர்ந்து அக்கடிதம் பரம் பரம் பரையாக வந்து அபூ அய்யூபுல் அன்சாரி றலியிடம் வந்து சேர்ந்தது. நபி பிரான் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தபோது அன்னார் ஒட்டகை இச்சகாபி வீட்டின் நேராக படுத்ததால் நபி (ஸல்) அபூ ஐயூபிசகாபி சி.ராசி வீட்டில் தங்கினார். இக்கடிதம் அபுஜயூபி என்னும் சகாபியால் நபிகள் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

**ஹஜ்ரத் ஈஸா (அலை) முன்னறிவிப்பு :**

பிதாவிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்ப போகிறவரும் பிதாவிடமிருந்து புறப்படுகிறவரு மாகிய சத்திய ஆவியாகியான தேர்வாளன் வரும்போது அவர் என்னை குறித்து சாட்சி கொடுப்பார். யோவான் - *15:26*

எனக்குப் பின் வரவேண்டிய தீர்க்கதரிசி ஒருவர் தவிர சர்வ தீர்க்கதரிசிகளும் வந்து விட் டார்கள். அவரின் வருகையை ஆயத்தம் செய்து வைக்கவே நான் வந்தேன். பர்ணபாஸ் - *72:10*

அவருக்கு பின்னால் தீர்க்கதரிசிகள் (எவரும்) வருவதில்லை. பர்ணபாஸ் - *97:87*

அவரின் நாமம் முகம்மது (புகழப்பட்டவர்) என்பது பர்னபாஸ் - *98:7*

அவர் இஸ்மவேலின் கோத்திரத்தில் உள்ளவர். பர்னபாஸ் - *142:17*

தேற்றரவாளன் என்பது ஹீப்ரு மொழியின் மூலச்சொல்லுக்குரிய சரியான அர்த்தமல்ல. அது அஹ்மது என்ற ஓர் பெயர் சொல்லாகும். இது சீரிய மொழியில் அல்முஹமன்னா என மொழி பெயர்க்கப்பட்டது. இது கிரேக்க பாஷையில் "பாரகலீத்" என மொழி பெயர்க்கப்பட்டது. பாரகலீத் என்றால் அஹ்மது முஹம்மது தான் உண்மை பொருளாகும்.

**ஈஸா அலைஹி பற்றி நபி பிரான் சொன்ன முன்னறிவிப்பு :**

* எவன் கைவசம் என் உயிர் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக மர்யம் (அலை) அவர்களின் மகனார் ஈசா அலைஹி அண்மையில் உங்களுக்கிடையே தலைவராகவும், நீதம் புரிவரா கவும் இறங்குவார்கள். பின்னர் சிலுவையை முறிப்பார்கள். மேலும் பன்றிகளை கொன்றும் விடுவார்கள். திறையை நிறுத்தி விடுவார்கள்.

அறிவிப்பானர் : அபூஹுரைரா (ரலி),
நூல் - புகாரி, முஸ்லீம்

**புத்தமதத்தில் முன்னறிவிப்பு :**

ஜெர்மனியில் பிறந்து இலங்கையை தாயக மாகக் கொண்ட திரு ஞானதிலோகா சான்னும் புத்தபிட்சு தமது புத்தரின் வார்த்தைகள் என்ற நூலின் கௌதம புத்தரின் வார்த்தைகள் என்ற நூலில் புத்தர் கூறியதாக எழுதியிருப்பதாவது நான் முதல் புத்தரோ அல்லது கடைசி புத்தர முல்ல. ஆனால் கடைசியில் "மைத்ரேயர்" புத்தரு வருவார். புத்தர் என்பதின் பொருள் ஞான வெளிச்சம் பெற்றவர். உண்மை விளங்கப் பெற்றவர். மைத்ரேயா என்றால் அருள் நிறைந் தவர் "நிக்கஹ்நிகாயா" என்னும் புராதான புத்தகிரந்தத்தில் இறுதி தீர்க்க தரிசி பெயர் "மைத்ரேயா" (மெத்தியா) என பெயர் குறிப்பிட் டுள்ளது. அதாவது அவர் அருளானவர் என்பது பொருளாகும்.

திருமறையும் நபியை, உலகோர்க்கு நபியே உம்மை அருளாக அனுப்பியிருக்கிறோம் என குறிப்பிடுகிறது.

**ஹிந்துவே தங்களில் முன்னறிவிப்பு :**

நபிகள் நாயகம் பிறப்பதற்கும் 3500 ஆண்டுகளுக்கு முன்பே வியாச முனிவரால் இயற்றப் பட்ட பவிஷ்ய புராணத்தில் வியாசர் கூறுகிறார்.

"ஏதஸ் மின்னந்தரே மிலேச்ச ஆச்சாரியன ஸமன்வித மஹாமத் இதிக்கியசாதா சிஷிய சாஹாஸ்பன்னித நிருட்சேவ மஹாதேவ மருஸ்தல நிவாஸினம். (ப. புராணம் பாகம்-3 சூத்-3, சுலோகம் 5,8.)

ஒரு மனிதர் எழுத படிக்க தெரியாதவர் (உம்மி) அவருடைய திருநாமம் முகம்மது என்பதாகும். தமது தோழர்களுடன் தோன்றுவார். அவர் பிறக்கும் பகுதி பாலைவனப் பிரதேசமாக இருப்பார்.

லிங்கசேதிசிகாஹீன சுமச்சுறுதாரி ஸதூஷகா உச்சாவாபிஸர்வ பபவிஷ்யதி ஜனேமம் முஸலை நைஸ் மஸ்காரா. பவி புராணம் பாகம் 3, சூத் 3, சுலோகம் 25. அவர்கள் சுன்னத் செய்வார்கள். தலையில் குடுமியிருக்காது. மாறாக தாடி வைத்திருப்பார்கள். பன்றி இறைச்சி நீங்க லாசர்னைய மாமிசங்கனை புசிப்பார்கள். தங்களுடைய வழிபாடு நேரங்களில் மக்களை சப்தம் போட்டு அழைப்பார்கள். அவர்கள் முஸலை (முஸ்லிம்) யென் அறியப்படுவார்கள்.

அதர்வணவே தம் அல்லோ உபநிஸத்தில் பின்வருமாறு காணப்படுகிறது. அல்லாஜியேஷ்டம் பரமம் பூரணம் பிரஹ்மான அல்லாம்,

அல்லோரஸலாம மஹாமத் கபர்ய அல்லோ அலையாம் ஆதல்லா பூக மேகம் அல்லா பஞ்ஞென ஹுதா ஹிருத்தவா அல்லா சந்திர நக்ஷத்திரம் அல்லாரிஷிணாம சூய சர்வதில் இந்திராய பூர்வமாய் பரமந்தரீக்ஷா வியாம் அல்லா பிறுத்திவ்யா அந்தரிஷம் விசுவரூபம் இல்லாம் கபரகில்லாம் இல்லல்ல நீ இல்லல்லா, ஓம் அல்லா இல்லல்லா அனாதிஸ்வருபா அத்தர் வணா சியாமா சியாமாளய்ம் ஹிரீம் ஜனான பகன் ஸித்தான் ஜல்சாரண் அதிஷ்டம் குருகுரு புட்ஸபாடை ஸமஹாரிணிஹூம் ஹிரீம் அல்லா ரசூலமஹமத்கபரிஸ்ய

அல்லா முழுமையானவன் பூரணமானவன் எல்லா பிரபஞ்சமும் அவனுடையது, மஹாமத் அல்லாஹ்வுடைய திருத்தூதராக (றசூலாக) இருக்கிறார்.

அல்லா அல்லாம் (இறைவா! இறைவா!!) பூமியை இயக்குகின்ற இறைவனான அவனே பூமியின் பரிபாலகனும் சிருஷ்டி கர்த்தாவும் ஆவான். இறைவன் ஒருவனன்றி வேறில்லை.

அரூபியான இறைவனின் ஓங்கார நாதத்தை பாருங்கள். ஓம் ஹரீம் மந்திரங்களனங்கிய அதர்வண வேதத்தை இறக்கிய இறைவனே, மக்களையும், பசுக்களையும் மற்றவற்றையும் படைத்தார். அரூபியான அந்த இறைவனையே துதி செய்யுங்கள். ஓம் ஹரீம் மந்திரம் மூலம் அசுரவர்க்கத்தை அழிக்கு மஹாமத் அல்லாகுவின் தூதராவார். ஏக இறைவனை தவிர வேறில்லை.

அல்லா உபநிஷத் 1-10

கிரேக்க நாட்டில் ஏகத்தத்துவத்தைப் போதித்த சாக்ரடீஸ் மிக சிறந்த நபி ஒருவர் தோன்றுவார். மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலுள்ள உரிமைகளை கடமைகளை நன்கு விளக்குவார்கள் என்று சொன்னார்.

நபிகள் நாயகம் பிறக்கப் போவதை அன்னார் பிறப்பதற்கு எத்துனையோ ஆண்டுகளுக்கு முன் வேதங்களில் தெளிவுற கூறப்பட்டுள்ளது. இதனை பார்த்த நபிகள் நாயகத்தை வழி காட்டியாக ஏற்றனர்.

முன் வேதங்களில் நபிகள் நாயகம் பிறப்பு, பிறக்கும் பூமி, நபியின் தோற்றம் தோழர்கள் புடை சூழ இருத்தல் வித்தியசமான அடையாளம் பற்றிய குறிப்பு தெளிவுற இறையால் முன்னறிவிப்பு செய்யப்பட்டு இதனை நேரிடையா கண்ட மக்கள் அன்னாரின் உற்ற தோழர்களாக ஆனார்கள் ஏன்? போகர் சப்தகாண்டத்தில் அவர் ஆகாய மார்கம் செல்லும் போது நபியும் தோழர்களும் மக்காபடுதிமேலே ஓர் இடத்தில் வீற்றிருப்பதைப் பார்த்து நேராக கீழ் இறங்கி நபியை சந்தித்ததாக போகர் சப்த காண்டத்தில் காணப்படுகிறது. தன் தோழர் பிலிப்பானிக்கு போக முனி சொல்வதாக காணப்படுகிறது. போகர் சைன தேசத்து முனிவரென்றும் இவர் மருத்துவம் பற்றி எழுதிய பாடல் வரிகளிலிருந்து அறிய முடிகிறது. இது பற்றிய பாடல் வரிகள் புத்தகமாக என்னிடமுள்ளது.

நபிகள் நாயகம் விழா நடக்கும் இப்போது அன்னாரைப்பற்றி நம் நாட்டு வேதங்களிலும், சொல்லப்பட்ட முன்னறிவிப்பை நினைவு கூறுவது அன்னார் மீது நமக்கும் ஏனையோருக்கும் நேசமும் பாசமும் ஏற்படும்.



- அல்லாமா அபுல் ஹஸன் அலி நத்வி (ரஹ்)

- தமிழில் மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி

# சந்தித்துக் கொண்ட இருபெரும் நாகரிகங்கள்

### இப்ராஹீமிய்ய நாகரிகத்தின் இதர பகுதிகள்

இதற்கு முன்னர் கூறிய, உலகத்தில் உள்ள அனைத்து முஸ்லிம்களும் கடைப்பிடித்து வாழும் இப்ராஹீமிய்ய நாகரிகத்தின் தலையாய சிறப்பம்சங்களை தாண்டி இன்னும் அதற்குரித்தான இதர பகுதிகள் உண்டு.

எல்லா நற்காரியங்களிலும் வலது கரத்தை முற்படுத்துவது குறிப்பாக உணவருந்தும் போது, தண்ணீர் பருகும் போது, கொடுக்கும்போது, பிறரிடம் வாங்கும்போது, ஆடை அணியும் போது ஆகிய அனைத்திற்கும் வலது கரத்தை பயன்படுத்துவது.

உடலை முழுக்க மறைக்கும் வண்ணம் ஆடை உடுத்துவது, குறிப்பாக ஆண்கள் கீழ் ஆடையை முழங்கால் வரை மறைத்து கரண்டை கால் வெளிப்படும் விதத்தில் ஆடைகள் அணிவது. அதேபோல பட்டாடை அணிவது ஆண்களுக்கு தடுக்கப்பட்டது. அனைத்து இடங்களிலும் தூய்மையை பேணி நடப்பது. எங்கெல்லாம் இஸ்லாமிய நாகரிகம் வாழ்கிறதோ அங்கெல்லாம் இவையனைத்தும் கண்டிப்பாக பின்பற்றப்படும். ஒருக்கால் இது கடைப்பிடிக்கப்படவில்லை என்றால் அந்த இடத்தில் சீரழிவு தலைத்தூக்கியதாகவே கருதப்படும்.

### நுண்கலைகள் குறித்து முஸ்லிம்களின் நிலைப்பாடு

சத்தியத்தை விரும்புதல், உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருத்தல், நுண்கலைகள் குறித்து நடுநிலையான நிலைப்பாடு கொண்டிருத்தலுமே இந்த நாகரிகத்தின் சிறப்பியல்புகள். பொதுவாக இஸ்லாமிய நாகரிகம், கலைகளையும், அதன் அழகையும், வசீகரத்தையும் மதிக்கிறது வரவேற்கிறது. ஆனால் கலைகள் என்ற பெயரில் ஐரோப்பிய நாடுகளில் கருதப்படும் நடனம், விலங்குகளின் ஓவியங்கள், சிலை வடிப்பது இதனை இந்த நாகரிகம் முற்றிலும் புறக்கணிக்கிறது. இன்னும் இசை போன்ற சில விஷயங்களில் பேணுதலோடும் எச்சரிக்கையோடும் இருத்தல் வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இது போன்ற விஷயங்களில் ஒருக் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு பயன் அடைவதேக் கூடும்.

ஆனால் அதில் மூழ்குவது இஸ்லாமிய அடிப்படை கோட்பாடுகளின், இலட்சியங்களின் ஆன்மாவிற்கு எதிரான செயல். அதே போல இறைவனை அச்சப்படுவதில், மறுமைக்கு முக்கியத்துவம் அளிப்பதில், முஸ்லிமிடம் எதிர்பார்க்கப்படும் ஒழுக்க மதிப்பீட்டின் விஷயத்திலும் இது மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

இந்த விஷயத்தில் இஸ்லாமிய ஷரீஅத் கண்டிப்பும் எச்சரிக்கையும் விடுக்காமல் இருந்திருந்தால் நெடுங் காலமாகவே இசையை வணக்க வழிபாடுகளில் ஒன்றாக கருதியும் அதனை மிகவும் நேசித்தும் வாழும் பிற சமூகங்களுக்கு மத்தியில், முஸ்லிம்கள் இந்த விஷயத்தில் இதுபோன்ற நடுநிலையான சிறப்பியல்பை கொண்டிருக்க மாட்டார்கள்.

## இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்கள்

இப்ராஹிமிய்ய நாகரிகத்தின் மீது இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்கள் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அவற்றில் சில ஒற்றுமை, சமத்துவம், விருந்தோம்பல், விசாலமான உள்ளம், தயாளத்தன்மை. இவையனைத்தும் இந்த நாகரிகத்தின் நிறுவனர் இப்ராஹிம் (அலை) அவர்களிடமிருந்த இயல்பான குணங்கள். இப்ராஹிம் (அலை) அவர்களை அல்லாஹ் இவ்வாறே புகழ்கிறான் :

"நபியே இப்ராஹிமுடைய மிக்க கண்ணியமுள்ள விருந்தினர்களின் விஷயம் உங்களுக்கு தெரியுமா?"

இப்ராஹிம் (அலை) அவர்களோடு கொள்கையாலும் இனத்தாலும் ஒன்றிணையும் எல்லா சமூகங்களிலும் இப்ராஹிமிய்ய நாகரிகத்தின் தாக்கம் இருக்கும். அதிலும் குறிப்பாக விருந்தோம்பல் என்ற நல்லறத்தின் பால் அவர்கள் காட்டும் தனிப் பெரும் முக்கியத்துவம் வெளிப்படும்.இந்த அற்புத வழக்கம் எல்லா காலத்தில் வாழ்ந்த வரலாற்று ஆசிரியர்கள், பிரபல பிரயாணிகளின் கவனத்தை ஈர்த்தது. அதனை அவர்களது நினைவலைகளிலும், நினைவுக் குறிப்பிலும் பதிவு செய்தார்கள்.

மத்திய கிழக்கு நாடுகளில் மேற்கத்திய தாக்கம் வீரியமாக இருக்கும் இந்த காலத்திலும் கூட இந்த விருந்தோம்பல் என்னும் மரபை இன்றும் நம்மால் காண முடிகிறது.

இப்னு பதூதா மற்றும் இப்னு ஜுபைர் போன்ற உலகம் சுற்றிய பிரயாணிகள் தங்களது பயணங்களில் தாங்கள் பயணிகள் என்ற எண்ணத்தை மறக்கடித்ததே இந்த விருந்தோம்பல்கள்தான்.

இஸ்லாம் அதன் நாகரிகத்தின் தலைமைக் கேந்திரத்தை விட்டும் இந்திய முஸ்லிம்கள் வெகுத் தொலைவில் இருந்தாலும் பிறச் சமூகத்திற்கு மத்தியில் வாழும் முஸ்லிம்கள் விருந்தோம்பல் விஷயத்தில் தனித்துவம் மிகுந்தவர்களாக திகழ்கிறார்கள். இன்றும் முஸ்லிம்களது இல்லங்களில் வாழையடி வாழையாக இந்த விருந்தோம்பல் பழக்கமான பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. என்னதான் பொருளாதார நெருக்கடி பல் இளித்தாலும் தனது வீட்டிற்கு விருந்தாளி வந்துவிட்டால் இன்முகத்துடன் அவர்களுக்கு விருந்துபச்சாரம் செய்வது தனக்கு கிடைத்த பாக்கியமாகவும் இஸ்லாமிய சிறப்பியல்புகளில் ஒரு சிறப்பியல்பாகவுமே கருதுகிறான்.

## இஸ்லாமிய நாகரிகத்தின் மீது இந்தியாவின் தாக்கம்

இந்திய நாட்டோடும் பல்சமயத்தை பின்பற்றி வாழும் மக்களோடும் நெடுங்காலமாக முஸ்லிம்கள் இணைந்து வாழ்ந்து வருவதால் அவர்களிடத்திலும் அவர்களது நாகரிகத்திலும் இந்திய கலாச்சாரத்தின் தாக்கம் தெளிவாக வெளிப்படுகிறது.இந்த இரண்டின் கலவையாக உருவாகிய பல விஷயங்கள் நினைவுச் சின்னங்களாக இன்றும் விளங்குகிறது அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறோம்

1) உருது மொழி : இலக்கிய வளமிக்க எளிமையான மொழி உருது மொழி. அரபு, ஃபார்ஸி, துருக்கி, சமஸ்கிருதம் ஆகிய 4 மொழிகளின் கலவையே இந்த மொழி. இன்னும் இந்த மொழி சிந்தனை செறிவு நிறைந்த இனிமையான மொழி என்றும் பிரபல்யமானது.

2) இந்திய - இஸ்லாமிய கலவையால் உருவாகிய ஆடைகள் : உயர்தட்டு மக்கள் சாதாரண மக்கள் என அனைவர் அணியக் கூடிய ஆடைகளிலும் இந்த கலவை வெளிப்பட்டது. இந்தியப் படைப்பான இந்த ஆடைகள் அழகையும் இரசனையையும் பிரதிபலித்தது. முகலாயர்களின் கடைசிக் காலக்கட்டத்தில் டில்லி, லக்னோ, ஹைதராபாத் போன்ற நகரங்களின் சமூக கட்டமைப்பும் நாகரிக கட்டமைப்பும் இந்திய இஸ்லாமிய கலாச்சாரத்தின் அறிவுச் செழுமையை, வசீகரத்தை, அழகை பக்கத்திற்கு பக்கம் வெளிப்படுத்தியது.

3) பெற்றோர்களை பெரிதும் மதிப்பது அவர்கள் முன்பு மிகுந்த கண்ணியத்தோடும் மரியாதையோடும் நடந்துக் கொள்வது.

4) பெண்கள் தங்களை முழுமையாக மறைத்து கொள்வதில் மிகுந்த முக்கியத்துவம் அளிப்பது. அவர்களுக்கென்றே வகுக்கப்பட்ட வாழ்வியல் நெறிமுறைகள். இந்திய முஸ்லிம்கள் கொண்டிருக்க கூடிய இதுபோன்ற சிறப்பம்சத்தை குறித்து மற்ற நாடுகளில் வாழும் முஸ்லிம்கள் அறியாமலே இருக்கிறார்கள்.

5) ஒரே குடும்பத்தில் திருமணம் முடித்து கொள்வது. குடும்பத்தை விடுத்து வெளியில் திருமணம் செய்து கொள்வதிலிருந்து தங்களை

முழுமையாக விலக்கிக் கொண்டார்கள். இது இந்தியாவில் உள்ள இஸ்லாமிய கலாச்சாரத்தின் சிறப்பம்சம்.

மற்ற நாடுகளில் வாழும் முஸ்லிம்கள் அந்தஸ் தாலோ செல்வத்தாலோ உயர்ந்து இருந்தால் மட்டுமே தங்களது குடும்பத்திற்குள் திருமணம் முடித்து கொள்வார்கள். பெரும்பாலும் குடும்பத் திற்குள் திருமணம் முடித்து கொள்ளும் வழக்கம் அவர்களிடத்தில் இல்லை. இதனால் இந்த வழகத்தை பின்பற்றும் இந்திய முஸ்லிம்களை ஆச்சிரியத்தோடு பார்க்கிறார்கள். இது இந்தியர் களுக்கே உரித்தான சிறப்பியல்பு என்று கருதுகிறார்கள்.

6) சுபக் காரியங்கள் துக்க காரியங்களுக்கு அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் அளிப்பது. அதிலும் குறிப்பாக திருமணம் போன்ற சுப காரியங்களுக்கு அளவுக்கு அதிகமாக ஊதாரித் தனமாக செலவுச் செய்வது. இது இந்திய சமூகத் திற்கே உரித்தான பண்பு. இந்தியாவில் வாழ்ந்த முஸ்லிம்களையும் இந்த வழக்கம் உள்வாங்கிக் கொண்டது. இதுபோன்ற காரியங்களை சாதார ணமாக நடத்தி முடிக்க வேண்டும் என்ற இஸ்லாமிய வழிகாட்டல் இருந்தும் இந்திய முஸ்லிம்களிடத்தில் இந்த பழக்கம் காணப்படு வதற்கு இதுவே காரணம்.

7) முதலாளிக்கும் தொழிலாளிக்கும் மத்தி யில் ஏற்பட்ட பாகுபாடு. ஏதோ அவர்களிருவரும் மாறுப்பபட்ட இனத்தைச் சார்ந்தவர் போல அவர்களிருவருக்கும் மத்தியில் சில சமயம் தீண்டாமைச் சமூகத்தைப் போன்ற உறவு அவர்களுக்கு மத்தியில் நிலவியது. இவையனைத் திற்கும் முதன்மையான காரணம் இந்திய நாட்டில் இஸ்லாமிய நாகரிகத்தின் வீழ்ச்சி.

அதேபோல சாதியக் கட்டமைப்பு, அதிகார திமிர், அந்நியக் கலாச்சாரத்தின் தாக்கம் இன்னும் குறிப்பாக சனாதன தர்மம் என்ற பெயரில் தொழிலின் அடிப்படையில் எப்போதும் மக்களை பிரித்தாளும் சூழ்ச்சி.

நெடுங்காலமாக தன் மீது இஸ்லாமிய நாகரிகம் வாழ்ந்து வந்ததால் இந்திய முஸ்லிம் களுக்கு இந்நாடு அற்புதமான பரிசை வழங்கியது. பெருமைக் கொள்ள தகுதிவாய்ந்த இதுபோன்ற பரிசிற்கு ஈடான பரிசை உலகில் வாழும் வெறெந்த முஸ்லிம்களும் பெறவில்லை. அதுவே மேற்கத்திய நாகரிகத்தின் ஊடுறுவலுக்கு எதிராக செய்த போராட்டம்.

இந்த போராட்டத்தில் தங்களது எதிரியை உறுதியாக வலுவான ஆற்றலோடு எதிர்த்தார்கள். இதே நேரத்தில் தங்களது ஆளுமைத் திறனை, தனித்துவத்தையும் பாதுகாத்தார்கள். தங்களது ஆழமான சிந்தனையையும் தஸவ்வுஃப் மீது அவர்கள் கொண்டிருந்த உறவையும் பாதுகாத் தார்கள். இவையனைத்தும் இந்த நாட்டில் பல நூற்றாண்டுகளாக வேரூன்றிய (இஸ்லாமிய) சமூக, அறிவுசார், மற்றும் கலாச்சார காரணி களின் விளைவே. இதன் மூலமாக புதுமையான இந்திய இஸ்லாமிய நாகரிகத்திற்கு அடித்தள மிட்டார்கள்.

இதற்கும் மேலாக ஒரே நேரத்தில் சர்வதேச இஸ்லாமிய கலாச்சாரத்தையும் இந்திய கலாச் சாரத்தையும் கலந்த ஒரு புதுவித கலவையை உருவாக்கினார்கள்.

இந்தியாவில் நுழைந்த இஸ்லாமிய கலாச் சாரம் மற்றும் ஒழுக்க விழுமியங்கள் சில உருமாற்றத்தை சந்தித்துள்ளன. இஸ்லாமிய நாகரி கத்தைப் போலவே, அன்னிய நாடுகளிலிருந்து இந்தியாவை வந்தடைந்த மற்ற நாகரிகத்தோடு ஒப்பிடுகையில் இது மிகவும் குறைவு.

முகலாயர்கள் காலத்தில் இஸ்லாமிய நாகரி கத்தைப் போன்ற மிகப் பெரும் நாகரிகம் இந்திய நாகரிகத்திலிருந்து சிலவற்றை உள்வாங்கிக் கொண்டது நல்ல முஸ்லிம்களிடத்தில் மிகப் பெரும் வருத்தத்தை ஏற்படுத்தியது.

அல்தாஃப் ஹஸன் ஹாலி போன்ற மிகப் பெரும் இஸ்லாமிய கவிஞர் கூட இந்த விஷயத்தில் இந்தியாவை கடிந்து கவிதை படைத்துள்ளார்.

பொதுவாக இரண்டு நாகரிகங்கள் சந்திக்கும் போது, ஒன்று மற்றொன்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவது அல்லது ஒன்று மற்றொன்றை உள்வாங்குவது இயல்பு. இரண்டு நாகரிகங்கள் சந்திக்கும் போது தாக்கம் ஏற்படாமல் இருப்பது மிகவும் அரிதான ஒன்றாகும். இது மனித சமூக வரலாற்றின் இயல்புக்கு ஒவ்வாதது.

பொதுவாக மனித சமூகத்தின் வாழ்வு கொடுத் தல் பெற்றுக் கொள்ளுதல் என்ற உன்னதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது.

நிச்சயமாக இதுவே மனித சமூகத்தின் வளர்ச்சி, பரிணாமம், முன்னேற்றம் அடைவதின் இரகசியம்.

தொடரும்.......

ரஷ்யா, உக்ரைன் போர் கடந்த பல மாதமாக நடந்துவருவதை உலகம் அறியும். போருக்கான காரணம் உக்ரைன் நேட்டோ நட்பு நாடுகளில் சேருவதாக சொன்னதை அடுத்து ரஷ்யா உக்ரைன் மீது போர் தொடுத்தது.

முதலில் ரஷ்யா எளிதில் வெற்றிபெறும் என எதிர்பார்த்த நிலையில் போர் சில வாரங்கள், மாதங்களாக நடந்து வருகிறது.

வடக்கு மற்றும் மேற்கு உக்ரைனில் ரஷ்ய படைக்கு பெரும் சேதம் ஏற்பட்டது. குறிப்பாக தலைநகர் “கிவிவ்” கைப்பற்ற முயன்ற போது பெரும் உயிர், பொருள் சேதம் ஏற்பட்டது.

இதனால் தன் படையை அப்பகுதியில் இருந்து திரும்ப பெற்று கிழக்கு பகுதியில் இருந்து தாக்கு தலை நடத்தியது.

ரஷ்ய தோல்விக்கு முக்கிய காரணம் துருக்கி நாட்டின் பைராக்டர் டிபி-2 என்ற ஆளில்லா விமானமே.

இந்நிலையில் ரஷ்ய ஈரானில் இருந்து டிரோன் வாங்க ஒப்பந்தம் செய்தது. இந்த டிரோன்கள் கடந்த செப்டம்பர் முதல் ரஷ்ய படையால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த டிரோன்கள் உக்ரைன் படைக்கு பெரும் சேதத்தை விளைவித்தது. இதில் உக்ரைன் படையின் விமான எதிர்ப்பு பீரங்கி, விமான எதிர்ப்பு ரேடார்கள் இன்னும் ராக்கெட் கிடங்குகள் என பெரும் சேதத்தை ஒடிசா Odesa நகரில் ஏற்படுத்தியது.

மேலும் உக்ரைன் நாடும் ஒடிசா பகுதியில் ரஷ்ய தாக்குதலில் பெரும் சேதம் அடைந்ததை ஒத்து கொண்டுள்ளது.

ஈரான் தந்த சாஹித்-135, மௌஹஜர் (Mohajer-6) போன்ற போர் விமானங்கள் கடும் சேதத்தை உக்ரைனுக்கு விளைவித்தது.

இதில் சாஹித்-135, 2000 கிலோ மீட்டர் வரை பறந்து சென்று துல்லியமாக தாக்கும் திறன் படைத்தது.

இந்த டிரோன் மிக குறைந்த விலையில் தயாரிக்கப்பட்டவை அதாவது 1000 டாலருக்குள்.

இதன் முக்கோண வடிவம் தொலை தூரத்தில் உள்ள இலக்கை துல்லியமாக தாக்கும் திறன் படைத்தது.

மௌஹஜர்-6 இஸ்ரேலின் நெமிசிஸ் டிரோனுக்கு எதிராக உருவாக்கப்பட்டது.

இந்த டிரோன் வடிவமைப்பாளர், மூளையாக இருப்பவர் ஹமித்ரிசா ஷரீபி இன்ஜினியர்.



### துருக்கி - ஈரான்

# ஆயுதங்களின் வெற்றி

## ரஷ்யா - உக்ரைன் போர்



இவர் பல ஆண்டு இதன் ஆராய்ச்சியில் ஈடுபட்டு இத்தாலி, ஆஸ்திரேலிய நாடுகளுக்கு சென்று கான்பிரன்ஸ்-ல் கலந்துகொண்டு பயிற்சி எடுத்து கொண்டவர்.

சாஹித்-129, ஆஸ்திரேலிய ரோடெக்ஸ் 914 இன்ஜினின் வடிவமைப்பு கொண்டது. இது ஏமன்-ல் பயன்படுத்தி உள்ளது ஈரான்.

இதே மாடலில் சீனாவின் டிஎல்-111 இன்ஜின் பயன்படுத்தி உள்ளது.

இதன் சர்வோ மோட்டோர் தென் கொரிய நாட்டை சார்ந்தது.

இதை எல்லாம் (அலிபாபா, இபே மூலம்) முலப் பொருட்கள் வெறும் 500 டாலருக்கு வாங்கி இந்த டிரோன்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் சுவீடனின் டெல்ட்டா விங் நிறுவனம் சில பாகங்களை இந்திய உணவு பொருள் நிறுவனத்தின் மூலம் ஈரானுக்கு தரப்பட்டதை ஐ.நா கண்காணிப்பு பிரிவு கண்டறிந்துள்ளது.

மேலும் 92 வது பிரிகேடை சேர்ந்த கமாண்டர் ரேடியன் குல்கைன் ஈரானின் ட்ரோன் 4 விமான எதிர்ப்பு பீரங்கி,

Two152 -mm, two -132 விமான எதிர்ப்பு ஏவுணை வீசும் அமைப்பை தகர்த்தை வால்ஸ் டிரீட் பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

ஸ்காட் கிரினோ நிறுவனர் Red six solution கூறும்போது,

ஈரான் ட்ரோன் ரஷ்யாவுக்கு பக்கபலமாக இருக்கிறது, அமெரிக்க தொழில்நுட்ப ஆயுதங் களுக்கு பெரும் சவாலாக உள்ளது, மேலும் உக்ரைன் போர்களம் பெரிதாக உள்ளதால் சாஹித்-136 தாக்குதலை தடுத்து நிறுத்துவது கஷ்டம். மேலும் சாஹித்-129 ஓடிசா நகரின் பல கட்டிடங்களை தாக்கி சேதத்தை உண்டாக்கி யுள்ளது.

இந்நிலையில் கிரிமியாவுக்கு ஈரான் தன் படையை அனுப்பி ரஷ்ய வீரர்களுக்கு பயிற்சி அளிக்க இருப்பதை டைம்ஸ் ஆப் இஸ்ரேல் தெரிவித்ததை மற்ற ஊடகமும் உறுதி செய்துள்ளன.

இதனால் கோபமடைந்த அமெரிக்க மேலும் ஈரான் மீது பொருளாதார தடை விதித்தது.

“எங்களுடைய நவீன ஏவுகணை,டுரோன்களின் படத்தை வெளியிட்ட போது அதை போட்டோ ஷாப் என மேற்கத்திய நாடுகள் சொல்லின, இப்போது ஈரான் ஆயுதம் விற்பதாக சொல் கின்றன” என அந்நாட்டின் இஸ்லாமியக் குடியரசு தலைவர் கொமேனி கூறியுள்ளார்.

அமெரிக்க, இஸ்ரேல் ஈரான் மீது போர் தொடுப்பதாக சொல்லி வந்த நிலையில் ஈரானின் இந்த ட்ரோன் தொழில்நுட்பம் கிலியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இதை ஈரான் தங்களுக்கு எதிராக பயன்படுத்தினால், பெரும் சேதம் இஸ்ரேலுக்கு ஏற்படும் என்பதை அறிந்து கலங்கியுள்ளது.

உக்ரைன் இஸ்ரேலிடம் ஆயுதம் கேட்க அதுதன் விமான எதிர்ப்பு அயர்ன் ட்ரோன் மட்டும் தரப்போவதாக சொல்லியுள்ளது.

இதனிடையே நியூயார்க் பத்திரிக்கை அமெரிக்க, சீன - ரஷ்ய இடையே பதட்டம் அதிகமாகியுள்ள நிலையில், அமெரிக்க ராணுவம் பலகீனமாக உள்ளது என்றும் ஒரு யுத்தத்திலும் வெற்றி பெறாது என்றும் கூறியுள்ளது.

**திருச்சி முகமது இக்பால்**

**தொடர்**

# பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்



## மும்பை புறநகர் இரயில் தொடர் குண்டு வெடிப்பு வழக்கு 11 ஜுலை 2006 (7/11)

ஏனெனில் அப்போதைக்கு அவர்கள் மேல் மோக்கா சட்டத்தின் (mcoca) கீழ் வழக்கு பதியப்படவில்லை. காவல்துறையினர் இந்த அபாயத்தை எதிர்கொள்ள தயாராக இல்லை. எனவே, தீவிரவாதத் தடுப்புப்படையினர், காவல் துறையின் மூத்த அதிகாரியின் முன் குற்றம் சாட்டப்பட்டவர்களின் வாக்குமூலத்தை வாங்க வழி செய்யும் வகையில் மூத்த காவல்துறை அதிகாரிகள் முன் கொடுக்கப்படும் வாக்கு மூலமே போதுமானது என்று சொல்லும் மோக்கா சட்டத்தின் கீழ் வழக்கு பதியப்பட்டது. மோக்கா சட்டத்தின் கீழ் வழக்கு பதியப்பட்ட ஒருசில நாட்களில் காவல்துறை துணை ஆணையர் குற்றம் சாட்டப்பட்ட 11 பேர்களின் வாக்குமூலத்தை பதிவு செய்தார்.

வாக்குமூலத்தை பதிவு செய்த பெரும் பான்மையான துணை ஆணையர்கள் இந்த வழக்கு விசாரணையில் தீவிரவாதத் தடுப்புப் படையினருக்கு உதவி செய்து கொண்டிருந்த வர்கள் என்பதை அப்போதைய காவல்துறை ஆணையாளர் (கமிஷனர்) ஏ.என்.ராய் அவர்கள் தனது சாட்சியத்தின் போது நீதிமன்றத்தில் கூறி யுள்ளார். இந்த வழக்கில் துணை ஆணையர் களுக்கும் ஏதோ ஆர்வம் உண்டு என்பதே இதன் அர்த்தம். இது ஒப்புதல் வாக்குமூலம் சுதந்திர மான, பாரபட்சமில்லாத அதிகாரியின் முன்பு தான் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற தன்மைக்கு முரணானது.

எல்லா ஒப்புதல் வாக்குமூலங்களிலும் ஆரம்பகட்ட கேள்விகளும், பதில்களும் வெவ்வேறு துணை ஆணையர்களால் பதிவு செய்யப்பட்டது. துணை ஆணையர்களின் குறிப்புகளும், அவர்களின் கையொப்பமிட்ட சான்றிதழ்களும் பெரும்பாலும் ஒன்றிலிருந்து மற்றொன்று காப்பியடித்து (copy paste) ஒட்ட வைக்கப்பட்டவை. இன்னும் அதிகமாக சொல்வ தென்றால் ஒரே மாதிரியான தவறுகள், அடித்தல் திருத்தல்கள், மாற்றங்கள் அனைத்து வாக்கு மூலங்களிலும் இருந்தன. சுருக்கமாக சொல்வ தென்றால், ஏழு துணை ஆணையர்களும் ஒரே மாதிரியான தவறுகளை, ஒரே மாதிரியான திருத்தங்களை, ஒரே மாதிரியான மாற்றங்களை செய்துள்ளார்கள். குறுக்கீடு : எல்லா ஒப்புதல் வாக்குமூலங்களும் தீவிரவாதத்தடுப்புப் படை யினரால் உருவாக்கப்பட்டு காவல்துறை துணை ஆணையர்களிடம் அவர்களின் சம்பிரதாயங் களுக்காக அனுப்பப்பட்டன.

ஒப்புதல் வாக்குமூலங்கள் பதிவு செய்யப் பட்ட பின்னர் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அதில் கையொப்பம் இடும் முன்னரே அவர்கள் மீண்டும் தீவிரவாதத் தடுப்புப்படையினரின் காவலில் அனுப்பி வைக்கப்பட்டனர். ஒருவேளை இடைப்பட்ட காலத்தில் நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டால் அவர்கள் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பமிட மறுத்து விடக் கூடும் என்று பயந்தே இவ்வாறு செய்யப்பட் டுள்ளது. எனவே, இந்த ஒப்புதல் வாக்குமூலங்கள் தானாக முன் வந்து கொடுக்கப்பட்டவை என சொல்ல இயலாது.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் மனிதத் தன்மையற்ற மூன்றாம் நிலை சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர் என்பது அவர்களு டைய மருத்துவ சான்றுகள், மருத்துவமனையில் வெளி நோயாளிகள் துறையின் பதிவுகளை காணும்போது தெளிவாகிறது. அவை பின்வருமாறு:

### கமால் அஹ்மத் அன்சாரி (ஏ1)– இன் மருத்துவ பதிவுகள்

*15, ஆகஸ்ட், 2006:* மயக்கம், காது வலி, காது கேட்கவில்லை. *23, செப்டம்பர், 2006:* நோயாளி யின் முனகல், அடிவயிற்றுக்கும் இடுப்புக்கும் இடைப்பட்ட பகுதியில் (groin) வலி, அடி வயிற்று கவட்டை பகுதியில் ஊசி குத்துவது போன்ற வலி, அவசர மருத்துவ பதிவாளரிடம் அனுப்பப்பட்டார். விதைக் கொட்டையில் எட்டி மிதிப்பதன் காரணமாக இதுபோன்ற காயங்கள் ஏற்படும் என மருத்துவ அதிகாரி டாக்டர் கோந்த் அவர்கள் குறுக்கு விசாரணையின் போது ஏற்றுக்கொண்டார்.


*25, செப்டம்பர், 2006:* அன்றைய தினத்தின் ஆரம்பத்தில் இரண்டு முறை வாந்தி எடுத்தார். நோயாளி தன் அடிவயிற்றிலும், கவட்டையிலும், முதுகு வலி இருப்பதாக புகார் அளித்திருந்தார். எக்ஸ்ரே எடுக்க அறிவுறுத்தப்பட்டது. அறுவை சிகிச்சை பதிவாளரிடம் அனுப்பப்பட்டார். (H1க்கு 23 செப்டம்பர் 2006 அன்றும் 25 செப்டம்பர் 2005 அன்றும் சிகிச்சை அளித்த டாக்டர் டாங்கேவும் டாக்டர் அமித் ஷர்மாவும் விசாரணை செய்யப்படவில்லை.)

*27, செப்டம்பர், 2006:* அடிவயிற்றுவலியுடன் கூடிய முதுகு வலி கடந்த 5 நாட்களாக இருந்தது.

முக்கியமான விஷயம் என்னவென்றால் இதற்கு நான்கு நாட்களுக்கு பின்னர், அதாவது 1, அக்டோபர் 2006 அன்று குற்றம் சாட்டப்பட்ட ஏ1 ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க தன் விருப் பத்தை தெரிவித்தார். அது அக்டோபர், 3ம் தேதியும் அக்டோபர், 4ம் தேதியும் பதிவு செய்யப்பட்டது.

### தன்வீர் அன்சாரி (ஏ2)–இன் மருத்துவ பதிவுகள்

*26 செப்டம்பர், 2006:* இரண்டு முறை வயிற்றுப் போக்கு மற்றும் அடிவயிற்று வலி.




### ஷேக் முஹம்மது அலி ஆலம் (ஏ6)–இன் மருத்துவ பதிவுகள்

*3 அக்டோபர், 2006 :* தோள்பட்டை வலி குறித்து புகார். எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணரிடம் அனுப்பப்பட்டார். (மருத்துவ அதிகாரி டாக்டர். கோந்த் அவர்கள் இப்படிப் பட்ட தோள் வலி ஒரு நபரை கைகளைக் கயிற்றால் கட்டி உயரத்தில் தொங்கவிடுவதால் ஏற்படும் என்று ஏற்றுக் கொண்டார்)

*19 அக்டோபர், 2006 :* மயக்கம் குறித்து புகார், இடது தோள்பட்டை பகுதியில் வலி

### முஸம்மில் ஷேக் (ஏ9)–இன் மருத்துவ பதிவுகள்

*26, செப்டம்பர், 2006 :* இரண்டு முறை வயிற்றுப்போக்கு

### சுஹைல் ஷேக் (ஏ10)–இன் மருத்துவ பதிவுகள்

*27, ஜூலை 2006 :* கடந்த 6 மணி நேரமாக இடது பக்கத்தில் நெஞ்சு வலி குறித்து புகார். ஒருவகையான இடது புற நெஞ்சு வலி இடது கை வரை பாய்ந்தது. நிபுணர்களுக்கு பரிந்துரைக்

*கப்பட்டது.*

### ஸமீர் அஹ்மத் ஷேக் (ஏ11)–இன் மருத்துவ பதிவுகள்

*3, ஆகஸ்ட், 2006 : இரண்டு முறை வயிற்றுப் போக்கு*

*2, செப்டம்பர், 2006 : கீழ் உதட்டில் சீழ் வைத்த புண். மூன்று நாட்களாக காய்ச்சல். சிறப்பு மருத்துவருக்கு பரிந்துரைக் கப்பட்டார்.*

*22, செப்டம்பர், 2006 : வயிற்று போக்கு மற்றும் வாந்தி*

### முஹம்மது ஸஜ்ஜாத் அன்சாரி (ஏ7)–இன் மருத்துவ பதிவுகள்

*24, அக்டோபர், 2006 : நோயாளி மயக்க மானார்.*

*25 அக்டோபர், 2006 : மயக்கம் குறித்து புகார்.*

*22, அக்டோபர், 2006 அன்று அவர் அவரு டைய இல்லத்திற்கு தேடுதலுக்காக கொண்டு செல்லப்பட்டார். அவருடைய தாய் அவருடைய இரண்டு கண்களின் கீழேயும் தழும்புகளைப் பார்த்தார். முகம் வீங்கியிருந்ததையும் கண்டார். அவருடைய இரண்டு கைகளின் தோலும் உரிந்திருந்தது. அவர் நொண்டி நொண்டி நடந்தார். எனவே, குற்றம் சாட்டப்பட்டவரின் தாய் நீதிமன்றத்தில் 24, அக்டோபர், 2006 அன்று ஒரு மனுவை (miscellaneous application) 302/06 தாக்கல் செய்தார். நீதிமன்றம் ஜே.ஜே. மருத்துவ மனைக்கு குற்றம் சாட்டப்பட்டவர் அனுப்பப் பட்டு முழு உடல் பரிசோதனை செய்யப்பட வேண்டும் என உத்தரவிட்டது.*

*பரிசோதனையில் 11 காயங்கள் கண்டறியப் பட்டன. (8 இடங்களில் நசுக்கப்பட்டும், இரண்டு இடங்களில் காயப்பட்டு பின்னர் ஆறிய காய்ந்த தோல்களும், இரண்டு பிட்டங்களிலும் (உட்காரு மிடம்) தோல் உரிந்தும் காணப்பட்டன.) இவை அனைத்தும் 5 முதல் 7 நாட்களுக்குள்ளாக உருவானவை. அதாவது காவல்துறையின் கட்டுப் பாட்டில் விசாரணையில் இருந்தபோது ஏற்பட்டவை.*

*ஓரிரு நாட்களுக்கு பிறகு குற்றம் சாட்டப் பட்டவர் நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தப் பட்டபோது, பின்வரும் ஆணையை மகிழ்வுடன் பிறப்பித்தது, 'அக்டோபர் 25, 26ம் தேதிகளில் காவல் துறையினர் தாக்கியதாக குற்றம் சாட்டப் பட்டவர் எந்த புகாரையும் அளிக்கவில்லை. எனவே, அவருடைய தாயார் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டு குற்றம் சாட்டப் பட்டவர் நீதிமன்ற காவலுக்கு மாற்றம் செய்யப்படுகிறார்.'*

### ஆசிப் கான் பஷீர் கான் (ஏ13)–இன் மருத்துவ பதிவுகள்

*13, அக்டோபர், 2006 அன்று ஏ3 மருத்துவ மனையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப் பட்டார். அவர் நிபுணர்களிடம் சிகிச்சை பெற பரிந்துரைக்கப்பட்டார். அதாவது விசாரணைக் காக அவசர மருத்துவ பிரிவுக்குள் அனுமதிக்கப் பட்டார். (ஆனால் இங்கு என்ன கண்டறியப் பட்டது என்பது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வில்லை.)*

*குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஏற்பட்டி ருந்த காயங்களிலிருந்தும் அவர்கள் தங்களுக்கு ஏற்பட்டிருந்த பிரச்னைகள் குறித்து தந்திருந்த புகார்களிலிருந்தும் அவர்கள் எத்தகைய சித்ர வதையை எந்த அளவிற்கு அனுபவித்தார்கள் என்பதை ஒருவர் புரிந்து கொள்ள இயலும். இப்படிப்பட்ட மனிதத் தன்மையற்ற சித்ரவதை களை அனுபவித்த ஒருசில நாட்களில் அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க முன்வந்ததில் இருந்தே இந்த ஒப்புதல் வாக்குமூலங்கள் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அவர்களாக முன்வந்து தந்த வாக்குமூலங்கள் கிடையாது, கட்டாயப்படுத்தி வாங்கப்பட்டது என்பதை யூகிக்க போதுமானது.*

*குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 313ன் கீழ் (சி.ஆர்.பி.சி.) தங்களின் ஒப்புதல் வாக்கு மூலத்தை திரும்பப் பெற குற்றம் சாட்டப்பட்ட வர்களின் தரப்பில் எழுத்துப்பூர்வமான மனு அளிக்கப்பட்டது. அதில் தங்களை தீவிரவாதத் தடுப்புப் படையினர் நீதிமன்றத்தின் முன்பாக அல்லது நீதிபதியின் முன்பாக காவலில் எடுப்ப தற்காக, மருத்துவ சிகிச்சைக்கு அனுப்புவதற் காக ஆஜர்படுத்தும்போதெல்லாம் தாங்கள் சித்வரதை செய்யப்பட்டதை அல்லது அடிக்கப்பட்டதை குறித்து புகார் அளிக்கக்கூடாது என மிரட்டி இருந்தார்கள் என்று கூறியிருந்தனர்.*

*குற்றம் சாட்டப்பட்டவர்கள் அடைந்திருந்த காயங்களின் தன்மைகள், அவர்களில் சிலர் உயிருக்கு ஆபத்தான நிலையை அடைந்தது*

ஆகியவற்றை கருத்தில் கொண்டு பார்க்கும் போது அவர்கள் நீதிமன்றத்திலோ அல்லது மருத்துவ அதிகாரிகளிடமோ தங்களுக்கு நேர்ந்த சித்ர வதைகள், கொடுமைகள் குறித்து புகார் அளிக் காமல் இருந்திருக்க வாய்ப்பே இல்லை. ஆனால் நீதிமன்றபதிவுகளிலோ அல்லது மருத்துவ பதிவு களிலோ இதுபோன்ற புகார்கள் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. இந்த உண்மையே தீவிரவாதத் தடுப்புப் படையினர் குற்றம் சாட்டப் பட்டவர்களை தங்களுக்கு எதிராக எந்த புகாரும் தரக்கூடாது என்று முன் கூட்டியே எச்சரிக்கை செய்தார்கள் என்ற அவர்களின் கூற்றினை நம்புவதற்கு போதுமானது. எனினும் மாண்புமிக்க நீதிமன்றம் அதனுடைய தீர்ப்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் கூற்றினை இவ்வாறு கூறி நிராகரித்திருந்தது. 'குற்றம் சாட்டப் பட்டவர்கள் நீதிமன்றத்தின் முன்பாகவோ அல்லது மருத்துவ அதிகாரிகள் முன்பாகவோ புகார் அளிக்காத வரை அவர்கள் மோசமாக நடத்தப்பட்டார்கள் என்று அனுமானிக்க முடியாது'. இவ்வாறு கூறி அவர்களின் ஒப்புதல் வாக்குமூலத்தை தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலம் தான் என்று ஏற்றுக் கொண்டது.

## ஒப்புதல் வாக்குமூலத்தை திரும்ப பெற்றுக்கொள்ளும் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை

ஒப்புதல் வாக்குமூலத்தை திரும்பப் பெற வேண்டும் என்ற குற்றம் சாட்டப்பட்டவர்களின் கோரிக்கையை நீதிமன்றம் பின் வருமாறு கூறி நிராகரித்தது, 'ஒப்புதல் வாக்குமூலங்கள் தானாக முன்வந்து கொடுக்கப்பட்டவை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.'

## பறிமுதல் செய்யப்பட்ட, மீட்கப்பட்ட பொருட்கள்

காவல்துறை ஆர்.டி.எக்ஸ், ஆர்.டி.எக்ஸை உபயோகிக்கும் பொருட்கள், இரசாயனங்கள், அச்சிடப்பட்ட சர்க்யூட் போர்டுகள், வெடிக்க வைக்க தூண்டும் பொருட்கள், குக்கர் பகுதிகள், மாருதி கார் போன்றவற்றை மீட்டது. நீதிமன்றம் இந்த பறிமுதல்களை உண்மையென கூறிய 'காவல்துறையினரின் நுணுக்கமான ஏற்றுக் கொள்ளத்தக்க ஆதாரங்கள் மற்றும் யாருக்கு முன்னால் தேடுதல் நடத்தப்பட்டதோ அவர் களின் சாட்சியங்கள், தேடுதல் நடந்த இடத்தின் குற்றக்காட்சிகளின் விவரங்கள் நேரங்கள் குறித்த



பதிவுகள் (பஞ்சநாமா)' ஆகியவற்றின் அடிப் படையில் மட்டுமே எடுத்துக்கொண்டதாக தெரிகிறது. அது காவல் அதிகாரிகளால் காவல் நிலையத்தை விட்டு பறிமுதலுக்கு செல்வதற்கு முன் எழுதுகின்ற காவல்நிலைய நாட்குறிப்பு பதிவுகளுக்கும், பறிமுதலைமுடித்துவிட்டு காவல் நிலையத்திற்கு திரும்பிய பின்னர் எழுதுகின்ற நாட்குறிப்பு பதிவுகளுக்கும் தேவையற்ற முக்கியத்துவத்தை கொடுத்துள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் உண்மை என்பதை பின்வருமாறு கூறி ஏற்றுக்கொள்கிறது 'சமகால பதிவுகளாகிய காவல்நிலைய நாட்குறிப்புகளில் உள்ள பதிவுகள் தேடுதல் வேட்டை நடத்தப் பட்டதையும் பொருட்கள் கைப்பற்றப்பட்ட தையும் உறுதிப் படுத்துகின்றன.'

உண்மையான பஞ்சநாமாவை விட காவல்துறையினரால் மோசடியாக உருவாக் கப்படுகின்ற பஞ்சநாமாக்களின் விவரங்களும் நேரங்களும் மிகச் சரியாக இருக்கும் என்பது நீதிபதிக்கு தெரிந்திருக்கும். காவல்நிலைய நாட் குறிப்பை பொறுத்தவரை அது ஒன்றும் புனித நூலும் அல்ல, அது எப்போதும் உண்மையை நடந்தது நடந்தவாறு எப்படி நடந்தது என்று சொல்வதும் இல்லை. அது முழுக்க முழுக்க காவல்துயின் ஆவணம். அது காவலர்களால் எழுதப்பட்டு காவல்நிலையத்தில் வைக்கப்பட்டு அதன் பிரதிகள் காவல் அதிகாரிகளுக்கு அனுப் பப்படுகிறது. அதனை காவல்துறையினரின் தேவைக்கேற்ப உருவாக்க முடியும், மாற்றப்பட முடியும், அல்லது விருப்பத்திற்கேற்ப இடைச் செருகல் செய்யப்படமுடியும்.

எனவே, பஞ்சநாமாக்களின் மற்றும் காவல் நிலைய நாட் குறிப்புகளின் அடிப்படையில் மட்டும் பறிமுதல் செய்யப்பட்டது உண்மை யென நீதிமன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்பட் டிருக்கக்கூடாது. உண்மையில், பறிமுதல் குறித்து கீழே சொல்லப்பட்டுள்ள பல்வேறு சூழ்நிலைகள், காரணிகள் மீட்கப்பட்ட பொருட்கள் குறித்தும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் குறித்தும் அதிகாரிகளால் எழுதப்பட்டிருந்த குறிப்புகளின் உண்மைத் தன்மையை அலங்கோலப்படுத்திக் கொண்டிருந்தன.

ஏ3−இன் விஷயத்தில் குக்கரின் வளையங்கள், ரப்பர் வளையங்கள், மின்சார வயர்கள், சர்க் யூட்டுகள், ஆர்.டி.எக்ஸ். தடயங்களை கொண்ட பிளாஸ்டிக் பைகள் போன்றவற்றைக் கொண்ட ஒரு பை சம்பவம் நடந்த மூன்று மாதங்களுக்குப் பிறகு அதுவும் ரயில்வே தண்டவாளத்திற்கு ஏழு எட்டு அடிகளுக்கு அருகில் கண்டெடுக்கப் பட்டது. இவ்வளவு சுறுசுறுப்பான ரயில்வே நிலையத்தின் அருகில் இப்படி ஒரு பை ஒரு நாள் கூட கிடக்க முடியாது.

ஏ12−இன் விஷயத்தில் ஆர்.டி.எக்ஸ் வெடி குண்டை எடுத்துச் செல்ல உபயோகிக்கப்பட்ட மாருதி கார் குண்டுவெடிப்பு நடந்து மூன்று மாதங்கள் பதினோரு நாட்களுக்கு பின்னர் பறிமுதல் செய்யப்பட்டது. ஆனாலும் அந்த காரில் ஆர்.டி.எக்ஸ் வெடிப்பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டதற்கான தடயங்கள் இன்னமும் இருந்தன. ஆச்சரியப்படும் விதமாக அந்த காரினை அதற்குப் பின் உபயோகப்படுத் திக்கொண்டிருந்த காரின் ஓட்டுநர் ‘ரிஸ்வான் கோட்‘ நீதி மன்றத்தில் அரசு தரப்பால் விசாரணை செய்யப்படவேயில்லை அதற்கு சொல்லப் பட்ட காரணம் மிக அற்பமானது. அதாவது அந்த கார் ஓட்டுனர் கொடுக்கப்பட்ட முகவரியில் இல்லை என்பதே அந்த காரணம்.

ஏ13−ன் விஷயத்தில் வெள்ளை தூள், வெடி குண்டு தூண்டிகள் (டெட்டனேட்டர்), ஆர்.டி.எக்ஸ். போன்றவை கண்டெடுக்கப் பட்டன. இதில் பஞ்சநாமா (குற்றம் நடந்த அல்லது பொருட்கள் கைப்பற்றப்படும் போது அந்த சம்பவம் குறித்து காவல்துறையால் எழுதப்படும் குறிப்பு) சாட்சியான கேவல் சொந்த ஜெயின் என்பவரின் பின்னணியை ஆராய்ந்தால் அவர் ஒரு கிரிமினல் குற்றவாளி. மற்றொரு பஞ்சநாமா சாட்சியான ஜிதேந்திர ஜெயின் என்பவர் இதே போன்று பல்வேறு காவல்துறை வழக்குகளில் பஞ்சநாமா சாட்சியாக நடித்தவர்.

வெடிகுண்டை நேரத்தில் வெடிக்க வைக்கும் வெடிகுண்டு டைமர் சர்க்யூட்டுகள் ஏ7− இடம் இருந்து கைப்பற்றப்பட்ட விஷயத்தில் பஞ்ச நாமாவின் பாஞ்ச் சாட்சி ராஜு ஏற்கனவே இதே போன்ற பல்வேறு வழக்குகளில் பாஞ்ச் சாட்சியாக இருந்தவர். இவர் விரும்பத்தகாத நடத்தையை கொண்டவர். இவர் குற்றவியல் நடைமுறை சட்டத்தின் (Cr.PC) கீழ் தன்னுடைய நன்னடத்தைக்காக பத்திரம் (காவல்துறையினர் தீயநடத்தைகொண்டஒருவரிடம்நான்ஒழுங்காக நடப்பேன், அதனை நீங்கள் குறிப்பிட்ட காலம் வரை கண்காணிக்கலாம் என்று பத்திரத்தாளில் எழுதி வாங்குவது. இவ்வாறு மூன்று வருடம் வரை கண்காணிக்கலாம்) எழுதிக் கொடுத்தவர்.

இன்ஷா அல்லாஹ் தொடரும்....



# புராணங்களை வரலாறாக திணிக்கக் கூடாது



## அலசுகிறார் வரலாற்றாளர் ரொமிலா தாப்பர்

ராமனைக் கும்பிடுகிறவர்கள் வால்மீகி ராமாயணத்தை அல்லது வேறெந்த ராமாயணத்தை வேண்டுமானாலும் நம்பட்டும் அது அவர்கள் நம்பிக்கை. ஆனால் தங்கள் நம்பிக்கையை நியாயப்படுத்துவதற்காக வரலாற்றைத் திரித்திடக் கூடாது என்று வரலாற்று அறிஞர் பேரா. ரொமிலா தாப்பர் கூறினார்.

அயோத்தி நம்பிக்கையாளர்களின் நகரம், நம்பிக் கையற்றவர்களின் நகரம் (Ayodhya City of Faith, Ciry of Discord) என்ற தலைப்பில் அயோத்தி நகரத்தின் வரலாறு வலைசிங் என்பவரால் புத்தகமாக வெளியிடப்பட்டிருக்கிறது

இப்புத்தகத்தின் வெளியீட்டு விழா இந்தியன் கலாச்சார மன்றத்தின் (Indian Cultural Forum) சார்பில் புதுடில்லியில் 14-6-2019 அன்று நடைபெற்றது.

விழாவில் கலந்துகொண்டு பேரா. ரொமிலா தாப்பர் பேசியதாவது

அயோத்தி கடந்த ஆயிரமாயிரம் ஆண்டுகளில் பலவிதமான கடவுள் நம்பிக்கையாளர்கள் வணங்கும் இடமாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் அது வன்முறை வெறியாட்டங்கள் நடைபெற்ற இடமாகவும் இருந்து வந்திருக்கிறது வலைசிங் தன்னுடைய இந்நூலில் சுமார் 3300 ஆண்டுகால அயோத்தியின் வரலாற்றை விவரித்திருக்கிறார்.

இந்த 3300 ஆண்டுகளில் எண்ணற்ற அரசர்கள், முஸ்லீம் மன்னர்கள் துறவிகள் மற்றும் சீர்திருத்த வாதிகள் வாழ்ந்த இடமுமாக அயோத்தி இருந்திருக்கிறது. அத்தகைய அயோத்தி இன்றைய தினம் இந்திய அரசியல் மற்றும் அரசியல் கற்பனையின் மய்யமாகவும் மாறியிருக்க அயோத்தியில் பிறந்ததாகக் கூறப்படும் ராமனின் வரலாறு என்ன? வரலாறு வேறு கடவுள் நம்பிக்கை வேறு. இரண்டையும் போட்டுக் குழப்பிக்கொள்ளக்கூடாது


இரண்டுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அறிந்துகொள்வது அவசியமாகும். வலைசிங் இந்தப் புத்தகத்தில் அயோத்தி பற்றி கடவுள் நம்பிக்கையில் உருவாகியுள்ள கதையிலிருந்து உண்மையான வரலாற்றை மிகவும் சிறப்பான முறையில் பிரித்துக் காண்பித்திருக்கிறார். அதற்காக அவரை மிகவும் பாராட்டுகிறேன். ஒரு வரலாற்றாசிரியர் என்ற முறையில் ராமன் இங்கே பிறந்தான் என்பதற்கான வரலாற்றுச் சான்று எதுவும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், வால்மீகி ராமாயணத்தை பல சமூகத்தினரும் தமதாக்கிக் கொண்டிருக்கிறார்கள் கேரளாவில் மாப்பிள்ளை ராமாயணம் என்பது முஸ்லிம்களின் ராமாயணமாகும்.

அதேபோல் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஒருவித ராமாயணம் மக்கள் மத்தியில் இருந்து வருகிறது. புத்த மதத்தின் ஜாதகக் கதைகள் பல, வால்மீகி ராமாயணத்தில் இடம் பெற்றிருக்கின்றன.! இப்படி பல ராமாயணங்கள் உள்ளன. அதில் ஒரு ராமாயணத்தில் ராவணனை லட்சுமணன்தான் கொல்கிறான். பல ராமாயணங்களில் ராவணன் அரக்கன் அல்ல. மாறாக அவனை மனிதனாகத்தான் சித்தரித்திருக்கிறார்கள். இவ்வாறு ராமனைக் குறித்து உள்ள ராமாயணங்களில் ராமனைக் கும்பிடுகிறவர்கள் தாங்கள் விரும்பும் எந்த ராமாயணத்தை வேண்டுமானாலும் நம்பிவிட்டுப் போகட்டும். இது அவர்களின் கடவுள் நம்பிக்கை சம்பந்தப்பட்ட விஷயம் ஆனால் அதற்காக அவர்கள் எப்போதும் வரலாற்றைப் பயன்படுத்தக் கூடாது. இவ்வாறு பேரா. ரொமிலா தாப்பர் கூறினார்.

# காருண்ய நபியை கண்ணியப்படுத்திய கலீஃபா!

உஸ்மானிய்யா பேரரசை பெரும் குழப்பங்களும் பிரச்சனைகளும் சூழ்ந்திருந்த தருணத்தில் சுல்தான் அப்துல் ஹமீத் ஸானி (ரஹ்) ஆட்சி பொறுப்பேற்றார்.

இப்படிப்பட்ட அசாதாரண சூழ்நிலையிலும் இஸ்லாமிய கொடியின் கீழ் அனைத்து முஸ்லிம்களையும் ஒன்றுத் திரட்ட தனது முழு ஆற்றலையும் பயன்படுத்தினார். இதற்கு பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகளை மேற்கொண்டார்.அதில் ஒரு முக்கியமான



பணி இஸ்தான்பூலிலிருந்து மதீனா வரை ஒரு இரயில் பாதையை உருவாக்கினார். எதிரிகளின் தாக்குதலிலிருந்து புனித பூமியை பாதுகாப்பதற்காகவும், ஹஜ் பயணிகளுக்கு பயணத்தை இலகுப்படுத்துவதற்காகவும் இந்த பணி மேற்கொள்ளப்பட்டது.


இந்த இரயில் பாதை உருவாக்கப்பட்டதில் நாம் கவனிக்க வேண்டிய சில முக்கியமான விஷயங்கள்.இந்த இரயில் பாதை முழுக்க முஸ்லிம் பொறியாளர்களாலும் வேலையாட்களாலும் மட்டுமே கட்டப்பட்டது. 1908 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 -இல் இரயில்பாதை அமைக்கும் பணி மதீனாவை அடைந்ததும் சுல்தான் அப்துல் ஹமீது ஸானி (ரஹ்) அவர்கள் "இரயில் பாதை மதீனாவை அடைய 30 கிமீ முன்பிருந்து மதீனா இரயில் நிலையம் வரை உள்ள தண்டவாளம் முழுக்க கம்பளி துணியை விரிக்குமாறு கட்டளையிட்டார்.

ஏன்?

துயில் கொண்டிருக்கும் நபி (ஸல்) அவர்களை இடையூறு செய்யாத வண்ணம் இரயில் வண்டியானது மதீனா இரயில் நிலையத்தின் நடைமேடையை வேகமாக வந்தடையாமல் மெதுவாக, நிதானமாக வந்தடைய வேண்டும் என்பதற்காகவே இந்த பிரம்மாண்ட ஏற்பாடு. பிறகு பயணிகள் இது நபிகளாரின் பாதம் பட்ட பூமி என்ற எண்ணத்தில் பொறுமையாகவும்,கண்ணிய உணர்வோடும் இரயிலிலிருந்து இறங்கி காலால் நடந்தேச் செல்வார்கள்.

இரயில் (30 கி.மீ பரப்பளவு கொண்ட) பாதையின் மீது விரிக்கப்பட்ட அந்த கம்பளித் துணிகள் தினம்தோறும் ஒருக் குறிப்பிட்ட நேரத்தில் பன்னீரால் சுத்தம் செய்யப்படும். இவையனைத்தும் நபி வாழும் மாமதீனாவை கண்ணியப்படுத்தும் விதமாக சுல்தான் அப்துல் ஹமீது ஸானி (ரஹ்) மேற்கொண்ட பணிகள்.

மூலம் : குலூபுன் இஹ்தரகத் ஃபி ஹுப்பி ரசூல்
முனைவர் ராகிப் ஸர்ஜானி
தமிழில் : மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி





# பர்தா அணியும் பெண்களிடம் யாரும் வம்பு, தும்புக்கு வருவதில்லை!

செப். 2001 அன்று நியூயார்க்கின் உலக வர்த்தக மையத்தின் மீது அடையாளம் தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் பிறகு இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் மீது உலக மக்களின் பார்வை திரும்பியது.

முஸ்லிம்கள் தீவிரவாதிகளா என்பதை அறியும் ஆர்வம் ஏற்பட்டது. அதிலும் குறிப்பாக அமெரிக்கா, ஆப்கன் மீது பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு ஆப்கானிஸ்தானுக்கு விடுதலை வாங்கித் தந்ததாகப் பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டது.

அந்த நேரத்திலும் ஆப்கானிஸ்தான் பெண்கள் தங்களது பாரம்பரிய உடையைத் தரித்து பர்தா வைக் கடைப்பிடித்தது உலகுக்கு அதிர்ச்சியூட்டியது.

பர்தா குறித்து உண்மையிலேயே முஸ்லிம்கள் பெண்மணிகள் என்ன நினைக்கிறார்கள் என்ற ஓர் ஆய்வை Savvy என்ற ஆங்கில இதழ் (பிப். 2002 நடத்தியது.) அதன் தமிழாக்கமே இது.

பெரும்பாலான முஸ்லிம் பெண்கள் அதிலும் குறிப்பாக படித்த இளம் பெண்கள், வேலை பார்க்கும் பெண்கள், குடும்பத் தலைவிகள் இவர்கள் எல்லாம் பர்தா அணிவதை ஒரு கண்ணியமான - மரியாதைக்குரிய - செயலாகத் தான் கருதுகிறார்கள்.

**இர்யம் அன்சாரி** (40) மும்பை பந்தான புறநகர்ப் பகுதியிலிருக்கும் புகழ் பெற்ற உருது பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறார். இவர் கடந்த 18 ஆண்டு களாக பர்தா அணிகிறார்.

"என் வீட்டில் யாருக்கும் புர்கா அணியும் பழக்கம் இல்லை. புர்கா நானும் அணிவேன் என்று நினைத்துக்கூட பார்த்ததில்லை. ஒருநாள் தோழி ஒருத்தி என் வீட்டுக்கு வந்தாள். அவள் புர்கா அணிந்திருந்தாள். அவள்தான் எனக்கு புர்கா பற்றி சொன்னாள். இது சம்பந்தமான திருக்குர்ஆன். வசனங்களையும், ஹதீஸ்களையும் (நபிகளாரின் போதனைகள்) விரிவாக எடுத்துரைத்தாள், அந்த வார்த்தைகள் என் மனதில் ஆழமாகப்பதிந்தன. அன்றிலிருந்து நானும் புர்கா அணிய ஆரம்பித்தேன்.

- தனக்கு புர்கா அறிவூட்டிய தோழியை நன்றியோடு நினைவு கூர்கிறார் இர்யம்.

**ஸமீரா ஹஸன்** (25) கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் துறையைச் சேர்ந்தவர். புர்கா அணிவதில்லை. ஆனால், அணிபவர்கள் மீது ஒரு தனி மரியாதை வைத்திருக்கிறார். அவருடைய கருத்து இது அணிவது அவரவர் கடமையாக்கி இருக்கின்றது.

"புர்கா விருப்பத்தைப் பொறுத்த விஷயம். (ஆனால் இஸ்லாம் பெண்கள் புர்கா அணிவதைக் கடமையாக்கி இருக்கின்றது.) அவர்களாகவே விரும்பி அணிந்தால் அதன் பெருமையும், புனிதத் தன்மையும். அதை அணிவதால் பெண்ணுக்குக் கிடைக்கும் மரியாதையும் புரிந்துகொள்ள முடியும். திணிப்பு சுமையாகி விடும். அதே நேரத்தில் எனக்கு ஒரு விஷயம் மட்டும். விளங்கவில்லை.

முஸ்லிம் பெண்கள் புர்காவை 'விரும்பி ஏற்பதை மக்கள் ஏன் ஒப்புக்கொள்வதில்லை என்பது தான் அது. "ஆனால் முஸ்லிம் பெண்கள் புர்கா அணிவதை மிகவும் வசதியானதாகவும், மகிழ்ச்சியானதாகவுமே கருதுகிறார்கள்" என்கிறார் அவர் தொடர்ந்து.

"இன்று எல்லோருக்கும் புர்கா (இஸ்லாமிய ஆடை) மேல் ஏற்பட்டு இருக்கும் வெறுப்புக்குக் காரணம் மீடியாதான் என்பதை நான் உணர் கிறேன். அண்மையில் நமது மீடியா ஆப்கானிஸ் தானில் பெண்கள் பர்தாவை - இஸ்லாமிய ஆடை களைத் தூக்கி வீசி விட்டார்கள் என்றொரு செய்தியைப் பரப்பின.

ஏனெனில் இப்போது (வெளிப்படை யாகச் சொன்னால் தாலிபானின் ஆட்சிக் குப் பின்னால்) பர்தா அணிவது கட்டா யக் கடமை இல்லையே என்று காரணமும் சொல்லி இருக்கிறது.

இது ஆப்கானிஸ்தானில் கட்டாயப்படுத்தப் பட்டதால்தான் பெண்கள் இஸ்லாமிய ஆடையை அணிகின்றார்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றது. இது உண்மையல்ல. (முஸ்லிம் பெண்கள் தாங்களாக விரும்பித்தான் இஸ்லாமிய ஆடைகளை அணிகின்றார்கள்)" என்கிறார் ஸமீரா விரிவாக.

"உங்கள் குழந்தை ஏழு வயதை எட்டி விடும் போது தொழுகையை நிறைவேற்றிடும் படி அவர்களை ஏவுங்கள். அவர்கள் பத்து வயதை எட்டி விடும்போது தொழுகையைத் தவற விட்டால் அவர்களை அடியுங்கள். இந்த வயதை அடைந்ததும் அவர்களின் படுத்கையைத் தனித்து அமையுங்கள்." - நூல் : முஸ்லிம்

தந்தை தன் மக்களுக்கு அளிக்கும் அன்பளிப்பு களில் மிகச் சிறந்தது அவர்களுக்கு அளித்திடும் நல்ல கல்வியும் நல்லொழுக்கப் பயிற்சியுமாகும்.
நபிமொழி - நூல் : மிஷ்காத்

**இது உங்கள் குழந்தைக்காக நீங்கள் செய்ய வேண்டியது!**

குழந்தைகளின் முன் பேசும்போது எச்சரிக்கை யுடன் பேசுங்கள்.

கணவரை பெண் குழந்தைகளின் முன் திட்டு வதைத் தவிருங்கள். இதனால் தந்தை மகள் உறவே பாதிக்கும் அபாயம் உள்ளது. இது உங்கள் கணவனை உங்கள் குழந்தைகளின் முன் வில்லனாகக் காட்டிவிடும். குரோதங்களை அவர்களின் மனதில் வளர்க்கும்.

குழந்தைகள் ஒரு முன்மாதிரியைப் பின் பற்றும் பழக்கம் உள்ளவர்கள். இதனால் பெற்றோர் எப்போதும் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

பொறுமையாய் உங்கள் கணவரிடம் காணப் படும் தவறுகளைத் திருத்த முயற்சி செய்யுங்கள்.

கணவன் மனைவி ஆகியோரிடையே கருத்து வேறுபாடு வருவது சாதாரண விஷயம்தான். சண்டையோ, கருத்து வேறுபாடோ இல்லாமல் இருப்பது என்பது கற்பனையான விஷயம்தான். கருத்து வேறுபாடு, மனத்தாங்கல் இவை வந்தால் தனிமையில் பேசித் தீர்க்க வேண்டுமே தவிர பிள்ளைகள் முன்னிலையில் சண்டையிட்டு அடி தடி, ரகளை செய்யக்கூடாது. இது நீங்கள் உங்கள் பிள்ளை களுக்கு அமைத்துத் தரப்போகும் நல்ல வாழ்க்கைக்கான வலுவான அஸ்திவாரம்,

"பெண் குழந்தைகளைப் பேணி வளருங்கள். அவர்கள் உங்களை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றுவார்கள்" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

"எந்த மனிதன் ஓர் அநாதையைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு உணவும் பானமும் அளித்தானோ அந்த மனிதனுக்குத் திண்ணமாக அல்லாஹ் சுவனத்தை விதித்துவிட்டான். ஆனால் அவன் மன்னிக்க முடியாத பாவங்கள் எதையும் செய்திருக்கக் கூடாது. எந்த மனிதன் மூன்று பெண் குழந்தைகள் அல்லது மூன்று சகோதரிகள் இருந்து, அவர்களைப் பராமரித்து, வளர்த்து, அவர்களுக்குக் கல்வியும் ஒழுக்கப் பயிற்சியும் அளித்து, அவர்களைத் தன்னிறைவு உடையவர்களாய் அல்லாஹ் ஆக்கிவிடும் வரை, அவர்களுடன் இரக்கத்தோடு நடந்துகொண் டானோ அத்தகையவனுக்கு அல்லாஹ் சுவர்க் கத்தை விதித்துவிட்டான்" என்று அண்ணலார் கூறினார்கள். இதனைக் கேட்ட ஒருவர், "இரண்டே பெண் மக்கள் இருந்தாலுமா?" என்று வினவினார். "ஆம். இரண்டு பெண் மக்களைப் பராமரித்தாலும். இந்த நற்கூலி உண்டு" என்று அண்ணலார் பதிலளித்தார்கள்.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறு கின்றார்கள்: "ஒரே ஒரு பெண்ணைப் பராம ரித்து ஆளாக்கினாலும் இந்தக் கூலி கிடைக்குமா என்று மக்கள் வினவியிருந்தால் அப்போதும் அண்ணலார் இதே நற்செய்தியைத்தான் அளித் திருப்பார்கள்." - நபிமொழி நூல் - மிஷ்காத்



# குழந்தை வளர்ப்பு

# இந்த மூன்றையும் சாப்பிட்டால் எந்த நோயும் வராது!



மருத்துவர்
**கு.சிவராமன்**

**எப்போதாவதுதானே நாம் துரித உணவை (ஃபாஸ்ட் ஃபுட் எடுத்துக்கொள்கிறோம்; அது நம்மை என்ன செய்யப்போகிறது என்று நாம் நினைக்கிறோம். ஆனால், நம் முன்னால் உள்ள ஒவ்வோர் உணவையும் உற்றுப்பார்த்தோமானால், எவ்வளவு பெரிய இக்கட்டுக்குள் நாம் சிக்கிக் கொண்டிருக்கிறோம் என்று தெரியும்!**

முன்பெல்லாம் நம் மக்கள் காலையில் நீராகாரம் அருந்திவிட்டு உழைப்பதற்குப் புறப்பட்டுச்சென்றுள்ளனர். அல்லது பருவத்தை ஒட்டிய நோய்கள் என்ன வருகின்றனவோ அதற்கேற்ற ஒரு கசாயத்தைக் காலை பானமாகக் குடித்திருக்கிறார்கள். அதிக மழை அல்லது பனிக் காலத்தில் முசுமுசுக்கை கீரையையும் கரிசலாங்கண்ணியையும் மட்டுமே கசாயமாக வடித்து, அதைக் காலையில் குடித்துவிட்டுப் போகக்கூடிய பழக்கம் நம் தமிழ் மக்களுக்கு அதிகமாக உள்ளது. சித்த மருத்துவத்தின் நோயடங்கா விதிகளில் அதை மிகத் தெளிவாகக் குறிப்பிடுவார்கள், முசுமுசுக்கை ஒரு குடிநீர். முசுமுசுக்கை என்றால் இரு குரங்கின் கை என்று தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடப்படுவதுண்டு. மிக எளிதாகக் களைச்செடி என்று இன்றைக்கு பேசப்படக்கூடிய ஒரு துணைச்செடியாக இருக்கும் முசுமுசுக்கை கீரைதான், சளி, இருமல், மூக்கடைப்பு, தும்மல் போன்றவற்றை நீக்குவதற்காகக் குடிக்கப்பட்ட ஒரு பானம்.

உடலில் பித்தம், செரிமானக்கோளாறு, எதுக்களித்தல் போன்றவை இருந்தால் சுக்கு கசாயம் தயாரித்துக் குடித்திருக்கிறார்கள். தினமும் சாதாரணமாகச் சாப்பிடக்கூடிய பானமாகச் சுக்கு குடிநீர் இருந்திருக்கிறது. இஞ்சியையும் பானமாக்கிக் குடித்திருக்கிறார்கள். காலையில் இஞ்சி, மாலை கடுக்காய், மதியம் சுக்கு அருந்து என்று சொல்வார்கள். காலையில் இஞ்சிச் சாறு, மதியம் சுக்கு, இரவு கடுக்காய் என்று எடுத்துக் கொள்ளும் மனிதனுக்கு எந்த ஒரு நோயும் வராது என்று அனுபவ ரீதியாகச் சொல்லியிருக்கிறார்கள்.

காலையில் பெருக் கெடுத்திருக்கக்கூடிய பித்தத்தைத் தணிப்பதற்கு இஞ்சிச் சாறு அருந்தியிருக்கிறார்கள். மதியம் செரிமானத்தைச் சீராக்குவதற்கும், வாதத் தன்மையைச் சரிப்படுத்துவதற்கும் சுக்குப் பொடியைச் சாப்பிட்டிருக்கிறார்கள்.

மாலையில் ஜீரணம் நன்றாக இருக்க வேண்டும்; மறுநாள் மலம் எளிதாகக் கழிய வேண்டும்; உடலுக்குவன்மை தரக்கூடிய விஷயங்கள் வேண்டும் என்பதற்காக, ஆறு சுவையையும் கொண்ட கடுக்காய்ப் பொடி செய்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

நாம் எப்படி சுக்கு கசாயம் அருந்தினோமோ அதேபோலக் சீன மக்கள் அருந்திய மருத்துவம் பானம்தான் தேயிலைக் குடிநீர். இதன் மூலம் உடலுக்கு ஊட்டமும் உற்சாகமும் கிடைக்கிறது என்று உணர்ந்த ஆங்கிலேயர்கள், இதை அன்றாட பானமாக உலகெங்கும் மாற்றினார்கள். ஆனால் இன்றைக்கு அந்தத் தேயிலைக் குடிநீர் எப்படி இருக்கிறது?

ஜனவரி 2015-ல் சென்டர் ஃபார் சயின்ஸ் அண்ட் என்விரான்மென்ட் அமைப்பு இங்கே விதியோகத்தில் இருக்கும் பிரபலமான நிறவனங்களின் தேயிலையிலிருந்து சாதாரண தேநீர்க் கடைகளில் பயன்படுத்தப்படும் தேயிலைத் தூள்களையும் எடுத்து ஆராய்ச்சி செய்தது. அந்த ஆராய்ச்சியின் முடிவில் நாம் அருந்தும் ஒவ்வொரு கோப்பை தேநீரிலும் உலக நாடுகள் தடை செய்து வைத்திருக்கிற 13 வகையான நச்சு ரசாயனங்கள் கலந்திருக்கின்றன. அவையெல்லாம் பூச்சிக்கொல்லி என்ற பெயரில் உள்ளே

நுழைந்தவை என்று ஓர் அறிக்கையை வெளியிட்டனர்.

விளிம்பு நிலையில் இருக்கக்கூடிய சாதாரண ஏழைக் தொழிலாளி முதல் உயரத்தில் வீற்றி ருக்கும் வசதி படைத்தவர்கள் வரை தங்கள் களைப்பை நீக்குவதற்காக அருந்தக்கூடிய முதல் பானம் தேயிலை. அந்தத் தேயிலையில் இவ்வளவு பெரிய கொடூரம் நடக்கிறது. இந்த ஆராய்ச்சி முடிவு வந்தவுடன் பல பிரபலமான நிறுவனங் களும் நாங்கள் சரியான முறையிலேயே தயாரிக் கிறோம். சரியான முறையில் விளைவிக்கிறோம். அப்படி தடை செய்யப்பட்டவை எல்லாம் இதில் இல்லை என்று கண்டித்தன. உடனே தேயிலை களை ஆய்வு செய்த டாக்டர் சுனிதா நாராயணன் எங்களிடம் அத்தனை தேயிலைத் தூள்களின் பேட்ச் எண்களோடு ஆதாரம் இருக்கிறது. நாங்கள் எந்தெந்த நிறுவனங்களின் தேயிலையைச் சோதித்தோம் என்று தகவல் தேவைப்பட்டால் நாளையே அதன் பேட்ச் எண்களோடு நாளிதழில் வெளியிடத் தயார்" என்று அறிக்கை. வெளியிட்டார். உடனே அனைவரும் கப்சிப் என்று அமைதியாகிவிட்டனர்.

இவர்தான் பெப்சி, கோக் போன்றவற்றில் நிறைய பூச்சிக்கொல்லித் துணுக்குகள் உள்ளன என்று நிரூபித்தவர்.

இன்று பூச்சிக்கொல்லிகள் பற்றிய பயம் உருவாகியிருக்கிறது. நாம் வெண்டைக்காய், கத்தரிக்காய், அவரைக்காய் என்று எது வாங்கி னாலும் அதைக் கழுவி, துடைத்து, சிலர் உப்புத் தண்ணீரில் கழுவி, வென்னீரில் கழுவி, பிறகு துடைத்து, பிறகுதான் சமையலில் பயன்படுத்து கிறோம். நம்மில் யாரெல்லாம் தேயிலையை இப்படிச் சுத்தம் செய்கிறோம்? அப்படிச் செய்வதற்கான வாய்ப்பே கிடையாது.

கொஞ்சம் கொஞ்சமாக இம்மியளவில் தொடர்ந்து நம் உடலில் சேரும் அத்தனை ரசா யனங்களும் என்றைக்கு சிக்கலை ஏற்படுத்தும் என்று சொல்ல முடியாது. இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் அய்யா அவர்கள், 2000 ஆண்டு வாக்கிலேயே களைக்கொல்லிகளைப் பயன்படுத்தாதீர்கள்' என்று சொல்லி வந்தார்


இண்டர்நேஷனல் ஏஜென்சி ஃபார் கேன்சர் ரிசர்ச் (ARC) அமைப்பு உலகில் எந்தெந்தப் பொருட்கள் புற்றுநோயை உண்டாக்கும் என்று



வழக்கமாக பட்டியல் வெளியிடும். இப்போது பிளாஸ்டிக், டையாக்சின், பென்சீன் போன்ற வற்றால் புற்றுநோய் ஏற்படுகிறது என்று இந்த அமைப்பின் பட்டியலில் அறுதியிட்டுக் கூறப் பட்டுள்ளது. இந்த வேதிப்பொருள்கள் உணவு முதல் அன்றாடப் பயன்பாட்டுப் பொருள்கள் வரை பல்வேறு ரூபங்களில் நம் வாழ்க்கைக்குள் ஊடுருவியுள்ளன. ஆகவே, தேவை அதிக கவனம்!

- நன்றி முதுமை எனும் பூங்காற்று



# பூமான் நபியை நேசித்த கலீஃபா

நம்மில் நிறைய நபர்களிடத்தில் மஸ்ஜிதுல் அக்ஸா என்ற வார்த்தை நினைவுக் கூறப்பட்டால் சிந்தனைக்கு வருவது இந்த புகைப்படமாகத்தான் இருக்கும்.

ஆனால் இது மஸ்ஜிதுல் அக்ஸா அல்ல, மஸ்ஜிதும் அல்ல. இதன் பெயர் குப்பத்துஸ் ஸஹ்ரா (பாறை குவிமாடம்) என்று கூறுவார்கள்.

இதுபோல பல்வேறு குவிமாடங்கள் மஸ்ஜிதுல் அக்ஸா வளாகத்திற்குள் உள்ளது.

குப்பத்து மூஸா, குப்பத்து சுலைமான், குப்பத்து நஹ்விய்யா இவ்வாறு சுமார் 13 குவிமாடங்கள் உள்ளன.

இதில் விசேஷமானது குப்பத்துஸ் ஸஹ்ரா என்ற இந்தக் குவிமாடமே.

ஏனென்றால் நபி (ஸல்) அவர்கள் மிஃராஜ் பயணத்தை துவங்கிய இடம் இந்த இடம் தான். துவங்கப்பட்ட இந்த இடமே கட்டிடத் திற்குள் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்த குப்பத்துஸ் ஸஹ்ரா இன்றைக்கு நாம் பார்க்கும் அற்புதமான கட்டிடமாக உருமாறியது உமைய்யாக்களின் ஆட்சியில் தான் குறிப்பாக கலீஃபா அப்துல் மலிக் இப்னு மர்வான் (ரஹ்) அவர்களது ஆட்சியில் தான். வளர்ச்சிக்கும் செழிப்பிற்கும் பெயர் போன காலமது.

இந்தக் காலக்கட்டத்தில் மஸ்ஜிதுல் அக்ஸாவும் அதன் வளாகத்தில் உள்ள அனைத்து புனித கட்டிடங்களும் அருமை யான முறையில் புணரமைக்கப்பட்டது. அதிலும் குறிப்பாக நபி (ஸல்) அவர்களது விண்ணுலக பயணத்தை துவங்கிய புனித குப்பத்துஸ் ஸஹ்ரா மிகவும் பிரம்மாண்டமாக கட்டியெழுப்ப பிரபல பொறியாளர்களிடம் ஆலோசித்து அழகிய கலைநயத்தோடு கட்டப்பட்டது.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் இந்த பிரம்மாண்ட கட்டிடத்திற்காக கலீஃபா அவர்கள் வளம் மிகுந்த எகிப்து நாட்டின் ஏழு வருட வரிப் பணத்தை வக்பு செய்தார்கள்.

கலீஃபா அவர்கள் இவ்வளவு பெரிய பங்களிப்பை இதற்கு ஆற்றியதற்கு நபிகளார் மேல் கொண்டிருந்த பாசம் முதன்மைக் காரணமாக இருந்தாலும் மற்றுமொரு முக்கிய காரணமும் உண்டு.


கி.பி 326 இல் ஜெருசலம் நகரம் முழுமை யான கிறிஸ்துவ நகரமாக மாற்றப்பட்டு திருக்கல்லறை தேவாலயம் (Church of the Holy Sepulchre) என்ற மிகப்பெரிய தேவாலயம் கட்டிப்பட்டது.

அந்தப் பகுதியிலேயே இது தான் பெரிய கட்டிடமாக இருந்ததின் காரணத்தால் தங்களை அறியாமலே இதற்கு ஒருப் புனிதுத்துவம் முஸ்லிம்களது உள்ளங்களில் உருவாகிவிட்டது.

இதனை தகர்ப்பதற்கே கலீஃபா அவர்கள் குப்பத்துஸஹ்ராவை பிரம்மாண்டமாக கட்டி யெழுப்பும் முடிவுக்கு வந்தார்.

மூலம்: அல்ஜசீரா
தமிழில்: மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி

ஆங்கிலம் : JOHN FEFFER
தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




# அண்மை கால உலக நடப்புகளைக் முன்வைத்து ஓர் ஆய்வு...

**இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்புப் பிரச்சாரம் எப்படியெல்லாம் உலகெங்கும் கட்டவிழ்த்துவிடப் படுகின்றது என்பதை விளக்கி வருகின்றார் ஜான் பெஃப்பர்.**

இஸ்லாம் மீண்டும் உலகத் தலைமையைப் பெற்றிடக் கூடாது. அது தன் விசாலமான வளமான வாழ்க்கை வழிகாட்டுதல்களை உலக மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிடக் கூடாது. அப்படி ஏதும் நடந்துவிட்டால், உலக மக்கள் அனைவரும் அல்லது பெரும்பாலானோர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வார்கள். என்ன விலை தந்தாகிலும் இது நடந்துவிடாமல் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்பது மேலே நாடுகளின் தீர்க்கமான முடிவு.

இந்த முடிவைச் செயல்படுத்திட உலக நாடுகள் குறிப்பாக நேட்டோ (NATO) நாடுகள் நிற்கின்றன. நீண்டகால திட்டங்களை வகுத்துச் செயல்படு கின்றார்கள். பயங்கர பண பலத்தோடும் செயல் படுத்தப்பட்ட இந்த "இஸ்லாமோஃபோபியோ" என்ற வெறுப்புப் பிரச்சாரத்தில் ஊடகங்கள் துணை நிற்கின்றன. அவற்றிற்கு சன்மானங்கள் அளவின்றி அள்ளித் தரப்படுகின்றன.

பள்ளிப் பாடங்களிலும் பல்கலைக் கழகங் களிலும் கற்றுக் கொடுக்கப்படும் பாடத் திட்டங் களில் இஸ்லாத்திற்கெதிராக வெறுப்பை வளர்க்கும் கட்டுக் கதைகள் நிரம்பவே கற்பிக்கப்படுகின்றன.

பள்ளிகளில் மொழிவளம் பெருக கற்றுத் தரப்படும் செய்யுள்களிலும் அதுபோன்ற பாக் களிலும் இஸ்லாத்திற்கெதிரான இந்த வெறுப்புப் பிரச்சாரத்தின் வேர்கள் ஊன்றப்பட்டன.

திரைப்படங்களில் முஸ்லிம்களை கொடூரங் கொண்ட "வில்லன்"களாகக் காட்டினார்கள்.

இப்படி அடுக்கடுக்கான முயற்சிகளே அதிக செலவில் இடைவிடாமல் மேற்கொண்டார்கள்.

உலக மக்கள் முஸ்லிம்களை பேய்களென்றும் பிசாசுகள் என்றும் நினைக்க வேண்டும் என்பது இவர்களின் எண்ணம்.

தங்கள் முயற்சிகள் வெற்றிகளை மட்டுந்தான் தரும். அவற்றில் நாம் திளைத்திடலாம் என அவர்கள் பூரித்துக் கிடந்தபோது, அத்தனை யையும் தவிடு பொடியாக்கிடும் நிகழ்வு ஒன்று முஸ்லிம் உலகில் நிகழ்ந்தது அது.

**கிலாபத் மீண்டும் வந்தது**

முஸ்லிம்கள் நீண்டகாலமாக இழந்து நின்ற

கிலாபத் மீண்டும் நிலைபெற்றது. இதன்வழி இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை அல்லாஹ் அழைத்துக் கொண்டபின் ஏறத்தாழ 800 ஆண்டுகள் கழித்து அவர்களின் முன்னறிவிப்பு ஒன்று நடப்பில் வந்தது. அது 1453ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டி நோபிள் வெற்றிக் கொள்ளப்பட்டது. கிலாபத் நிலை நாட்டப் பெற்றது.

அன்றுவரை-இஸ்லாத்தின்மீதும் முஸ்லிம்கள் மீதும் - வெறுப்பை வளர்த்தவர்கள், தங்கள் திட்டங்கள் படுதோல்வியடைந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்கள். இஸ்லாத்திற்கெதிரான வெறுப்புப் பிரச்சாரத்தின் ஒரு கட்டத்தில் 1095 முதல் 1147 வரை நடந்த சிலுவைப் போர்களை மையப்படுத்தித்தான் தங்களது வெறுப்புப் பிரச்சாரத்தை கட்டமைத்தார்கள்.

அங்கிங்கெனாதபடி எங்கும் பரப்பினார்கள். இதில் சிலுவையை அணிந்து வந்தவர்கள் செய்த அத்தனை அநியாயங்களையும் முஸ்லிம்கள் செய்ததாகத் திரித்து வரலாற்றைப் புரட்டி னார்கள். அதனால் கண்ட பலன், கான்ஸ் டாண்டிநோபிள், இஸ்தான்புல் என்றானது தான். இந்த நிகழ்வு ஒரு கட்டத்தில் இஸ்லாமோ ஃபோபியாவை நிலை குலைந்திடச் செய்தது.

இருந்தாலும் இந்த வெறுப்பின் வியாபாரிகள் விரக்தியை வித்தாரமான விளக்கங்களால் பூசி மொழுவினார்கள். அவர்களின் வெறி அதிகமானதே அல்லாமல் சற்றும் குறைந்திட வில்லை. முஸ்லிம்கள், ஆட்சிச் செய்து கொண்டி ருந்த உலகின் இதர பகுதியை நோக்கிப் பாய்ந்தார்கள், படை நடத்தினார்கள்.

இந்த முறை அவர்களின் சிலுவைப் போர்கள், ஆயுதங்களைக் கொண்டு நடத்தப்படவில்லை. வியாபாரம், காலனி ஆதிக்கம் என்ற போர்வை களில் பவனி வந்தது. (இந்த வரலாற்றை "தேசப் பிரிவினைக்கு யார் காரணம் என்ற நூலில் விரிவாகத் தந்துள்ளோம். வாசகர்கள் அதனை வாங்கிப் படிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்)

**புதிய யுக்திகள்**

சிலுவைப் போர்களில் பெற்ற தொடர் தோல்விகள், அடுத்து கான்ஸ்டாண்டி நோபிளில் பெற்ற தோல்வி அவர்களை ஓர் முடிவை நோக்கி இட்டுச் சென்றன. அது, இனி நமது ஆயுதங்கள் முஸ்லிம்களிடம் எடுபடாது என்பதே!

ஆகவே தங்களிடமிருக்கும் மொத்தப் பணத் தையும், மனித ஆற்றல்களையும், பயன்படுத்தி இஸ்லாமோபோஃபியாவை வளர்த்தார்கள்.

பத்திரிகை உலகம் - "Print Media - காட்சி ஊடகங்கள், Visual Media, சினிமாக்கள், திரைப் படங்கள் - Cenemas, நாவல்கள் - புதினங்கள் - Novels, Text Books, பாட நூல்கள். ஆராய்ச்சி மாணவர்களின் ஆராய்ச்சிகளின் மையப் பொருட்கள் (Subject Matter of Reseach)" என எத்தனையோ வழிகளில் இஸ்லாத்தின்மேல் வெறுப்பை வளர்க்கும் உபாயங்களைக் கண்டெடுத்தார்கள். இதில் விலைபோக தயாராக இருந்த எல்லா முஸ்லிம்களையும் பயன்படுத்திக் கொண்டார்கள். அத்தனையும் அவர்களின் வெறி யைத் தணிக்கவில்லை. காரணம் அவர்கள் எடுத்த முயற்சிகளெல்லாம் முடிந்து தோல்வியில்தாம்.

மக்கள் இஸ்லாமோபோஃபியாவில் சொல்லப்பட்ட தகவல்களுக்கு நேர் எதிரான வற்றைத்தான் முஸ்லிம்களின் யதார்த்த வாழ்வில் சந்தித்தார்கள். அதனால் இந்த வெறுப்பின் வித்த கர்களை நம்பிடவில்லை. இதனால் வெறுப்பின் வியாபாரிகளுக்கு பெரும் நஷ்டம் மட்டுமல்ல, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகமானது. இஸ்லாத்தின் பக்கம் மக்களின் கவனம் அதிகமாகத் திரும்பியது. இஸ்லாம் வேகமாக பரவியது.

எந்த அளவுக்கு, இஸ்லாம் வேகமாகப் பரவியது என்றால், உலகில் ஜனத்தொகை எவ்வளவு வேகமாக வளருகின்றதோ அதைவிட அதிகமாக இஸ்லாம் வளர்கின்றது - என்கின்றார். ஆய்வாளர் ரம்ஸ் பரோடி (Editor, Palestine Charoncle)

இதனால், தங்கள் வழிமுறையை மாற்றி னார்கள். உலகெங்கும் தீவிரவாதச் செயல்களைத் தங்கள் உளவுத்துறையை ஏவி செய்தார்கள். முஸ்லிம்கள் மேல் பழியைப் போட்டார்கள். 9/11 என்ற இரட்டைக் கோபுரங்களைத் தாக்கினார்கள், தகர்த்தார்கள். உள்ளிருப்பு வேலை மூலம் பழியை ஆப்கானிஸ்தான் மீது போட் டார்கள். ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தார்கள், மலையும் வளமும் கொண்ட பூமியை பிண மலைகளாக ஆக்கினார்கள். நித்தமும் ஒரு பொய், தவறாமல் வந்து கொண்டே இருந்தது.



என்றொரு ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்தார். (விரிவான தகவல்களுக்குப் படியுங்கள், வைகறை வெளிச்சம், செப்.2022) ஆனாலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல் தங்கள் கொலை பாதகங்களைத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றார்கள்.

இவர்களின் தீவிரவாதத்தை நியாயப்படுத்தி.

தங்கள் கைகளிலிருந்து ஊடகங்களைப் பயன்படுத்தி ஊதிப் பெரிதாக்கினார்கள். இவர் களுடைய சிறையிலே இருந்த, இனி மீண்டிட முடியாது என விரக்தி வயப்பட்ட முஸ்லிம் சிறைவாசிகளையும் "லாவகமாகப்" பயன்படுத் திக் கொண்டார்கள். அவர்களை ஆயுதங்களுடன் முஸ்லிம் நாடுகளுக்கு அனுப்பி வெறியாட்டம் ஆடச் செய்தார்கள். இதில் இவர்களின் கைக் கூலிகளும் கை கொடுத்தார்கள்.

**ஈராக் ஆக்கிரமிப்பு தோல்வி**

இந்நிலையில் ஈராக்-இல் இவர்கள் நடத்திய ஆக்கிரமிப்புத் தோல்வியடைந்தது. அங்கே அணி திரண்ட முஜாஹித்கள், அற வழியில் - அல்லாஹ்வின் வழியில் போர் செய்தார்கள். ஆனாலும் அந்தப் பூமியை சற்று நேரங்கூட அமைதியாக விட்டு வைக்கவில்லை. உடனேயே ISIL ஐ.எஸ்.ஐ.எல். அமைப்பைத் தோற்றுவித்து அந்த மொத்த பூமியையும் கபளீகரப்படுத்தினார்கள்.

இதில் கோடிக்கணக்கான டாலர்களைக் கொட்டினார்கள்.

பின்னர் தங்கள் ஆயுதங்களைத் தந்து தங்கள் எடுபிடிகளை ஐ.எஸ்.ஐ.எஸ். (ISIS) என்ற பெயரில் முஸ்லிம்களின் நிலப்பரப்பில் கபளீகரங்களை உருவாக்கினார்கள். முடிவில் டிரம்ப் - ஒபாமா தான் - அதாவது அமெரிக்காதான் ISIL-ஐ உருவாக்கினார் என பகிரங்கமாக அறிவித்தார்.

இதை அமெரிக்காவைச் சார்ந்த எழுத்தாளர் ஒருவர், நமது கண்களுக்குப் பின்னால், பெரிய பொய்கள் - அந்தப் பொய்களைக் கொண்டு பெரும் போர்கள், அதனால் குவியும் பிணங்கள்

**ஆப்கானிஸ்தானில் தோல்வி**

இவர்கள் தங்கள் இஸ்லாமோ ஃபோபியா பயணத்தில், முழு மூச்சாய் முன்னேறிக் கொண்டிருக்கும்போது, இன்னொரு அடி இடியாய் வீழ்ந்தது. அதுதான் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா பெற்ற படு தோல்வி. "எங்களை உயிரோடு விடுங்கள் - உயிர்ப் பிச்சை தாருங்கள்" என மண்டியிட்டது.

ஆகஸ்ட், 2021இல் உலக நிகழ்வுகள் இன்னொரு திருப்பத்தை சந்தித்தது.

தோற்று ஓடினாலும், அங்கும் தங்கள் ஏவாள் களை விட்டுவித்தான் வந்துள்ளார்கள். அவர்கள் இவர்களின் ஆணைக்கேற்ப சில பள்ளி வாசல் களிலும், மக்கள் குழுமுமிடங்களிலும் குண்டு களை வெடிக்கச்செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால், ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் அமைதி யாக தங்கள் நாட்டை இடிபாடுகளிலிருந்து கட்டியெழுப்பும் முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

**இதனிடையே இஸ்லாமிய ஆட்சி எங்கெல்லாம் தலை தூக்கியதோ அங்கெல் லாம் அதனை கட்டவிழ்த்து விட்டார்கள். ஆப்கானிஸ்தானைத் தவிர.**

**இவர்கள் தங்கள், வெறுப்புப் பிரச்சா ரத்தை விஷமப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து கொண்டேதானிருக்கின்றார்கள்.**

**அத்தனை வீழ்ச்சிக்குப் பின்னரும் தோல்விகளுக்குப் பின்னரும், எப்படி யெல்லாம் நாங்கள் இஸ்லாமோபோஃபியா என்ற வெறுப்புப் பிரச்சாரத்தைத் தொடர்ந் தோம் என்பதை விளக்குகின்றார் ஜான் பெஃப்பர் அதனை கேட்போம்!**

**- இன்ஷாஅல்லாஹ் அடுத்த இதழில்**

**- MGM**

நீதிமன்றத்தின்
தாழ்ச்சியும்
வீழ்ச்சியும்



# நீதிபதி நியமனத்தில் வெளிப்படைத்தன்மை தேவை நீதித்துறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறல்

உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி
மதன் பி லோகுர்

நீதிபதிகளுக்கு முதலில் பகுத்தறிவும், விஞ்ஞான சிந்தனையும் இருக்க வேண்டும். சமுதாய வளர்ச்சி பற்றிய அறிவும், சமூக அக்கரையும் இருக்க வேண்டும். மனித உரிமைகள் பற்றிய புரிதலும், அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் துணிவும் இருக்க வேண்டும். வழக்கின் உண்மைகளை கண்டறிந்து, சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து, நேர்மையான தீரப்பை எந்த பிரதிபலனும் எதிர்பார்க்காமல் மன சாட்டசிப்படி தீர்ப்பு எழுதும் திட மனம் வேண்டும். இத்தகைய பரிமாணங்களை கணக்கில் எடுக்கும் நீதிபதிகள் நியமன அமைப்பு இல்லை. தன் சொந்தக்காரன், தன்னோடு பணி புரிந்தவர், தனது சமூகத்தைச் சேர்ந்தவன் என்ற பல வகையான சுய விருப்புக்கள் அடிப்படையில் நீதிபதிகள் நியமன முறை இருப்பதால், சரியான தீர்ப்புக்களை இந்திய மக்கள் எதிர்பார்க்க முடியாது:

வெளிப்படைத்தன்மை தேவை என உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி மதன் பி லோகுர் வலியுறுத்தி உள்ளார்.

“**ஊழலை எதிர்கொள்வது:** வெளிப்படையான மற்றும் பொறுப்பான நிர்வாகத்தை நோக்கி” என்ற தலைப்பில் புவனேஸ்வரில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் “நீதித்துறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறல்” என்ற தலைப்பில் மதன் பி லோகுர் உரை யாற்றியுள்ளார். அந்த உரையில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:

உச்ச நீதிமன்றமும் உயர் நீதிமன்ற கொலீஜியமும் ஒரு நபரை பதவி உயர்வுக்கு பரிந்துரைப்பதற்கு கருத்தில் கொள்ளப்பட்ட காரணிகளை பகிரங்கமாக வெளியிடவேண்டும். எனது கருத்துப்படி, கொலீஜியத்தின் கூட்டங்கள், அது உயர் நீதிமன்றமோ அல்லது உச்சநீதி மன்றமோ, வெளிப்படையாக இருக்க வேண்டும்.

அதாவது விவாதங்கள் நடக்கும்போது கேமிரா இருக்க வேண்டும் என்பது போல் அல்ல,

ஆனால் என்ன விவாதங்கள் நடந்தது? என்பது குறித்து பதிவு செய்யப்பட வேண்டும். மேலும் சிலரை நியமனத்திற்குப் பரிந்துரைக்கும் போது, அந்த நியமனத்திற்காக கவனத்தில் கொள்ளப் பட்ட காரணிகள் என்ன? அதேபோல ஒருவரை நிராகரிக்கிறோம் என்றால், எதன் அடிப்படை யில் அவர் நிராகரிக்கப்பட்டார் என்பது வெளிப் படையாக இருக்க வேண்டும். 'இவர் நியமிக்கத் தகுதி யற்றவர்' என்று கூறும்போது, நீங்கள் யாரை நியமித்தீர்கள், ஏன் அவரை நியமிக்கிறீர்கள் என்ற கேள்விக்கு பதில் வேண்டும்.

நீதிபதிகளாக நியமிக்கப்படுபவர்களை உயர் நீதிமன்றம் பரிந்துரை செய்யும்போது, அந்த நபர்களின் பெயர்களை வெளியிடக்கூடாது என்பதற்கான காரணத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏனெனில் அது அனை வருக்கும் தெரியும். இன்று அல்லது நாளை அல்லது நாளை மறுநாள் எப்படியும் அது அவர் களுக்கு தெரிந்து விடும். இது ஒரு ரகசியம் அல்ல. வெளிப்படையான ரகசியம் என்று வேண்டு மானால் சொல்லலாம். மற்றபடி யார் பரிந்துரைக் கப்படுகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். முன்னாள் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் 'ஜஸ்டிஸ் பார் தி ஜட்ஜ்' என்ற தனது புத்தகத்தில், தனது நினைவுக் குறிப்புகளில் இருந்து, கொலீஜியம் தொடர்பான சில தகவல் களை வெளியிட்டார்,

ஒருபுறம், கொலீஜியத்தில் நடப்பது ரகசியம், அதைப் பற்றி நீங்கள் எதுவும் தெரிந்து கொள்ளக் கூடாது என்று கூறிவிட்டு, பின்னர் கொலீஜியத் தில் இதுதான் நடந்தது என்று முன்னாள் தலைமை நீதிபதி புத்தகம் எழுதுகிறார். இதில் ரகசியம் காக்கும் அம்சம் எங்கே போனது? கொலீஜியத்தின் நம்பிக்கைக்கு துரோகம் இழைத்து விட்டார் என்று அவரை அழைக் கலாமா? துரதிர்ஷ்டவசமாக இந்த வழக்கில் தலைமை நீதிபதி எழுதியது உண்மையில்லை என்பது ஆறுதலானதாகும். அதுபற்றி எனக்குத் தெரியும்.

ஏனென்றால் நான் அந்த நேரத்தில் கொலீஜி யத்தில் உறுப்பினராக இருந்தேன். அப்படியா னால், ரகசியம், ஒளிபுகாநிலை மற்றும் தகவல் அறியும் உரிமை ஆகியவற்றுக்கு இடையே நீங்கள் எங்கே கோடு போடுகிறீர்கள்? மாவட்ட நீதிபதிகள், உயர் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக் கப்பட வேண்டும். ஆனால், பெரும்பாலான மூத்த நீதிபதிகள் புறக்கணிக்கப்படுகிறார்கள். அவர்கள் ஏன் மாற்றப்படுகிறார்கள் என்பது தெரி யாது. ஆனால், அதனை அறிந்து கொள்ள அனைவருக்கும் உரிமை உண்டு. ஏனென்றால், நாம் சட்டத்தால் ஆளப்படுகிறோம் எனும்போது, நேர்மையான நபர்கள்தான் நியமிக்கப்படு கிறார்கள்; அவர்கள் சரியான தீர்ப்புகளை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட வேண் டும். உச்ச நீதிமன்றத்தில் பிறரைப் புறந்தள்ளி நீதிபதிகள் நியமிக்கப்படும்போதும் இதே நிலைதான் ஏற்படும்.

ஒரு குடிமகனாக, அதைத் தெரிந்து கொள்ள எங்களுக்கு உரிமை உண்டு என்று நினைக்கிறேன். எண் 15 நியமிக்கப்படும்போது, எண் 1 முதல் 14 வரை நிராகரிக்கப்பட்டது ஏன்?. எண் 16 முதல் 29 வரை பரிந்துரைக்கப்பட வில்லையே, ஏன்? இதெல்லாம் தகவல் அறியும் உரிமையின் ஒரு அம்சம்.

வழக்கில் தீர்ப்பு வழங்கப் போகும் நபர்கள் யார், மற்றவர்களை விட இவர்கள் ஏன் தேர்ந் தெடுக்கப்பட்டார்கள்? அவர்களை விட மூத்தவர்கள், அதிக அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பல சமயங்களில் சிறந்தவர்கள் யார் ஏன் தேர்ந்தெடுக்கப்படவில்லை? என்பது நமக்குத் தெரிய வேண்டும். குறிப்பாக ராஜஸ்தான் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற நீதிபதி அகில் குரேஷி ஏன் பதவி உயர்வு பெறவில்லை? ஏன் அவர், உச்ச நீதி மன்றத்தில் நியமிக்கப்படவில்லை? என்பதை ஒருவர் யூகிக்க முடியும். அதற்கான காரணமும் தெரியும்.

ஆனால், நாம் யூகிக்கும் காரணங்கள் அனைத் தும் வதந்திகளாகவே கருதப்படும். உண்மை என்ன, ஏன் அவர் கவனிக்கப் படவில்லை, ஏன் அவரை விட ஜூனியரை நியமித்தார்கள் என்பது திட்டவட்டமாக நமக்குத் தெரியாது. நீதியரசர் அகில் குரேஷி, சிறந்த நேர்மை, சிறந்த ஞானம் கொண்ட மனிதர். அப்படிப்பட்டவரிடம் இல்லாத சிறந்த அரிய விஷயம் அந்த ஜூனிய ரிடம் என்ன இருந்தது? - இதற்கு பதில் தேவைப் படுகிறது. நீதிபதிகள் தங்கள் நீதித்துறை முடிவு களால் விளைவுகளை சந்திக்க வேண்டிய பல

நிகழ்வுகள் உள்ளன என்றும் லோகுர் கூறினார்.

அதேபோல தில்லி உயர் நீதிமன்றத்தில் ஒரு நீதிபதி இருந்தார் (நீதிபதி எஸ். முரளிதர்) அவர் ஒரு தீர்ப்பை வழங்கினார். சொல்லப் போனால் தீர்ப்பு கூட இல்லை, அது ஒரு இடைக்கால உத்தரவு. (தில்லி வன்முறையில் 35 உயிர்கள் போயிருக்கும் நிலையில், அதற்கு காரண மானவர்கள் மீது எப்ஐஆர் பதிவு செய்யாதது ஏன்; இன்னும் எத்தனை உயிர்களை இழந்தால் எப்.ஐ.ஆர். பதிவு செய்வீர்கள்; நகரமே பற்றி எரிந்த பிறகுதான் எப்ஐஆர் பதிவு செய்யப் படுமா?" என்று காவல்துறையிடம் கேள்விகளை எழுப்பினார். வன்முறையைத் தூண்டிய பாஜக தலைவர்கள் கபில் மிஸ்ரா, அனுராக் தாக்குர், பர்வேஷ் வர்மா, அபே வர்மா உள்ளிட்டோர் மீது எப்.ஐ.ஆர். பதிவு செய்ய வேண்டும் என்றார்)

பிப்ரவரி 26 அன்று இரவு 11.30 மணிக்கு, அவசர அவசரமாக இடமாற்றம் செய்யப் பட்டார். கொலீஜியத்தின் இரண்டு நீதிபதிகள் சில பரிந்துரைகளில் தலைமை நீதிபதியுடன் மாறுபட்டு அதன்பின்னர் விரைவில் இட மாற்றம் செய்யப்பட்டனர். 'நான்தான் முடிவு செய்ய வேண்டும், பரிந்துரை செய்ய வேண்டியது நான்தான், எனவே உங்கள் ஆட்சேபனை களை எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்கவும், அதை உச்ச நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்புகிறேன்' என்று தலைமை நீதிபதி கூறினார். சிபாரிசுகள் அனுப்பப்படுவதற்கு முன், உடன்படாத இரண்டு நீதிபதிகளும் பணியிடமாற்றம் செய்யப்பட்ட னர். நீங்கள் செய்த பரிந்துரைகளில் எங்களுக்கு உடன்பாடு இல்லை என்று வாய்மொழியாகச் சொன்ன ஒருவர் உயர் நீதிமன்றத்திற்கு மாற்றப் பட்டார், மற்றவர் இடமாற்றம் செய்யப்பட்டார்.

எனவே, கொலீஜியம் எவ்வாறு செயல்படு கிறது; உண்மையில் கொலீஜியத்தில் என்ன நடக் கிறது, என்பதைக் காட்ட வீடியோ பதிவு தேவை யில்லை. ஆனால் அத்தியாவசிய காரணிகள் என்ன என்பதைக் காட்ட வேண்டும். ஒரு குறிப்பிட்ட நபர் ஏன் பரிந்துரைக்கப் பட்டார், கருத்தில் கொண்ட காரணிகள் என்ன, இது தகவல் அறியும் உரிமையின் மிக முக்கியமான அம்ச மாகும். இவ்வாறு முன்னாள் நீதிபதி மதன் பி லோகுர் கூறியுள்ளார். ●

# பெண்மைக்கு பாதுகாப்பு எங்கே?



பாலியல் வன்கொடுமைக்கு தீர்வுகாண, பெண்கள் பயிலும் கல்வி நிறுவனங்களில் பெண்கள் மட்டுமே ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட வேண்டும். தலைமை ஆசிரியரும் பெண்ணாகவே இருக்க வேண்டும். பெண் களுக்கு ஆண ஆசிரியர்களும், ஆண்களுக்கு பெண் பெண் ஆசிரியர்களும் நியமிக்கப்படுவதால்தான் விபரீதங்கள் நடந்துள்ளன என்பதை பாலியல் புள்ளி விபரங்கள் கூறுகின் றன. ஆணையும் பெண்ணையும் இறைவன் ஒரே மாதிரியாகப் படைக்கவில்லை. பெண்களின் பலகீனம் ஆண்களுக்கில்லை. அதுபோல் ஆண்களின் பலகீனம் பெண்களுக்கில்லை. இரு பாலரும் ஒரு பண்பில் உயர்ந்தும், ஒரு பண்பில் தாழ்ந்தும் தான் இருக்கிறார்கள். இது வல்ல இறைவனின் திருவிளையாடல் என்றுதான் சொல்ல வேண்டும்.

காலஞ்சென்ற தமிழக முதல்வர் ஜெயலலிதா கூட ஆண்களும் பெண்களுமே சேர்ந்து படிக்கக்கூடாது. ஆண்களுக்கு ஆண் ஆசிரியர்களும் பெண்களுக்கு பெண் ஆசிரியர்களும்தான் நியமிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை வெளிப்படுத்தி இருந்தார். அதுதான் பாலியல் வன்கொடுமைக்கு தீர்வு தரும். பெண்களுக்கு பாதுகாப்பைத் தரும். சமத்துவம் என்பதை இருபாலரும் சேர்ந்து உறவாடுவதில் காட்டக்கூடாது. இதனைத்தான் இஸ்லாம் வலியுறுத்துகிறது. இஸ்லாம் வலியுறுத்தும் எல்லாமே மனிதகுல மேம்பாட்டுக்கும், உயர்வுக்கும்தான் என்பதை உலகம் உணர்ந்து வருகிறது.

- M.A. **முஹம்மது ஹாஜி நிரவி**

# இறைவனுக்கு அஞ்சிய ஆட்சியாளர்

நாளுக்கு நாள் இந்திய பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துகொண்டே செல்கிறது. இதனால் பாமர மக்கள் மிகவும் பாதிப்படைகின்றனர். நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்த வேண்டிய அரசாங்கம் மக்கள் மீதே சுமையை அதிகப்படுத்துகிறது. வரியை அதிகப்படுத்தி அதன்மூலம் விலைவாசியை உயர்த்தி மேலும் மேலும் மக்களை துயரத்தில் ஆழ்த்துகிறது. "சர்வதேச அளவில் உணவுப் பற்றாக் குறை, ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளிட்டவற்றை ஆய்வு செய்து ஆண்டுதோறும் உலகப் பட்டினிக் குறியீடு வெளியிடப்பட்டு வருகிறது. அயர்லாந்தைச் சேர்ந்த கன்சர்ன் வேர்ல்ட் லைட் என்ற நிறுவனமும், ஜெர்மினியைச்சேர்ந்த வெல்ட் ஹங்கர் ஹில்ஃபே என்ற நிறுவனமும் இந்த பட்டியலை வெளியிட்டு வருகின்றன. அந்த வகையில் நடப்பாண்டுக்கான உலகப் பட்டினிக் குறியீட்டுப்பட்டியல் வெளியானது. 121 நாடுகள் அடங்கிய இப்பட்டியில்ல 107வது இடத்தை இந்தியா பிடித்திருக்கிறது. கடந்த ஆண்டில் 101வது இடத்தில் இந்தியா இருந்தது குறிப்பிடத் தக்கது.

ஆசிய நாடுகளில் போரால் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் மட்டுமே இந்தப்ப ட்டியலில் இந்தியாவுடன் ஒப்பிடுகையில் பின்தங்கி இருக்கிறது. இந்தப் பட்டியலில் சீனா, துருக்கி, குவைத் உள்ளிட்ட 17 நாடுகள் 5க்கும் கீழ் GHI ஸ்கோர் பெற்று பட்டினி இல்லாத நாடாக முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் தனது டிவிட்டர் பக்கத்தில் "மாண்புமிகு பிரதமர் மோடி எப்போது ஊட்டச் சத்துக் குறைபாடு, பட்டினி, ஸ்டன்டிங், வேஸ்டிங் போன்ற பிரச்சினைகளைக் கவனிப்பார்?

இந்தியாவில் 22.4 கோடி மக்கள் ஊட்டச் சத்து குறைபாடு கொண்டவர்களாகக் கருதப்படுகிறார்கள். 2014ல் பா.ஜ.க. ஆட்சி அமைந்ததில் இருந்தே தொடர்ந்து இந்தியா இந்தக் குறியீட்டில் பின்னடைவை சந்திப்பதாகவும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

தங்களுடைய வாழ்வாதாரங்களை பெற்றுக் கொள்ள மக்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும்போது அவர்கள் மீது வரி, விலைவாசி ஏற்றம் போன்றவற்றால் இந்த அரசாங்கம் மேலும் மக்களை சிரமத்திற்கு உள்ளாக்குகிறது. இவர்கள் கஷ்டங்களைப் பற்றி கண்டுகொள்வதில்லை. மாறாக, பணக்கார கார்ப்பரேட்களுக்கு வரிச் சலுகை அளிப்பது, சிலைகளுக்கு, கட்டிடங்களுக்கும் இன்னும் தன்னுடைய போக்குவரத்து வாகனங்களுக்கு பெரிய அளவில் பொருளாதாரத்தை செலவழிப்பதிலும் குறியாக உள்ளது.

இப்படிப்பட்ட ஆட்சியாளர்கள் தான் இறையச்சம் இல்லாத ஆட்சியாளர்களுக்கான உதாரணம்..

முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள்

"ஓர் ஆட்சித் தலைவர் அவருடைய பொறுப்பில் உள்ள குடிமக்கள் குறித்து கேள்வி கேட்கப்படுவார்" (புகாரி)

மறுமையில், தனது செயல் குறித்து இறைவனிடம் கேள்வி உள்ளது என்ற இறையச்சம் உடைய ஆட்சியாளரே மக்களுக்கான சிறந்த ஆட்சியாளர்.

ஒருமுறை கலீஃபா (இஸ்லாமியக் குடியரசுத் தலைவர்) உமர் (ரலி) அவர்கள் அங்காடியின் பக்கம் வந்து கொண்டிருந்தார்கள். அங்காடியில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதைக் கண்காணிக்க

அங்காடியில் வயோதிகர் ஒருவர் இருந்து கொண்டிருந்தார். காணப் பொறுக்கவில்லை ஆட்சியாளர் உமர் (ரலி) அவர்களுக்கு. ஓடிச் சென்று அந்த வயோதிகரின் கைகளைப் பிடித்தார்கள். அந்த வயோதிகரை யாரென்று விசாரித்தார்கள். அவர் நான் ஆட்சியின் எல்லைகளுக் குட்பட்ட குடிமகன் முஸ்லிம் இல்லை. ஆட்சியாளர் உமர் (ரலி) அவர்கள் அவர் இரந்துண்டு வாழ்வதன், பிச்சையெடுத்து உண்பதன் காரணத்தைக் கேட்டார்கள். அந்த வயோதிகர் இப்படிப் பதில் தந்தார்:

"என்னுள் தளர்ச்சி ஏற்பட்டுவிட்டது. என்னால் என் அடிப்படைத் தேவைகளுக்காகக் கூட உழைத்திட இயலவில்லை. இதனால்தான் நான் என் தேவைகளை நிறைவு செய்திட பிச்சை எடுத்துக் கொண்டிருக்கின்றேன்."

கண்ணீர் ஆட்சியாளரின் கண்களில்! பின்னர் அந்த இஸ்லாமியக் குடியரசின் தலைவர் இப்படிக் கூறினார்கள்:

"வயோதிகரே! நாங்கள் உங்களிடம் நியாயமாக நடந்து கொள்ளவில்லை. நீங்கள் வாலிபராக இருந்து உழைத்த நேரத்தில், உங்கள் உழைப்பிலிருந்து 'ஜிஸ்யாவை' (பாதுகாப்பு வரியை) வசூலித்த நாங்கள் நீங்கள் உழைக்க முடியாத நாள்களில் கவனிக்காமல் விட்டு விட்டோமே!"

தழுதழுத்தக் குரலில் இப்படித் தன்னைத் தானே கடிந்து கொண்ட ஆட்சியாளர் தான் பிடித்திருந்த வயோதிகரின் கைகள் பனிப்பதை உணர்ந்தார்கள். வயோதிகரை தன் இல்லம் நோக்கி அழைத்து வந்தார்கள். தனக்குத்தானே பரிகாரம் தேடிடும் அளவில் தன் கைகளா

லேயே உணவு தயாரித்து அந்த வயோதிகருக்குத் தந்தார்கள். அவர் உண்பதை அழகு பார்த்தார்கள்.

பின்னர் அந்த வயோதிகருக்கும் அவரைச் சார்ந்து வாழ்பவர்களுக்கும் தேவையானதைத் தந்து கொண்டே இருக்கும்படி பொதுநிதி கருவூலத் திற்கு (பைத்துல் மாலுக்கு) ஆணை பிறப்பித்தார்கள்.

ஒரு முறை ஒட்டகைக் கூட்டம் ஒன்று மதீனா வுக்கு வந்தது. அதில் பெண்களும் குழந்தைகளும் இருந்தார்கள். இதனைக் கலீஃபா உமர் (ரலி) அவர்கள் கண்டார்கள். தன் பக்கத்தில் வந்த அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களிடம், "நீங்கள் இந்தப் பரிவாரங்களுக்கு காவல் நிற்க இயலுமா?" என்று கேட்டார்கள். அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் உடனேயே ஒத்துக்கொண்டார்கள்.

இருவரும் (கலீஃபா உமர் (ரலி) அவர்களும், அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களும்) அந்தப் பரிவாரத்தின் பாதுகாப்பிற்கு நின்றார்கள். இருவரும் இரவு முழுவதும் காவல். பிந்திய இரவில், இருவரும் தஹஜ்ஜுத் தொழுகையை நிறைவேற்றி னார்கள்.

அங்கே குழந்தை ஒன்று அழும் குரல் கேட்டது. உமர் (ரலி) அவர்கள் அந்தக் கூட்டத்தை நெருங்கிச் சென்றார்கள். குழந்தையை அமைதிப்படுத்தித் தூங்க வைக்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.

சற்று நேரத்திற்கெல்லாம் மீண்டும் அழுகுரல், அதே குழந்தையிடமிருந்து

மீண்டும் உமர் (ரலி) அவர்கள் அந்தத் தாயிடம் ஓடி வந்தார்கள். அந்தத் தாயிடம், "அல்லாஹ்வைப் பயந்துகொள்ளுங்கள், உங்கள் குழந்தையை நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார்கள். பின்னர் அந்தப் பரிவாரத்தைப் பாதுகாப்பதற்குத் தான் நின்ற இடத்திற்கு வந்து விட்டார்கள்.

மீண்டும் அந்தக் குழந்தை அழுதது.

கலீஃபா உமர் (ரலி) அவர்கள் ஓடிச்சென்று அந்தத் தாயாரிடம் இதே எச்சரிக்கையை வைத்துவிட்டுத் திரும்பினார்கள்.

மீண்டும் அதே குழந்தை அழும் குரல் கேட்டது. இந்த முறை உமர் (ரலி) அவர்கள் அந்தத் தாயாரிடம் சென்றார்கள்

"உங்களுக்குக் கேடுதான். நீங்கள் நல்லதொரு தாய் இல்லை போலும். அந்தக் குழந்தை எப்படி இரவு முழுவதும் தூங்காமல் இருக்கின்றது?" என்று வினவினார்கள்.

இதற்கு அந்தக் குழந்தையின் தாய் பதில் சொன்னார். பதிலைச் சொன்னார். பதிலைச் சொன்ன அந்தத் தாய்க்கு, தான் ஓர் பெரிய நிலப் பரப்பை ஆண்டு கொண்டிருக்கும் கலீஃபாவிடம் பேசுகின்றோம். என்பது நிச்சயமாகத் தெரியாது.

"ஓ மனிதரே! அல்லாஹ்வின் ஆசி உங்கள் மேல் உண்டாகட்டும்! இரவில் பலமுறை வந்து நீங்கள் எனக்கு அறிவுரை வழங்கி) தொந்தரவு செய்து விட்டீர்கள். நான் இந்தக் குழந்தையைத் தாய்ப்பால் குடிப்பதிலிருந்து மறக்க வைக்க (நிறுத்த கட்டாயப் படுத்தி வருகின்றேன்). இந்தக் குழந்தையும் மாட்டேன் என்கின்றது" என்று கூறினார்கள்

இதனைக் கேட்ட உமர் (ரலி) அவர்கள், "ஏன் நம் குழந்தையைக் கட்டாயப்படுத்திப் (பால்குடி மறக்கும் பருவத்திற்கு முன்) பால் குடியை மறக்க வைக்கின் றீர்கள்! என்று கேட்டார்கள்.

"ஏனெனில் கலீஃபா உமர் (ரலி) அவர்கள் பால் (நிறுத்தப்பட்ட குழந்தைகளுக்குத்தான் (பைத்துல் மால் என்ற) பொது நிதிக் கருவூலத்திலிருந்து உதவி வழங்குகுகின்றார்கள் எனப் பதில் சொன்னாள் அந்தத் தாய்!

தன்னை யாரென்று காட்டிக் கொள்ளாமலே உமர் (ரலி) அவர்கள் அந்தத் தாயிடம், "உங்கள் குழந்தைக்கு வயதென்ன?" எனக் கேட்டார்கள்.

அந்தத் தாய் "அந்தக் குழந்தை பிறந்து சில மாதங்களே ஆகின்றன" எனப் பதில் சொன்னாள்.

இதற்கு உமர் (ரலி) அவர்கள் இப்படிப் பதில் சொன்னார்கள்: "குழந்தையைப் பால்குடி மறக்க வைப்பதில் அவசரம் வேண்டாம்" எனக் கூறினார்கள்.

பின்னர் உமர் (ரலி) அவர்கள் காலைத் தொழுகையை (ஃபஜ்ர் தொழுகையை) முன்னின்று நடத்தினார்கள். தொழுகையில் அவர்கள் அழுது விட்டார்கள். பொங்கிவந்த கண்ணீரால் திருக்குர் ஆன் ஓதுவதில் அவர்களின் நா தழுதழுத்து விட்டது. இதனால் குரல் வெளியே வரவில்லை.

தொழுகையின் முடிவில் இப்படி குறிப்பிட் டார்கள்: "உமர் அழிந்தான். அவன் நம்பிக்கையாளர் களின் குழந்தைகளைக் கொன்று விட்டான்."

அத்தோடு தன் ஆட்சிக்குட்பட்ட எல்லாப் பகுதிகளிலும் பின்வரும் அறிவிப்பைச் செய்யும்படி ஆணை பிறப்பித்தார்கள்.

"குழந்தைகளுக்கு, அரசின் உதவியைப் பெறுவதை மனதிற் கொண்டு எந்தத் தாயும் குழந்தையைக் கட்டாயப்படுத்திப் பால்குடி மறக்க வைக்கக் கூடாது. இப்பொழுதிலிருந்து பால்குடி நிறுத்திய குழந்தை களுக்கும், நிறுத்தாத குழந்தைகளுக்கும் அரசின் உதவி உண்டு ."

இதன்மிகு நிகழ்ச்சியொன்றை வரலாறு இன்று வரை சந்தித்த தேயில்லை. அந்த உத்தமர் உமர் (ரலி) அவர்கள் அன்றெல்லாம் அந்தப் பரிவாரத்திற்குக் காவல் நின்றார்கள். அந்தப் பரிவாரம் (மனிதர்களும், ஒட்டகைகளும் உட்பட நன்றாக ஓய்வெடுத்தது. ஆனால் அந்த ஆட்சியாளர் அவர்களோ தூங்காமல் காவல் நின்றார்கள். இப்படிக் காவல் நின்ற அந்த உத்தமர் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாமிய சாம்ராஜ் யத்தின் ஆட்சியாளர், ஈரான், ரோம் போன்ற பேரரசு களையெல்லாம் விஞ்சி, விரிந்து நின்ற ஓர் எல்லையை ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள்.

இத்தனையும் இருந்தாலும் அவர்கள் ஒரு சாதாரண காவலாளியின் பொறுப்பை நிறைவேற்று வதில் எந்தத் தயக்கத்தையும் காட்டிடவில்லை. இத்தகையதொரு பண்பாட்டை, நாகரிகத்தை, பண்பட்ட மனநிலையை வரலாறு சந்தித்ததேயில்லை, இஸ்லாமிய ஆட்சியில் அல்லாமல்.

தாய் செய்த வயல் வேலைக்கு கூலி கேட்கச் சென்ற தாழ்த்தப்பட்ட சமூக சிறுவனை அடித்து காலணியை நக்க வைத்த கொடூரம்!

உத்தரப்பிரதேச மாநிலம் ரேப ரேலியில் சிறுவன் ஒருவனை சில உயர் ஜாதியினர் தங்களின் காலணியை நக்கி சுத்தப்படுத்த, அடித்துப் பணியவைத்து அதனை காணொலியாக எடுத்து சமூக வலைதளத்தில் வெளியிட்டனர்.

இதனைத் தொடர்ந்து இந்த கொடூரச்செயலைச் செய்ததற்காக 7 பேரை காவல் துறையினர் கைது செய்துள் ளனர்.



உத்தரப்பிரதேச மாநிலம் ரேபரேலியில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் தாக்கப்பட்டு, உயர் ஜாதியினர் அணிந்திருந்த காலணியை நக்க வைத்த நிகழ்வு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சமூக வலைதளங்களில் 2 நிமிட 30 வினாடிகள் கொண்ட காணொலியில் பாதிக்கப்பட்ட சிறுவன் தரையில் அமர்ந்து காதுகளில் கை வைத்து, இருசக்கர வாகனத்தில் உட்கார்ந்திருப்பவரின் காலணி மற்றும் கால்களை நக்குகிறார். அங்கிருப்பவர்களில் சிலர் அவனது முதுகில் மிதிக்கின்றனர். கம்பால் அடிக்கின்றனர். அதில், ''என்ன துணிச்சல் இருந்தால் எங்களிடம் கூலி கேட்டு வருவாய், இனிமேல் எங்களிடம் கூலி கேட்டு வரக்கூடாது, இனிமேல் இப்படிச் செய்தால் கை காலை உடைத்துவிடுவோம்" என்று பேசுகிறார்

இந்த நிகழ்வு ஏப்ரல் 10 ஆம் தேதி நடந்ததாகவும், பாதிக்கப்பட்டவர் சிறுவனாக இருந்ததாலும். புகார் கொடுக்க அச்சப்பட்டதாலும் இதை வெளியில் தெரிவிக்கவில்லை. இந்த நிலையில் சிறுவனின் அம்மா சில சமூக ஆர்வலர்களின் உதவியுடன் காவல்துறையில் புகார் செய்தார், இதனை அடுத்து இந்த நிகழ்வில் தொடர்புடைய 7 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

9 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர், தந்தை இறந்த நிலையில், தாயுடன் வசித்து வருகிறார். பாதிக்கப்பட்ட மாணவரின் தாய் உயர்ஜாதியினரின் வயல்களில் வேலை செய்து வந்தார். செய்த வேலைக்கு நீண்ட நாட்களாக கூலி கொடுக்கவில்லை. இந்த நிலையில் அவரது தாயாருக்கு உடல் நிலை சரியில்லாததால் செலவுக்கு பணம் தேவைப்பட தனது தாய்க்கு கொடுக்க வேண்டிய கூலியைக் கேட்க அந்த சிறுவன் சென்றதாகவும், இதனால் கோபமடைந்த உயர் ஜாதியினர் காலணியை நாவால் நக்க வற்புறுத்தியதாகவும் தெரிகிறது.

ஆனால், இந்த வழக்கில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் இந்த விவரங்கள் குறிப்பிடப்படவில்லை. - நன்றி விடுதலை

# வட இந்தியாவில் தொடரும் ஜாதிய வன்கொடுமைகள்

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002